புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஏப்ரல் 03, 2014 | புரட்சி 13 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00

## ✦ ‘இந்துத்துவ சக்தி’களை எப்போதுமே எதிர்த்து வரும் சி.பி.அய். – சி.பி.எம். – இஸ்லாமிய கட்சிகள் – ‘விடுதலை சிறுத்தை’களை ஆதரிக்க வாக்காளர்களுக்கு ‘திராவிடர் விடுதலைக் கழகம்’ வேண்டுகோள்

## ✦ ஜாதி வெறியின் குறியீட்டு அடையாளமாக தர்மபுரியில் பா.ம.க. வேட்பாளரை தோற்கடிப்பீர்!

# கழக செயலவையின் முடிவுகள்





*மயிலாடுதுறையில் மார்ச் 29, 2014 இல் கூடிய கழக செயலவையில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கழகத்தின் நிலைப்பாடு குறித்து விவாதித்து கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.*

### தேர்தல் நிலைப்பாடு

ஆர்.எஸ்.எஸ் பரிவாரங்களும் அதன் அரசியல் முகமான பா.ஜ.க.வும், இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் பெரும் தொழில் நிறுவனங்களின் பின்பலத்தோடு நாடாளுமன்ற தேர்தல் களத்தில் களமிறங்கியுள்ளன. பல்வேறு மொழி பேசும் தேசிய இனங்களையும், பல்வேறு பண்பாடுகளையும் கொண்ட நாட்டில் “ஒரே நாடு-ஒரே பண்பாடு” என்ற ஒற்றை அடையாளத்தைத் திணிப்பதே இவர்களின் இலட்சியம் என்பதை கடந்தகால வரலாறுகள் மெய்ப்பிக்கின்றன. தங்களின் பாசிச அடையாளத்தை மறைத்துக் கொண்டு ‘வளர்ச்சி’ என்ற பொய் முழக்கத்தோடு அதிகாரத்தைக் கைப்பற்ற நடக்கும் முயற்சியை முறியடிக்கும் கடமையும் பொறுப்பும் தமிழர்களுக்கு இருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். குறிப்பாக மதவெறி தலைதூக்கிடமால், சமூக நீதி, மதசார்பின்மைக்கான நெகிழ்ச்சியோடு, பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கிடும் பெரியாரின் தமிழ் மண்ணில் இத்தகைய சக்திகள் வளர்வதை முறியடிப்பதற்காக வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழர்கள் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அதன் அடிப்படையில் இந்துத்துவ சக்திகளை எதிர்ப்பதில் எப்போதும் உறுதியாக நிற்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, இந்திய சமூக ஜனநாயக கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய வேண்டும் என தமிழக வாக்காளப் பெருமக்களை திராவிடர் விடுதலைக் கழகம் அறைகூவி அழைக்கின்றது.

அண்மைக் காலமாக தமிழகத்தில் ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு, அரசியலுக்கு அணிதிரட்டும் ஆபத்துகள் தலைதூக்கி வருவதை எதிர்த்து திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து போராடி வருகிறது. தருமபுரியில் நடந்தேறிய வன்முறை வெறியாட்டமும், ஜாதிவெறிக்குப் பலியான இளவரசனின் கோர மரணமும் தமிழ்நாட்டையே உலுக்கியதை நாம் அறிவோம். அந்த தருமபுரியில், ஜாதி வெறியின் குறியீட்டு அடையாளமாக திகழும் பா.ம.க வேட்பாளராக களமிறங்கியிருக்கும் மருத்துவர் அன்புமணியை தோற்கடித்து ஜாதி வெறியூட்டலை தமிழகம் அனுமதிக்காது என்பதை உணர்த்த வேண்டுமாய் தருமபுரி நாடாளுமன்ற வாக்காளப் பெருமக்களை திராவிடர் விடுதலைக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

புதுச்சேரி மாநிலத்தில் கள நிலவரங்களையும் சிறப்புச் சூழல்களையும் கருத்தில் கொண்டு, தங்கள் தேர்தல் நிலைப்பாட்டை வகுத்துக் கொள்ள புதுச்சேரி மாநிலக் கழகத்திற்கு இச்செயலவை அனுமதி அளிக்கிறது.

### மோடிக்கு எதிராக நூல் வெளியீடு

பா.ஜ.கவின் பிரதம வேட்பாளாராக முன்னிறுத்தப்படும் நரேந்திர மோடி, அதில் வெற்றி பெறுவாரேயானால் நாடு எதிர்நோக்க வேண்டியுள்ள ஆபத்துகளை விளக்கி திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து நடத்தி வரும் பரப்புரைகளை மேலும் பரவலாக முன்னெடுக்கவும், அதன் ஒரு பகுதியாக மோடி - இந்துத்துவ பொய்க் கூற்றுகளை மறுக்கும் விளக்க நூல் ஒன்றைத் தயாரித்து மக்களிடம் பல்லாயிரக்கணக்கில் கொண்டு செல்லவும் இந்த செயலவை தீர்மானிக்கிறது.

### ஜோதிடக் கல்வி

அறிவியலால் மெய்ப்பிக்கப்படாத - மக்களின் வாழ்க்கையில் குழப்பங்களையும் மன உளைச்சல்களையும் விளைவிக்கும் போலி அறிவியலான (Pseudo-Science) ஜோதிடத்தை பல்கலைக் கழகங்களில் பாடமாக இணைத்திருப்பதை இரத்து செய்ய வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது. இதை நடைமுறைப்படுத்தி வரும் பல்கலைக்கழகங்கள் முன்னால் ஒத்த கருத்துள்ள அமைப்புகளை திரட்டி போராட்டம் நடத்திட இந்த செயலவை தீர்மானிக்கிறது.

### வடவர் ஆதிக்கம்

வருமான வரித்துறை, சுங்க வரித்துறை போன்ற தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசு அலுவலகங்களில் அண்மைக் காலமாக அனைத்து மட்டங்களிலும் முழுமையாக இந்தி பேசும் மாநிலங்களைச் சார்ந்தவர்களே குவிந்து வருகிறார்கள். அவர்களின் தாய் மொழியான இந்தியில் தேர்வெழுதக் கூடிய வாய்ப்பை பெற்றுள்ளதோடு, தேர்வு மையங்களிலும் அவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு பல்வேறு முறைகேடுகள் கையாளப்படும் செய்திகளும் கசிகின்றன. இந்த நிலையில் ஒவ்வொரு மாநிலத்தின் மத்திய அரசு அலுவலகங்களிலும் அந்தந்த மாநிலத்தைச் சார்ந்தோரையே தேர்ந்தெடுக்கும் நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமாய் மத்திய அரசை வலியுறுத்துகிறோம் தமிழக அரசியல் கட்சிகளும் இந்த கோரிக்கையின் நியாயத்தை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என இந்த செயலவை வலியுறுத்துகிறது.

### வன்கொடுமைத் தடுப்பு அவசரச் சட்டம்

1989 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் விடுபட்டிருந்த சில கூறுகளை உள்ளடக்கி புதிய வலிமையான ஒரு சட்டத்தை அவசர பிரகடனத்தின் வழியாக மத்திய அரசு அமுல்படுத்தியிருப்பதை இந்த செயலவை வரவேற்கிறது. கடந்த காலங்களைப் போல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் காகிதங்களோடு முடங்கிவிடாமல் அதை செம்மையாக அமுல்படுத்துவதற்கு, சமூக களட்தில் ஜாதி தீண்டாமைக்கு எதிராக செயல்படும் இயக்கங்கள் மற்றும் அரசுசாரா நிறுவனங்களின்

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# அய்.நா.வில் நிறைவேறிய அமெரிக்க தீர்மானம்

அய்.நா.வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை சர்வதேச தமிழர் அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும் வரவேற்றுள்ளன. மயிலாடுதுறையில் 29.3.2014 அன்று கூடிய திராவிடர் விடுதலைக் கழக செயலவை, இத் தீர்மானம் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைவிட மேலும் முன்னேற்றம் கண்டிருப்பதை சுட்டிக்காட்டி, வரவேற்றுள்ளது.

2012-2013 ஆண்டுகளில், அய்.நா. வலியுறுத்திய 'நம்பகத் தன்மையான விசாரணை'யை நடத்தும் தீர்மானத்தை ராஜபக்சே ஆட்சி முற்றிலும் புறந்தள்ளிய நிலையில் இப்போது அய்.நா. மனித உரிமை ஆணையரின் நேரடி கண்காணிப்பு வளையத்துக்குள் இலங்கை கொண்டு வரப்பட்டிருப்பது ஒரு முக்கிய திருப்பம். இதில் இந்தியா மேற்கொண்டுள்ள நிலைப்பாடு தமிழினத்துக்கு இழைத்த துரோகமாகும். மனித உரிமைக் குழுவில் இடம் பெற்றுள்ள 47 நாடுகளில் 23 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தும், கியூபா, ரஷ்யா, சீனா, வெனிசுலா, மாலத்தீவு, பாகிஸ்தான் உள்ளிட்ட 12 நாடுகள் எதிர்த்தும் வாக்களித்துள்ளன. ஓட்டெடுப்பில் பங்கேற்காமல் ஒதுங்கிய 12 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உண்மையில் இந்தியா நடுநிலை என்ற நாடகத்தை நடத்தினாலும் தீர்மானத்தை எதிர்க்கும் அணியில்தான் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை. அய்.நா.வின் மனித உரிமைக் குழுவில் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியாக உள்ள திலிப் சின்கா, கூட்டத்தில் வெளிப்படுத்திய கருத்துக்களே இதற்குச் சாட்சியமாகும்.

அய்.நா. உள்ளிட்ட எந்த ஒரு நாடோ அமைப்போ இலங்கையில் தலையிடக் கூடாது என்றும், இத்தகைய தலையீடுகள் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் ஆக்கபூர்வமான செயல்பாடுகளைக் குலைத்து விடும் என்றும் கூறியுள்ளதோடு, இலங்கை அரசு, போர் முடிவுக்கு வந்த பிறகு பல நல்ல செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது என்றும், அவர் பாராட்டு சான்றிதழை வழங்கியுள்ளார். இலங்கை அரசு தனக்குத் தானே நியமித்துக் கொண்ட "கற்ற பாடம்; இணக்கத்தை உருவாக்கும்" (எல்.எல்.ஆர்.சி.) ஆணையப் பரிந்துரைகள் அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான ஒரு வாயிற்கதவு என்றும் பெருமையுடன் கூறியிருக்கிறார். இந்தியாவின் இந்த முடிவை இலங்கை அதிபர் ராஜபக்சே மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளார். அந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த மீனவர்களையும் விடுதலை செய்துள்ளார். உடனே இந்தியாவின் அயல் உறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங், தமிழக மீனவர்களைக் காப்பாற்றவே இந்தியா இப்படி ஒரு நிலை எடுத்ததாக கடைந்தெடுத்த 'அரசியல்வாதி'யைப் போல் தமிழக மக்களின் 'காதில் பூ சுற்றும்' அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அய்.நா. தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்பே தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து தந்து வரும் அழுத்தத்தினால் இரு நாட்டு பிரதிநிதிகளிடையே பேச்சு வார்த்தை தொடங்கி மீனவர் விடுதலை படிப்படியாக நடந்து வருவதை மக்கள் அனைவரும் நன்றாகவே அறிவார்கள். தமிழகத்தில் அரசியல் கட்சிகளே வெவ்வேறான கருத்துகளை முன் வைத்து வருவதால்தான் இந்தியா இப்படி ஒரு நிலை எடுக்க வேண்டியிருப்பதாக தனது 'வழக்கறிஞர் வாதத் திறமை'யைப் பயன்படுத்தி மக்கள் சிந்திக்கவே தெரியாதவர்கள் என்ற ஆணவத்தில் ப. சிதம்பரம் பேசியிருக்கிறார். தேர்தலில் ஓட்டு வாங்கும் நேரத்தில் இப்படி நடந்து விட்டதே என்ற மனப்புழுக்கத்தில் அமைச்சர் ஜி.கே. வாசன் போன்றவர்கள், சொந்த கட்சி ஆட்சியின் 'துரோகத்தை' வெளிப்படையாக விமர்சனம் செய்து வருகின்றனர். தமிழகத்தில் 'கரை சேரும்' வாய்ப்புகள் இருந்த காலத்திலேயே துரோகத்தை வெளிப்படுத்த தயங்காத மத்திய ஆளும் காங்கிரஸ் ஆட்சி இப்போது 'அனாதையாக' தனித்துவிடப்பட்ட காலத்தில் துரோகத்தை வெளிப்படுத்திட தயங்கிடவா, போகிறது? இவர்களின் இந்த 'சப்பைக் கட்டு' சமாதானங்கள் எல்லாமே கலப்படமற்ற பொய் என்பதற்கு அய்.நா.வில் இந்திய பிரதிநிதி பேசிய பேச்சே உறுதியான சாட்சியமாகும்.

அமெரிக்க தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்பு அய்.நா. மனித உரிமை ஆணையத் தலைவர் தலையீட்டைக் கோரும் தீர்மானத்தின் 10 ஆவது பகுதியை முழுவதுமாக நீக்கிட வேண்டும் என்று பாகிஸ்தான், ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர, அதன் மீதும் வாக்கெடுப்பு நடந்தது. அந்தத் தீர்மானமும் 23 நாடுகளால் தோற்கடிக்கப்பட்டது. இந்தியா நடுநிலை நாடகம் நடத்தியது. பாகிஸ்தான் தீர்மானத்தில் வலியுறுத்திய அதே குரலைத்தான் இந்தியாவும் சேர்ந்து ஒலிக்கிறது.

பிரித்தானியா தமிழ்ப் பேரவை (பி.டி.எஃப்), சர்வதேச விசாரணைக்காக லண்டனில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற கட்டிடத்திலேயே அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உலகத் தமிழர் அமைப்பின் பிரதிநிதிகளையும் அழைத்து சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலாக முன்னெடுத்ததைத் தொடர்ந்து, உலகத் தமிழர்களின் ஒருமித்த கோரிக்கையாக இது வடிவமெடுத்தது. இப்போது உலகத் தமிழர் மன்றம் (ஜி.டி.எஃப்) கனேடியன் தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டணியின் வடக்கு மாகாண கவுன்சில், ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் பலவும் தீர்மானத்தை வரவேற்றுள்ளன. ராஜபக்சே இத்தீர்மானத்தை நிராகரிப்பதாக அறிவித்துவிட்டார். இந்தநிலையில் மனித உரிமை ஆணையம், தனது கண்காணிப்புப் பணியை எந்தப் புள்ளியிலிருந்து தொடங்கப் போகிறது என்பதும் ஒத்துழைக்க மறுக்கும் சிங்கள பேரினவாத ஆட்சியை வழிக்குக் கொண்டுவர அழுத்தங்கள் தரக்கூடிய நடவடிக்கைகள் என்ன என்பதும் இப்போது விவாதத்துக்கும் முன்னெடுப்புக்கும் உள்ள பிரச்சினையாகும்.

ஆணையத்தின் முன் சாட்சியமளிக்க முன்வரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே இந்த விசாரணைக்கான முன் நிபந்தனையாக இருக்க முடியும். அதற்கு தமிழர் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள ராணுவம் அகற்றப்பட வேண்டியது அவசியமாகும். (இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங், மியான்மார் நகரில் நடந்த சர்வதேச மாநாட்டில் இலங்கை அதிபர் ராஜபக்சேயை சந்தித்தபோது தமிழர் பகுதியில் ராணுவக் குவிப்புக் குறித்து கவலை தெரிவித்ததாக செய்திகள் வந்தன. அது பற்றி எல்லாம் இந்தியா இந்த தீர்மானத்தின்போது கவலை எடுத்துக் கொண்டதாகவே தெரியவில்லை.) ஈழத் தமிழர் பிரச்சினை சர்வதேச அரங்கில் விவாதங்களுக்கு வந்துள்ள நிலையில் அய்ரோப்பிய நாடுகளுக்கும் இலங்கைக்கும் எழும் முரண்பாடுகளை கூர்மையடையச் செய்ய வேண்டிய முன் நகர்த்தல்களும் அவசியமாகிறது.

மற்றொரு ஆபத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினையை சர்வதேச அரசியல் தளத்திலிருந்து வெளியே இழுத்துப் போடும் சில முயற்சிகளும் நடப்பதாக நாம் அறிகிறோம். உண்மையில் இலங்கைப் பேரினவாத ஆட்சி இத்தகைய செயல்பாடுகள் தீவிரமடையுமானால் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விடலாம் என்று திட்டமிடுகிறது. அந்த நோக்கத்துடனேயே இலங்கையில் மீண்டும் விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்துக்கு தயாராகி வருகிறார்கள் என்ற கருத்துகளை கசியவிடத் தொடங்கியிருக்கிறது. "பயங்கரவாதம்" முற்றாக ஒழித்துவிடவில்லை என்ற செய்தியை சர்வதேசத்தின் முன் வைக்க இலங்கை திட்டமிடுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் தொடங்கிடும் முயற்சிகளில் ஈடுபட்டதாக பாலேந்திர ஜெயக்குமாரி, ரூக்கி பெர்ணான்டோ, அருட்தந்தை பிரவின் முகேஷ் ஆகியோரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இலங்கை கைது செய்தது. உலக நாடுகளின் எதிர்ப்பால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 'காணாமல் போனவர்களுக்காக' தொடர்ந்து அச்சமின்றி போராடி வருபவர் பாலேந்திரன் ஜெயகுமாரி. அவரையும் அவரது 13 வயது மகளையும் கைது செய்த 'பயங்காரவாத புலனாய்வுப் பிரிவு' அவர்களை சித்திரவதை செய்த கொடுமைகளை 'சர்வதேச மனித உரிமை அமைப்பு' அம்பலமாக்கியிருக்கிறது. அந்தப் பெண்ணின் 13 வயது மகள் இன்னும் ராணுவத்தின் பிடியிலேயே உள்ளார். இப்படி மீண்டும் 'புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடங்கப் போகிறது' என்று இலங்கை பேசத் தொடங்கியுள்ளதற்குப் பின்னால் உள்ள அரசியல் சதியை உலகத் தமிழர்கள் புரிந்து கொண்டு எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

'அமெரிக்க தீர்மானத்தை எதிர்க்கிறோம்; அமெரிக்க நாட்டை எப்படி நம்புவது?' என்ற குரல், சில முகாம்களிலிருந்து கேட்கிறது. நார்வே நாட்டிலிருந்து செயல்படும் 'தமிழ் நெட்' என்ற இணைய தளம், கடுமையாக எழுதுகிறது. அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்கும் பார்ப்பன ஊடகங்களோடு 'அசல் திராவிடர்' அமைப்புகளும் கைகோர்த்து நிற்பதாக கேலி கிண்டலோடு எழுதுவது மட்டுமல்ல; தீர்மானத்தை எதிர்ப்பதில் என்ன பயன் கிடைத்திடப் போகிறது? என்ற கேள்வி எழுப்புகிற இயக்கங்கள் மீது மிக இழிவான சொற்களைப் பயன்படுத்துகிறது. தீர்மானத்தின் மீது கருத்து தெரிவிக்கும் உரிமை 'தமிழ் நெட்'டுக்கு உண்டு. அதில் நாம் குறுக்கிடவில்லை. என்றாலும் மாற்றுக் கருத்து கொண்டோர் மீது எல்லை மீறும் 'நாகரிகமில்லாத' விமர்சனங்களை முன் வைப்பதை வன்மையாக கண்டிக்கிறோம். இதேபோன்று தமிழ்நாட்டிலும் ஒரு சில குழுக்கள் இளைஞர்களைக் குழப்பி விடுகிறார்கள். இவை அனைத்தும் ராஜபக்சே விரும்பும் அரசியலுக்கு வலு சேர்க்கும் முயற்சியாகவே நாம் கருத வேண்டியிருக்கிறது. தேவை ஏற்படும்போது ஈழத் தமிழர் உரிமைகளுக்கு எதிரான இந்த சதிகளை நாம் அம்பலப்படுத்தியே தீருவோம்.

அமெரிக்காவின் தீர்மானம் சர்வதேச கண்காணிப்பு வளையத்துக்குள் இலங்கையையும் கொண்டு வந்திருப்பது ஒரு சிறு முன்னேற்றம் தான். இன்னும் கடந்து செல்ல வேண்டிய தூரம் அதிகம். ஒருமித்த தெளிவான அரசியல் புரிதலோடு சர்வதேச அரங்கில் முன்னெடுக்கும் கடமையை தொடர்ச்சியாக மேற்கொள்ள உறுதியேற்று செயல்படுவோம்!

# செயலவை நிகழ்வுகள்

29.3.2014 அன்று மயிலாடுதுறையில் திராவிடர் விடுதலைக் கழக செயலவை - செயலவைத் தலைவர் திருப்பூர் சு.துரைசாமி தலைமையில் நடந்தது. நாகை மாவட்ட கழகத் தலைவர் மகாலிங்கம், 'கடவுள்-ஆத்மா' மறுப்புகளைக் கூற, தஞ்சை மண்டலச் செயலாளர் வழக்கறிஞர் இளையராசா வரவேற்றுப் பேசினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்க உரையாற்றினார். பொருளாளர் இரத்தினசாமி, கழகப் பரப்புரைக்காக 30 பேர் பயணிக்கக்கூடிய பயன்படுத்தப்பட்ட வாகனம், கழகத் தலைவர் ஒப்புதலுடன் வாங்கப்பட்டுள்ளதையும், அதற்குத் தேவையான நிதி குறித்தும் விளக்கினார். ஒவ்வொரு மாவட்டக் கழகமும் வாகனத்துக்கான நன்கொடையாக பொது மக்களிடமிருந்து திரட்டித்தரக்கூடிய நிதி மற்றும் குடும்ப ரீதியாக வழங்கக்கூடிய நிதியை நிர்ணயம் செய்யலாம் என்ற ஆலோசனையை முன் வைத்தார். அதன்படி செயலவை உறுப்பினர்கள் இயக்கம் மற்றும் குடும்ப சார்பில் வழங்கக் கூடிய நன்கொடையைத் தெரிவித்தனர்.

**உரையாற்றிய மாவட்ட பொறுப்பாளர்கள் :** சென்னை ஜான், காஞ்சிபுரம் தினேஷ், வேலூர் திலீபன், விழுப்புரம் அய்யனார், கிருட்டிணகிரி குமார், தர்மபுரி பரமசிவன், காவலாண்டியூர் ஈஸ்வரன், சேலம் மேற்கு சூரியகுமார், சேலம் கிழக்கு சக்திவேல், ஈரோடு நாத்திகஜோதி, ஈரோடு தெற்கு சண்முக பிரியன், நிவாஸ், செல்வராஜ், மோகன் தாஸ். கோவை புறநகர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், கோவை மாநகர் கிருட்டிணன், பொள்ளாச்சி விஜயராகவன், நிர்மல், திருப்பூர் சு. துரைசாமி, கரூர் மோகன்தாஸ், நாமக்கல் சாமிநாதன், பெரம்பூர் தாமோதரன், திருச்சி ஆரோக்யசாமி, மதுரை பாண்டியன், நெல்லை அன்பரசு, குமரி சேவியர், தூத்துக்குடி பொறிஞர் சி. அம்புரோசு, தஞ்சை பாரி, நாகை முகேஷ், திருவாரூர் காளிதாஸ், திண்டுக்கல் நல்லதம்பி, மேட்டூர் கோவிந்தராசு.

**மண்டல செயலாளர்கள் :** சேலம் சக்திவேல், தஞ்சை இளையராசா, மதுரை இராவணன்.

**தலைமைக் குழு உறுப்பினர்கள் :** தமிழ்நாடு மாணவர் கழகம் சிவக்குமார், தமிழ்நாடு அறிவியல் மன்றம் சிவகாமி சிவக்குமார், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக சார்பில் குமார், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் தீர்மானங்களை அறிவித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். மாவட்டத் தலைவர் மகாலிங்கம் நன்றி கூறினார்.

மயிலாடுதுறை கழகத் தோழர்கள் நிகழ்ச்சிக்கு சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர். அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், மயிலாடுதுறை கழகத் தோழர்களின் மிகச் சிறந்த ஏற்பாடுகளைப் பாராட்டிப் பேசினார்.

# அய்.நா.வின் பன்னாட்டு விசாரணை - சில தகவல்கள்

*‘பன்னாட்டு விசாரணை’ குறித்த பல்வேறு தகவல்களை எளிமையாக விளக்குகிறது, இக்கட்டுரை.*

ஒரு நாடு தனது நாட்டில் நடக்கும் பரவலான மனித உரிமை மீறல்களுக்கு நீதி வழங்க முடியாத நிலை ஏற்படும்போது, அங்கு பன்னாட்டு விசாரணைக்கு ஆணையிடும் கடமை சர்வதேச சமூகத்திற்கு உண்டு. எனவே நியூயார்க்கில் உள்ள அய்.நா. பாதுகாப்புச் சபை, ஜெனீவாவில் அய்.நா. மனித உரிமைப் பேரவை ஆகிய அமைப்புகள் சர்வதேச விசாரணைக்கு ஆணையிடுகின்றன.

இவையன்றி அய்.நா. பொதுச் செயலர் /அய்.நா. மனித உரிமை ஆணையர், பல்வேறு பன்னாட்டு அமைப்புகளும் இதுபோன்ற சர்வதேச விசாரணைக்கு ஆணையிடுகின்றனர். பாதுகாப்பு சபை மற்றும் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளே அதிக அதிகாரமிக்கதாகக் கருதப்படுகின்றன.

- பன்னாட்டு விசாரணை எவ்வாறு நடக்கும்? அய்.நா.வின் சார்பில் நடத்தப்படும் பன்னாட்டு விசாரணைக்கு என குறிப்பிட்ட ஒரு வடிவம் ஏதும் இல்லை. ஒரு நாட்டில் நடந்து முடிந்த ஒரு நிகழ்வு அல்லது தற்போதும் தொடரும் நிகழ்வுகள் குறித்த உண்மை நிலையை அறியும் நோக்கிலேயே பன்னாட்டு விசாரணை ஆணையங்கள் அமைக்கப்படுகின்றன.

  பன்னாட்டு சட்டங்களை மனித உரிமைச் சட்டங்கள் என்றும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்கள் என்றும் பிரிக்கின்றனர். இவற்றில் ஏதேனும் ஒன்று மீறப்பட்டது குறித்தோ, இரண்டும் மீறப்பட்டது குறித்தோ சர்வதேச விசாரணை ஆணையம் அமைக்கப்படுகிறது. இவ்வாறு விசாரணை ஆணையம் அமைப்பதற்கான தீர்மானங்களிலேயே அவற்றின் நோக்கமும் வரையறுக்கப்படுகிறது. பொதுவாக,

- உண்மையிலேயே சர்வதேச சட்டம் மீறப் பட்டதா?
- திட்டமிட்டும் பரவலாகவும் மனித மீறல்கள் நடத்தப்பட்டனவா?
- குற்ற நிகழ்வுகளில் அரசாங்கத்தின் பங்களிப்பு என்ன?
- குற்ற நிகழ்வுகளின் பின்னணி என்ன? சூழல் என்ன?

என பலவிதமான குற்றப் பின்னணிகளையும் கண்டு பிடிக்கும் நோக்கில் சர்வதேச விசாரணை நடத்தப்படு கிறது. குறிப்பாக பொறுப்புடைமையை நிலை நாட்டுதல். அதாவது குற்றச் செயல்களைக் கண் டறிந்து அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படு வதை உறுதி செய்வதே சர்வதேச விசாரணை ஆணையத்தின் முதன்மை நோக்கமாகும்.

மொத்தத்தில் பெரிய அளவில் நடைபெற்ற குற்றச் செயல்கள் குறித்து ‘நடந்தது நடந்தபடி’ அதிகாரப் பூர்வமாக ஆவணப்படுத்துவதுதான் சர்வதேச விசாரணையில் கிடைக்கும் முதன்மை பலன் ஆகும்.

- குற்றம் இழைக்கப்பட்ட நாடுகளில் ஆட்சி மாற்றம் நடந்த பின்னர் சர்வதேச விசாரணையை குற்றமிழைத்த நாடுகளின் அரசுகள் அனுமதிக்கப் படுகின்றன. மாறாக, குற்றத்தில் ஈடுபட்டவர்களே ஆட்சிக் கட்டிலிலும் அமர்ந் திருந்தால் அவை சர்வதேச விசாரணையை ஏற்படுத்துவதில்லை. அத்தகைய விசாரணை ஆணையத்தை நாட்டுக்குள் அனுமதிப்பதும் இல்லை.

ஆனாலும், நாட்டுக்குள் நுழைய முடியாது என்பதே விசாரணை நடத்த தடையாக இருப்ப தில்லை. ஒரு நாட்டில் நடக்கும் குற்றத்தை பார்த்த சாட்சிகளும், ஆதாரங்களும் வெளிநாடுகளில் பரவிக் கிடப்பதாலும், அறிவியல் நுட்பங்களாலும் எந்த ஒரு நாட்டிற்கு உள்ளேயும் நுழையாமல் அந்த நாட்டில் நடந்தக் குற்றங்களை மதிப்பிட முடியும். சிரியா, வடகொரியா போன்ற நாடுகளுக்காக அமைக்கப் பட்ட விசாரணை ஆணையங்கள் அந்த நாடுகளுக் குள் நுழையாமலேயே விசாரணை நடத்தியுள்ளன.

**சர்வதேச விசாரணையின் பலன் என்ன?**

- உள்ளது உள்ளபடி உண்மைகளை ஆவணப் படுத்தி வெளியுலகிற்கு சொல்வதுதான் சர்வதேச விசாரணை ஆணையத்தின் பணியாகும். அந்த உண்மையின் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அய்.நா. அவை மற்றும் உலக நாடுகள் முடிவு செய்ய வேண்டும்.

உண்மை இரண்டு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவதாக நீதி, அடுத்தது நல்லிணக்கம், குற்றங்கள் கண்டறியப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக் கப்படுவதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு முடிந்தவரை ஈடு செய்யப்படுவதும், குற்றமிழைத்தோர் அதனை உணர்ந்து வருந்துவதும் நீதியின் வடிவங்களாகும்.

குற்றத்தால் பாதிப்படைந்தோர் குற்றம் இழைத்தவர்களை மன்னிக்க முன்வருவதும், குற்றம் இழைத்தோர் தமது தவறுகளை ஒப்புக் கொண்டு வருந்துவதும் அதன் தொடர்ச்சியாக இரு தரப்புக்கும் பலனளிக்கும் எதிர்காலத்தைக் கட்டமைப்பதும் நல்லிணக்கத்தின் அடையாளமாகும்.

இந்த வழி முறைகளில் ‘நீதி’ மிக முதன்மையானது. நீதியை விட்டுவிட்டு நல்லிணக்கத்தை மட்டும் பேசுவது, நடந்த தவறுகளை மூடி மறைத்துவிட்டு எதிர்காலத்தை மட்டும் பேசுவோம் என்கிற ஆபத்தான பாதையில் அழைத்துச் சென்றுவிடும்.

எனவே, ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத வார்த்தைகளாக ‘உண்மை, நீதி, நல்லிணக்கம்’ என்கிற பட்டியலில் உண்மையே முதலில் வருகிறது. அந்த உண்மையைக் கண்டறிவதே சர்வதேச விசாரணை யின் பலனாகும். நீதி மற்றும் நல்லிணக்கம் நோக்கியப் பாதையில் இதுவே முதல்படி.

**விசாரணை ஆணையம்–தீர்ப்பாயம்**

விசாரணை ஆணையமும் தீர்ப்பாயமும் ஒன்றா? இல்லை. ‘பன்னாட்டு விசாரணை ஆணையம்’ என்பது இலங்கையில் 2008-2009 ஆம் ஆண்டுகளில் என்ன நடந்தது என்பதை அதிகாரப்பூர்வமாக வெளிக் கொண்டு வரும் முயற்சி. இதற்கு மாறாக ‘பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம்’ என்பது அந்தக் குற்றங்களை விசாரித்து குற்றவாளி குற்றவாளி களுக்குத் தீர்ப்பளிக்கும் நடைமுறை. இவை இரண்டும் ஒன்றல்ல.

பன்னாட்டு விசாரணை ஆணையம் தனி மனித குற்றங்களை நிரூபிக்க முயற்சிக்காது. மாறாக, அரசின் குற்றங்களை விசாரிக்கும். நடந்தது என்ன, அரசாங்கம் செய்த குற்றம் என்ன, அரசாங்கம் எவ்வாறு கடமை தவறியது என பரந்துபட்ட அளவில் விசாரணை நடத்தும். குற்றமிழைத்த தனிமனிதர்களின் தோராயமான பட்டியலையும் கண்டறிய முடியும். இந்த விசாரணை சில மாதங்களில் முடிக்கப்பட்டுவிடும். பன்னாட்டு விசாரணை ஆணைய விசாரணையின் போது குற்றங்கள் மற்றும் விதிமீறல்களை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் நம்பத் தகுந்த அளவில் இருந்தாலே போதும். விசாரணையின் முடிவில் யாருக்கும் தண்டனை வழங்கப்படாது. மாறாக, பரிந்துரைகள் அளிக்கப்படும்.

ஆனால், பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் என்பது அரசின் குற்றங்களை விசாரிக்காது. மாறாக, தனிமனித குற்றங்களை விசாரிக்கும். இந்த விசாரணை முடிய பல ஆண்டுகள் ஆகும். பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாய விசாரணையின்போது குற்றங்களை நிரூபிப் பதற்கான ஆதாரங்கள் சந்தேகத்துக்கு அப்பாற் பட்டதாக இருக்க வேண்டும். விசாரணையின் முடிவில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும்.

ஜெனீவாவில் முன் வைக்கப்படுவது ஆணையமா? தீர்ப்பாயமா? இலங்கை அரசின் குற்றங்களை முதன்மையாக விசாரிக்கும் வகையிலான ஒரு பன்னாட்டு விசாரணை ஆணையத்தை அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கையே ஜெனீவாவில் முன் வைக்கப்படுகிறது. ‘பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம்’ என்கிற கோரிக்கை அங்கு எழுப்பப்பட வில்லை. அப்படி ஒரு தீர்ப்பாயத்தை அமைக்கும் அதிகாரம் ஆய்நா. மனித உரிமை பேரவைக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த பன்னாட்டு சட்ட விதி மீறல்கள் குறித்து இலங்கை அரசு ஒரு நியாயமான, நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணை நடத்தி, குற்றமிழைத்தவர்களை அடையாளம் கண்டு, அவர்களை தண்டிக்க வேண்டும் என்பதே பன்னாட்டு சமூகத்தின் கோரிக்கை. ஆனால், அத்தகைய ஒரு நியாயமான நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொள்ள வாய்ப்பு இல்லை என்பதை சர்வதேச சமூகம் உணரத் தொடங்கியுள்ள நிலையில் அங்கு நடந்த அப்பட்டமான விதிமீறல்களை அடையாளம் காண்பதற்கான முன் முயற்சியாகவே மனித உரிமைப் பேரவையில் ‘பன்னாட்டு விசாரணை’ என்கிற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

**உண்மையை அறியும் முயற்சி**

எனவே ‘பன்னாட்டு விசாரணை ஆணையம்’ என்கிற கோரிக்கை உண்மையை அறிவதற்கான முயற்சி ஆகும். இது குற்றம் செய்தவர்களை உடனடியாகத் தண்டிப்பதற்கான முயற்சி அல்ல. பன்னாட்டு விசாரணை ஆணையத்தின் மூலம் இலங்கையில் பன்னாட்டு சட்டங்கள் மீறப்பட்டது உறுதி செய்யப்பட்டால் அதன் தொடர்ச்சியாக பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் அமைக்கப்படும் வாய்ப்பு உண்டு.

பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயத்தை யார் அமைப்பார்கள்? முதலில் இலங்கையில் பன்னாட்டு சட்டங்கள் மீறப்பட்டதை அய்.நா. மனித உரிமைப் பேரவையால் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு அடுத்ததாக அந்த சட்ட மீறல்களில் ஈடுபட்டோரைக் கண்டறிந்து, தண்டிக்கும் கடமையை இலங்கை அரசு மேற்கொள்ள வாய்ப்பு இல்லை என்று உலகம் நம்ப வேண்டும். அப்படிப்பட்ட சூழலில், குற்றவாளி களைக் கண்டறிந்து தண்டிக்கும் கடமை சர்வதேச சமூகத்துக்கு வரும்.

இவ்வாறு, ‘இலங்கையில் கொடும் குற்றங்கள் நடந்தன’ என்றும், அந்தக் குற்றங்களுக்கு ‘இலங்கை அரசின் மூலம் நீதி கிடைக்காது’ என்றும் தெளிவான முடிவுக்கு சர்வதேச சமூகம் வரும் நிலையில் பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயத்தை அய்.நா. பாதுகாப்பு அவை அமைக்கும்.

எனவே, பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் இடம் ஜெனீவா அல்ல. நியூயார்க்கில் அமைந்துள்ள அய்.நா. பாதுகாப்பு அவைதான் அதனை அமைக்கலாம். அல்லது, பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்துக்கும் இதற்கான விசாரணை நடத்த அய்.நா. பாதுகாப்பு அவை பரிந்துரைக்கலாம்.

நேரடியாக இப்போதே குற்றவியல் தீர்ப்பா யத்துக்கு பரிந்துரைக்கக் கூடாதா என்ற கேள்வி எழலாம். குற்றவியல் தீர்ப்பாயத்தை அமைக்க வேண்டும் என இப்போதைய நிலையிலேயே அய்.நா. மனித உரிமைப் பேரவை பரிந்துரை செய்யுமானால் அதனை அய்.நா. பாதுகாப்பு அவை ஏற்காது. ஏனெனில், சீனா, ரஷ்யா ஆகிய நாடுளின் ஆதரவு இல்லாமல் அய்.நா. பாதுகாப்பு அவையில் ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாது. அந்த நாடுகள் வீட்டோ அதிகாரத்துடன் உள்ளன. இலங்கை மீது பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் அமைக்கும் தீர்மானத்தை மிக எளிதாக தோற்கடித்து விடுவார்கள்.

**பன்னாட்டு விசாரணை ஆணையத்தால் என்ன பலன்?**

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, பன்னாட்டு விசாரணை ஆணையத்தின் மூலம் இலங்கையில் பன்னாட்டு சட்டங்கள் மீறப்பட்டது உறுதி செய்யப்பட்டால் அதன் தொடர்ச்சியாக பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் அமைக்கப்படும் வாய்ப்பு உண்டு. ஏனெனில், சர்வதேச சமூகத்தால் உண்மை ஏற்கப்பட்ட பின்னர், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் தொடர்ந்து இலங்கையைக் காப்பாற்ற முடியாது.

அதுமட்டுமல்லாமல், பன்னாட்டு விசாரணை ஆணையம் குற்றத்தை உறுதி செய்தாலே, இலங்கை யின் தலைவர்கள் குற்றம்சாட்டப்பட்டவர்களாக ஆகி விடுவார்கள். அவர்கள் உலகின் பிற நாடுகளுக்கு பயணம் செல்வதற்கான தடையும், பொருளாதாரத் தடையும் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

பன்னாட்டு சட்டங்கள் மீறப்பட்டதற்கான குற்றச்சாட்டுகளை பன்னாட்டு விசாரணை ஆணையம் உறுதி செய்தால் குற்றவாளிகளை உலகின் எந்த ஒரு நாட்டின் நீதிமன்றமும் விசாரிக்க முடியும். எனவே, ராஜபக்சேவும் அவரது கூட்டாளிகளும் உலகின் எந்த பகுதி நீதிமன்றத்தாலும் குற்றவாளி களாக தேடப்படும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே, அய்.நா. மனித உரிமைப் பேரவையால் ஒரு ‘பன்னாட்டு விசாரணை ஆணையம்’ அமைக்கப் பட்டால் அது ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கான முதல்படியாக அமையும்.

**நன்றி: பசுமைத் தாயகம்**

DATE OF PUBLICATION 02.04.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# இழிதொழிலுக்கு எதிரான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு

மனித மலத்தை எடுத்தல், சாக்கடைக் குழிக்குள் இறங்கி மூச்சுத் திணறி இறத்தல் என்று துப்புரவுத் தொழிலாளர்களான தாழ்த்தப்பட்டோர், இப்போதும் ஈடுபடுத்தப்படுவதற்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனத்தை தெரிவித்திருப்பதோடு அவர்கள் புனர்வாழ்வுக்கான திட்டங்களையும் முன் வைத்துள்ளது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி. சதாசிவம், நீதிபதிகள் ரஞ்சன் கோகி, என்.வி.இரமணா ஆகியோரடங்கிய அமர்வு 27.3.2014 அன்று பாராட்டத்தக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

1993 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆபத்தான வேலையில் உயிரிழந்த குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், இத்தகைய வேலைகளில் ஈடுபடுத்தும் ஒப்பந்தக்காரர்கள் குற்றத்துக்கு பொறுப்பு ஏற்கச் செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இந்தத் 'தொழிலில்' ஈடுபடுத்தப்படுவோரை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வுக்காக மாத ஊதியத்துடன் கூடிய வேறு தொழில் பயிற்சிகள், குடியிருப்பு மனைகள் அல்லது வீடுகள் வழங்குதல், குடும்பத்தில் ஒருவருக்கு மாற்றுத் தொழில் செய்வதற்கான சலுகைக் கடன் வழங்குதல் ஆகிய திட்டங்களை முன் வைத்துள்ளது உச்சநீதிமன்றம். இரயில்வே துறையில், இப்போதும் நடைமுறையில் உள்ள மனித மலத்தை மனிதர்களே எடுக்கும் முறைக்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடு வைத்து முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும் என்றும் கண்டிப்புடன் அறிவித்துள்ளது.

தீண்டாமை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் மேலும் வலிமையான பிரிவுகளை இணைத்து மார்ச் 4 ஆம் தேதி குடியரசுத் தலைவர் வழியாக மத்திய அரசு ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது. மனித மலத்தை மனிதர் எடுக்கச் செய்வதும், ஒரு வன்கொடுமை குற்றம்தான் என்றும், அத் தொழிலில் ஈடுபடுத்தப்படுவோருக்கு மறுவாழ்வுக்கான திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்த அவசர சட்டம் வலியுறுத்துகிறது. மார்ச் 29 ஆம் தேதி மயிலாடுதுறையில் கூடிய திராவிடர் விடுதலைக் கழக செயலவை, இந்த அவசர சட்டத்தை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பும், சாதகமாக வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கழக ஏட்டின் வாசகர் – வழங்கி வரும் தொடர் நன்கொடை

'புரட்சிப் பெரியார் முழக்க'த்தின் வாசகர் தருமபுரி பரமசிவன், இதழுக்கு வளர்ச்சி நிதியாக ரூ.500 அளித்துள்ளார். ஒவ்வொரு முறையும் தருமபுரி தோழர்களையோ, கழகப் பொறுப்பாளர்களையோ சந்திக்கும்போது எல்லாம் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ500 கொடுத்து வருவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இயக்கத்துக்கு மாதம் ஆயிரம் ரூபாய்

இயக்கத்துக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1000 நன்கொடை வழங்குவதாக பொள்ளாச்சி விஜயராகவன், கோவை கிருட்டிணன், மாரி ஆகியோர் மயிலாடுதுறை செயலவையில் கைதட்டலுக்கிடையே அறிவித்தனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் பங்கேற்கும் கண்காணிப்பு குழுக்களை மாவட்ட, மாநில அளவில் அமைத்திட முன் வருமாறு தமிழக அரசை இந்த செயலவை கேட்டுக் கொள்கிறது.

**பரப்புரை பயணம்**

ஒரே ஜாதிக்குள் நிகழும் அகமண முறை திருமணங்களால் பிறக்கும் குழந்தைகளின் உடல், உளவியல் பாதிப்புகளை அறிவியல் ரீதியாக விளக்கி கடந்த பிப்ரவரியில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பத்து நாட்கள் பரப்புரை பயணத்திற்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. அதே போன்ற அகமண எதிர்ப்பு அறிவியல் பரப்புரையை எதிர்வரும் ஜூன் மாதம் இரண்டு கட்டமாக நடத்துவது என இந்த செயலவை முடிவு செய்கிறது.

**அய்.நா. தீர்மானம்**

அய்.நா.வின் மனித உரிமை மன்றத்தில் இலங்கையில் இறுதிப் போரின்போது நடந்த மனிதஉரிமை மீறல்கள் குறித்து பன்னாட்டு விசாரணையைக் கோரி அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரிக்காமல், 'நடுநிலை' என்ற நாடகத்தை நடத்தி மீண்டும் இந்திய அரசு தமிழகத் தமிழர்களுக்கும், உலகத் தமிழினத்துக்கும் இழைத்துள்ள துரோகத்தை இந்த செயலவை வன்மையாக கண்டிக்கிறது;

இப்போது அய்.நா.வில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், முழுமையான வரவேற்புக்குரியதாக இல்லாவிட்டாலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொண்டுவந்த தீர்மானங்களை விட ஒரு முன்னேற்றமாக அய்.நா. வின் மனித உரிமை கண்காணிப்புக்குக் கீழே முதல் முறையாக விசாரணை கோரி கொண்டுவரப்பட்டுள்ளது வரவேற்கப்பட வேண்டியதாகும். ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் - ஆயுதப் போராட்டத்தைக் கடந்து, அய்.நா.வின் விவாதத்திற்கு வந்துவிட்ட நிலையில் இந்த அரசியல் நிலையை மேலும் வலுப்படுத்திட சர்வதேச தமிழனத்தோடு இணைந்து முன்னெடுப்பதே சரியான அணுகுமுறை என திராவிடர் விடுதலைக் கழகம் கருதுகிறது. இந்த நிலையில் அய்.நா. மற்றும் சர்வதேச தளத்திலிருந்து ஈழப்பிரச்சனையை வெளியில் கொண்டு வந்துவிட துடிக்கும் சிறீலங்கா இந்திய துரோக வலையை புரிந்து கொண்டு அதில் வீழ்ந்து விடக் கூடாது என்பதையும் இந்த செயலவை சுட்டிக்காட்டி எச்சரிக்க விரும்புகிறது.

# குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம் : ஓர் அறிவிப்பு

தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் சார்பாக கோடை விடுமுறைக் காலத்தில் கொடைக்கானலில் குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மே மாதம் 15 முதல் 19 வரை 5 நாள்கள் முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாமில் 8 வயது முதல் 16 வயது வரை உள்ள குழந்தைகள் பங்கேற்கலாம். 5 நாள்களுக்கு உணவு தங்குமிடம், சுற்றுலா உள்பட ரூ1000 மட்டும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பங்கேற்க விரும்புவோர் ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர் சிவகாமி - 9842448175
ஆசிரியர் ப. சிவக்குமார் - 9688856151
முனைவர் இராமகிருட்டிணன் - 9486161500

**தமிழ்நாடு அறிவியல் மன்றம்**

# ப. குமாரபாளையத்தில் 'மக்கள் சந்திப்பு' நன்கொடை

நாமக்கல் மாவட்டம் ப. குமாரபாளையத்தில் 'மக்கள் சந்திப்பு' இயக்கத்தில் தோழர் கேப்டன் அண்ணாதுரை, ஒருவரிடம் ரூ.10 நன்கொடை என்ற அடிப்படையில் ரூ.10,000 நிதி திரட்டியுள்ளார். கழகத் தோழர்கள் செல்வம், கி.ரு. அண்ணாதுரை, எம்.ஜி.ஆர் நகர் செல்வம், ப. மோகன், கெ. வெங்கட், மீ.தண்டபாணி, மு.சாமிநாதன் ஆகியோர், ஒவ்வொருவரிடமும் ரூ.10 என்ற அடிப்படையில் ரூ.10,500 நிதி திரட்டி மக்களை சந்தித்துள்ளனர். நிதி திரட்டலின் போது ஒரு சாமியார் ரூ.10 நன்கொடை வழங்கி, "எனக்குப் பிடித்த தலைவர் பெரியார். எப்போது சிறைக்குப் போக வேண்டுமானாலும் தயங்காத தலைவர்" என்று பெருமையுடன் கூறினார்.

**செய்தி: மு.சாமிநாதன்**

## மகிழ்ச்சியான செய்தி : கழகப் பரப்புரைக்கு வாகனம் வாங்கப்பட்டுள்ளது


திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து நடத்தி வரும் பரப்புரைப் பயணத்துக்காக 32 பேர் பயணம் செய்யக் கூடிய 'சுராஜ் மஸ்தா' என்ற 6 சக்கர வாகனம் வாங்கப்பட்டுள்ளது. இது புதிய வாகனமல்ல. ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த வாகனம் ஆகும். இந்த வாகனத்துக்காக முன் தொகை தரப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய தொகைக்காக நன்கொடை திரட்டும் முயற்சிகளை கழகப் பொருளாளர், பொறுப்பாளர்களோடு இணைந்து மேற் கொண்டுள்ளார்.

## வழக்கறிஞர் இரா. திருமூர்த்தி–அகத்தியா வாழ்க்கை இணை ஏற்பு விழா

கழகத்தின் வழக்குகளில் தொடர்ந்து வாதாடி வரும் உயர்நீதிமன்ற வழக்குரைஞர் திருமூர்த்தி, உயர்நீதிமன்ற வழக்குரைஞர் கு.அகத்தியா ஆகியோரின் ஜாதி மறுப்பு வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 9.4.2014 புதன் மாலை 6 மணியளவில் சென்னை அமைந்தகரை புல்லா அவென்யூ ஷெனாய் நகர், திரு.வி.க. பூங்கா அருகில் அமைந்துள்ள மாநகராட்சி சமுதாய நலக் கூடத்தில் நிகழவிருக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநிலச் செயலாளர் ஜி. இராமகிருட்டிணன் தலைமையேற்று நடத்தி வைக்கிறார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் சவுந்தரராசன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 3rd April 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஏப்ரல் 10, 2014 | புரட்சி 13 | முழக்கம் 13 | விலை: ரூ.3.00


## பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் பிரகடனம்

# இடஒதுக்கீட்டுக்கு ‘சமாதி’

வாக்குப் பதிவின் முதல் கட்டம் முடிந்த பிறகு, தேர்தல் அறிக்கையை ஒரு வழியாக வெளியிட்டு விட்டது பா.ஜ.க,. அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு அயோத்தியில் இராமன் கோயில் கட்டப் போவதாகவும், காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு உரிமைச் சட்டமான 370 ஆவது பிரிவை நீக்கப் போவதாகவும், சிறுபான்மையினரின் மதச் சட்டங்களை நீக்கி, ஒரே சிவில் சட்டம் கொண்டு வரவிருப்பதாகவும் கூறும் தேர்தல் அறிக்கை - இட ஒதுக்கீடு கொள்கையிலும் கைவைத்து விட்டது. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான ஜாதியடிப்படையிலான இடஒதுக்கீடு முறைக்கு ‘சமாதி’ கட்டிவிட்டு அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கக்கூடிய ஒரு முறையைக் கொண்டு வரப் போவதாக கூறுகிறது. இது குறித்து பா.ஜ.க.வின் பேச்சாளர் நிர்மலா சீத்தாராமன், இடஒதுக்கீடு முறைகளை மாற்றி அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியுள்ளார். மிகவும் பின்தங்கியுள்ள 100 மாவட்டங்களை அடையாளம் கண்டு ஏனைய மாவட்டங்களோடு தரம் உயர்த்தும் முறையைக் கொண்டு வருவதாக இடஒதுக்கீட்டு முறை இருக்கும் என்று அவர் கூறியிருக்கிறார். இடஒதுக்கீட்டுக்கான சமூகக் காரணிகளை முற்றிலும் புறந்தள்ளி விட்டதாகவே தெரிகிறது.

2009 ஆம் ஆண்டு பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு தொடரும்; அதே நேரத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கும் இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கை அதற்கு நேர்மாறாக - ‘பார்ப்பனர் குரலை’ முன் வைத்திருக்கிறது. அயோத்தியில் ராமன் கோயில் கட்டும் பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கும்போது, கோயிலைக் கட்டும் மதவெறி செயல்திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர், இந்தியாவுடன் இணைக்கப்பட்ட போது, அந்த பகுதி மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தி, மக்கள் கருத்தை அறிந்த பிறகே இந்தியாவுடன் இணைப்பது குறித்து இறுதி முடிவெடுக்கப்படும் என்று இந்திய அரசு உறுதி தந்தது. 370ஆவது சிறப்பு உரிமைச் சட்டப் பிரிவு, அவர்களின் ‘தனித்துவம்’ கருதியே அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இப்போது அந்த உரிமையையும் பறிக்கப் போவதாக தேர்தல் அறிக்கை கூறுகிறது. பா.ஜ.க. அதிகாரத்துக்கு வந்துவிடுமேயானால், நாட்டில் கலவரங்களும் குழப்பங்களும் தலைதூக்கி நிற்கும் என்பதற்கான எச்சரிக்கையாகவே இந்த தேர்தல் அறிக்கை வெளிவந்திருக்கிறது.

மோடியை பிரதமராக்க - பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்துள்ள கட்சிகள், இந்த பார்ப்பன இந்துத்துவா செயல் திட்டங்கள் குறித்தும் இடஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பான கொள்கைகள் குறித்தும் தங்கள் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும். பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கை எப்போதுமே ஆர்.எஸ்.எஸ். மதவாத கருத்துகளையே பிரதிபலித்து வருகிறது. 1998 ஆம் ஆண்டு அதன் தேர்தல் அறிக்கை “சனாதன தர்மம்தான் இந்திய தேசியத் தத்துவம்; அரசியலில் இந்துத்துவம் உருவாவது, சமுதாயத்தில் சில பிரிவினரை திருப்திப்படுத்தவும், அவர்களை வாக்கு வங்கிகளாக மாற்றி திருப்திப்படுத்தும் செயல்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும்” என்று கூறியதோடு இந்தியாவில் பன்முகத்தன்மை ஏதும் கிடையாது. “ஒரே நாடு; ஒரே மக்கள்; ஒரே தேசம்” என்று முழங்கியது.

‘இந்துத்துவ பார்ப்பன’ கொள்கைகளை இப்படி வெளிப்படையாக அறிவிக்காமல், ரகசியமாகவே செயல்படுத்தலாம் என்று பா.ஜ.க.வில் ஒரு அணி கூறுகிறது. முரளி மனோகர் ஜோஷி போன்ற கடும் போக்குக் கொண்ட பார்ப்பன தீவிரவாதிகள், வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பா.ஜ.க. தேர்தல் அறிக்கை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதற்கு காரணமே கட்சிக்குள் நடந்த இந்தப் போராட்டம் தான். நம்மைப் பொறுத்த வரையில் வெளிப்படையாக தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளும் பிரிவையே வரவேற்கப்படக் கூடியவர்களாக கருதுகிறோம்.

பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது; அபாயச் சங்கு ஊதப்பட்டுவிட்டது; தமிழ்நாட்டில் பா.ஜ.க.வும் அதன் கூட்டணி கட்சிகளும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு தமிழர்கள் வந்தாக வேண்டும்!

## கழக இணையதள செயல்பாட்டாளர்களின் கலந்துரையாடல்



6.4.2014 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சென்னை நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் எதிரிலுள்ள ‘பிரிட்ஜ் அகடாமி’ அரங்கில், திராவிடர் விடுதலைக் கழக இணையதள செயல்பாட்டாளர்களின் கலந்துரையாடல் மற்றும் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. கழக இணைய தள செயலாளர் அன்பு. தனசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அமைப்புச் செயலாளர் தி.தாமரைக் கண்ணன் உள்பட 50 தோழர்கள் கலந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழக அதிகாரபூர்வ இணையதளமான www.dvkperiyar.org செழுமைப்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. இணையதளங்களில் பெரியார் பற்றியும், பெரியார் இயக்கங்கள் பற்றியும் அவதூறு பரப்புவதை, எப்படி எதிர்கொள்வது என்றும் விளக்கமளிக்கப்பட்டது. இணையதளத்தில் பெரியார் முழக்கம், புகைப்படம், ஒலி, ஒளி, அறிக்கைகள், நிகழ்வுகள், மின்னூல்கள் முதலியவற்றை பதிவேற்றுவதற்கு தனித்தனியாக பொறுப்பாளர்கள் கீழ்கண்டவாறு நியமிக்கப்பட்டனர்.


‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழை இணையத்தில் பதிவேற்றும் பணி, கணியூர் தமிழ்ச் செல்வன், சூலூர் வீரமணி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. தாமரைக் கண்ணன் இதற்கான கண்காணிப்புப் பொறுப்பை ஏற்பார். தலைமைக் கழக அறிக்கைகளை பதிவேற்றும் பணி கழகத் தலைவர் கொளத்தூர் மணி மேற்பார்வையில் கோகுல கண்ணனுக்கும், வீடியோ, ஆடியோ படங்களைப் பதிவேற்றும் பொறுப்பு செல்லையா முத்துசாமிக்கும், ஊடகங்களில் வெளிவரும் கழகத் தொடர்பான செய்திகளைக் கவனித்து பதிவேற்றும் பணிக்கு அன்பு தனசேகரன், ஜஸ்டின் ராஜ் ஆகியோரும், ‘ஜாதி மறுப்புத் திருமண மய்யம்’ தொடர்பான பதிவேற்றலுக்கு அ.ப. சிவாவும், முகநூல் பணிகளை பரிமளராசன், மணிகண்டன் ஆகியோர் தாமரைக்கண்ணன் மேற்பார்வையிலும், தமிழ்நாடு மாணவர் கழக செயல்பாடுகளை ஆண்டிமடம் சிவக்குமாரும், தகவல் சேமிப்புப் பணிகளை கணியூர் தமிழ்ச் செல்வனும் பொறுப்பேற்று செயல்படுவார்கள். இது தவிர, நிலையான பணிகளான ‘குடிஅரசு’ தொகுப்புகளை பதிவேற்றுதலை விஜய்குமாரும், புரட்சிப் பெரியார் முழக்கம், கடந்தகால இதழ்களை உடுமலை மலரினியனும், மின்நூல்களை தபசி. குமரன், அருண்குமாரும், பொறுப்பாளர்களின் முகவரி பட்டியலை தபசி. குமரனும், உறுப்பினர் சுயவிவரப் பட்டியலை திண்டுக்கல் இராவணனும் இணைய தளங்களில் பொறுப்பேற்று செயல் படுவார்கள். விக்கி பீடியாவுக்கு கழகம் தொடர்பான அறிமுக விளக்கத்தை விடுதலை இராசேந்திரன் எழுதுவார்.

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்துக்கான இணையத்தில் கலை, இலக்கியம், திரைப்படம் தொடர்பான விமர்சன-ஆய்வு கட்டுரைகளை வெளியிட முடிவு செய்யப்பட்டது. அ.ப. சிவா, பாரதிவாசன், மலரினியன், மே.கா. கிட்டு, ஜஸ்டின் ராஜ், பரிமளராசன், மணிகண்டன், தமிழ்ச் செல்வன், செல்வக்குமார், சூலூர் வீரமணி, பிரபா. அழகர், இராவணன், தாமரைக்கண்ணன் ஆகியோர் இதற்கான கட்டுரைகளை தொடர்ந்து எழுதுவார்கள். கட்டுரைப் பிரிவு பதிவேற்றம் மற்றும் முகநூலுக்கு கொளத்தூர் குமார், வீடியோ ஆடியோ, புகைப்படங்களுக்கு செல்லையா முத்துசாமி, செய்திகள் அறிவிப்புகளுக்கு அ.ப.சிவா ஆகியோர் பொறுப்பு ஏற்பார்கள்.

### காவல்துறையின் இழிவான அறிவிப்பு: அரசியல் சட்டமும் மனு சாஸ்திரமும் ஒன்றுதானாம்!

மோடி எதிர்ப்பு பரப்புரைக்கு சென்னை மாவட்டக் கழக சார்பில் காவல்துறையிடம் அனுமதி கேட்கப்பட்டது. தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் பணிக்கான காவல் உதவி ஆணையாளர், இதற்கான அனுமதி வழங்கும் ஆணையில், கூட்டத்துக்கான அனுமதிக்கு நிபந்தனையாக, “மனு சாஸ்திர புத்தகம் மற்றும் சட்டப் புத்தகங்களை எரிக்கக் கூடாது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

“அரசியல் சட்டத்துக்கு சமமானது-மனு சாஸ்திரம்” என்று கூறுவது வன்மையான கண்டனத்துக்கு உரியது. சட்டத்தின் முன் அவைரும் சமம் என்று சட்டம் எழுதி வைத்துக் கொண்டு சமூகத்தில் ‘பிராமணன்’ மேலானவன், ‘சூத்திரன்’ இழிவானவன் என்று கூறும்



ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
5. மத, இன உணர்வுகளை புண்படும் வகையில் பேசக்கூடாது.
6. கூட்டத்தில் உருவ பொம்மைகள் கொண்டு வரவோ அல்லது எரிக்கவோ கூடாது.
7. மனுசாஸ்திர புத்தகங்கள் மற்றும் சட்ட புத்தகங்கள் எதனையும் எரிக்கக்கூடாது.
8. பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்விதத்திலும் இடையூறு இல்லாத வகையி[illegible] வேண்டும்.
9. கூட்டத்தில் தனிப்பட்ட நபர்களையோ, அவர்களது குடும்பத்தினரையோ தாக்கி பேசக்[illegible]

மனு சாஸ்திரத்தை சட்டத்துக்கு சமமானதாகக் கருதுகிறது, காவல்துறை. திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மனு சாஸ்திர எரிப்புப் போராட்டத்தின் தாக்கத்தை அரசின் இந்த ஆணையில் காண முடிகிறது. ஆனாலும், தேர்தல் ஆணைய கட்டுப்பாட்டில் இயங்கும் காவல்துறை இப்படி ஒரு நிபந்தனையை விதித்திருப்பது தமிழினத்தையே அவமதிப்பதாகும்.

## வினாக்கள்... விடைகள்...!

+ பா.ஜ.கவில் நமோ மோடி பஜனை பாடுவதை ஏற்க முடியாது. – **ஜஸ்வந்த் சிங்**

எவ்வளவு காலத்துக்குத்தான் ராம பஜனையே பாடிக் கொண்டிருப்பது? ஒரு மாற்றம் வேண்டாமா?

+ எம்.ஜி.ஆர்., கலைஞர், ஜெயலலிதாவை முதலமைச்சர்களாக்கியதே காங்கிரஸ் தான். – **தங்கபாலு**

காங்கிரஸ் முதல்வர் நாற்காலியில் உட்காரும் வாய்ப்புகள் வந்தபோதும்கூட காங்கிரஸ் அதை உதறிவிட்டு, இவர்களை முதல்வராக்கியதா சொல்லவர்றீங்க... அப்படித் தானே....

+ பா.ஜ.க. கூட்டணியை நடிகர் ரஜினி ஆதரிப்பதாக வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.
  – **பா.ஜ.க. தலைவர்கள் வற்புறுத்தல்**

ஆமாம்! ரஜினி ‘வாய்ஸ்’ கொடுத்தால்தான் மோடி அலை வீசுதுன்னு மக்களை நம்ப வைக்க முடியும்!

+ குஜராத்தில் மனிதமலத்தை எடுக்கும் தொழிலில் 13 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளார்கள்.
  – **கர்மோச்சி அந்தோலன் ஆய்வு மய்யம் தகவல்!**

சும்மா சொல்லக்கூடாது; மோடி எப்படி எல்லாம் வேலை வாய்ப்புகளை உருவாக்குறாரு, பாருங்க!

+ கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 3 மற்றும் 4 ஆவது பிரிவுகள் தொடங்க, ரஷ்யாவுடன் இந்தியா ஒப்பந்தம் போடலாம்; தேர்தல் ஆணையம் அனுமதி.
  – **செய்தி**

அப்படியே, இலங்கையில் ராஜபக்சே மீது போர்க் குற்ற விசாரணை நடத்துறதுக்கும், இந்தியா சார்பில் அனுமதி வழங்கிடுங்க.

+ விஜயகாந்த் தொகுதி பக்கமே போகவில்லை என்கிறார்கள். கருணாநிதியும், ஜெயலலிதாவும் தொகுதிக்குப் போனார்களா?
  – **பிரேமலதா கேள்வி**

சரி; எல்லோருமே தொகுதி பக்கம் போகும் தவறை செய்யவே இல்லைன்னு, ‘சத்தியமா’ ஒத்துக்கறோம். எதுக்கு பஞ்சாயத்து!

+ காங்கிரஸ் கை சின்னத்தில் நின்று தோற்றாலும் சரி, ஜெயித்தாலும் சரி, பெருமை தான்!
  – **அமைச்சர் வாசன்**

இதோ பாருப்பா; கட்சியை விட்டுட்டு சின்னத்துக்கு பெருமை சேர்க்க கிளம்பிட்டாரு!

+ தேர்தல் முடியும் வரை எந்த ஆளுநரும் வெளி மாநிலத்துக்குப் போகக் கூடாது.
  – **குடியரசுத் தலைவர் உத்தரவு**

‘மருத்துவ சான்றிதழ்’ தந்தால் அனுமதிப்பீர்களா?

# அரசியல் வழியாக - ‘சோதிட நம்பிக்கையாளர்கள்’ எழுப்பும் கேள்விகளுக்கு பதில்

*சோதிட நம்பிக்காயளர்கள் சோதிடமும் ஒரு அறிவியல் தான் என்று முன் வைக்கும் வாதங்களுக்கு அறிவியல் மறுப்பு.*

எம்.ஜே. அக்பர் எழுதிய நேருவின் வாழ்க்கை வரலாற்றில் ஓர் ஆச்சரியமான சம்பவம் குறிப்பிடப்படுகிறது. குல்சாரிலால் நந்தாவின் வற்புறுத்தலின்பேரில் ஜோஷி என்ற சோதிடரைச் சந்தித்தார் நேரு. 1950களின் இறுதியில் இந்தச் சந்திப்பு நடந்திருக்கலாம். நடக்கப் போகின்ற பலவற்றைப் பற்றி நேருவிடம் ஜோஷி சொன்னார். அவர் சொன்னவற்றில் முக்கியமானது நேருவின் மரண நாள். சோதிடர் சொன்ன நாள் 27 மே, 1954.

இந்தச் சம்பவத்திற்கு நேர்மாறாக இன்னொரு சம்பவத்தை நேருவின் அந்தரங்கச் செயலாளராக இருந்த மத்தாய் தனது நினைவுகளில் குறிப்பிடுகிறார். நேரு அவரிடம், “நான் 74 வயதுக்கு மேல் இருக்க மாட்டேன்” என்று சொல்லியிருக்கிறார். சோதிடர்கள் சொல்லியிருப்பார்கள் என்ற மத்தாய்க்கு நேரு அளித்த பதில்: “இல்லை. குடும்பத்தில் இருந்த ஆண்களின் வயதுகளின் சராசரியைக் கணக்கிட்டேன். சரியாக 74 வருடங்கள், 6 மாதங்கள், 13 நாட்கள் வருகின்றன.”

இந்தச் சம்பவங்கள் வாழ்க்கையின் புதிர்களை அவிழ்க்க மனிதன் செய்யும் முயற்சியின் பல பரிமாணங்களில் இரண்டைக் கோடிட்டுக் காட்டுகின்றன. நம்மில் பலருக்கு சோதிடம் துல்லியமாகப் பலித்த அனுபவங்கள் இருக்கலாம். என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர்கூட அவரது மனைவி மரணம் எய்தும் நாளை, மரணம் அடைவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சோதிடர் துல்லியமாகக் கணித்ததைப் பற்றி மிகுந்த வியப்போடு குறிப்பிட்டார். இதற்கு நேர்மாறாக இன்னொரு சம்பவத்தை என்னால் சொல்ல முடியும். என்னுடைய தாய்வழித் தாத்தா ஒரு சிறந்த சோதிடர் என்று குடும்பத்தில் சொல்லிக் கொள்வார்கள். எனது பெரியம்மாவை நன்றாக ஜாதகம் கணித்துக் கல்யாணம் செய்து வைத்தார். 20 வயதில் பெரியம்மா தன் கணவனை இழந்தார்.

இன்று இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், சோதிடத்தை நம்பாதவர்களைவிட நம்புகிறவர்கள்தான் மிக அதிகமாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன். குருப்பெயர்ச்சிப் புத்தகங்கள் இட்லி, வடையைவிட அதிகம் விற்பனையாகின்றன. செவ்வாய் தோஷம் என்று அவர்கள் ஜாதகம் சொல்வதால், பல அழகிய பெண்களும் வசீகரமான ஆண்களும் திருமணம் செய்து கொள்ள முடியாமல் காலம் தள்ளுகிறார்கள். சோதிடர்கள் பரிகாரம் உண்டு என்று உறுதியளித்தாலும் மரணத்துக்குப் பரிகாரம் உண்டு என்பதை மறுதரப்பினர் நம்பத் தயாராக இல்லை.

**ஐந்து கேள்விகள்:**

சோதிடத்தை நம்புங்கள் அல்லது நம்பாதீர்கள். அது மனம் சார்ந்தது. ஆனால், சோதிடம் அறிவியலின் ஓர் அங்கமா? பல சோதிடர்கள் ஆம் என்கிறார்கள். அதற்கு அவர்களில் பலர் ஐந்து காரணங்களைத் தருகிறார்கள் என்று புகழ் பெற்ற விஞ்ஞானி நர்லிகர் சொல்கிறார்.

1. வானவியலைப் போலவே சோதிடமும் கோள்களை ஆதாரமாகக் கொண்டது. வானவியல், அறிவியலின் அங்கமாக இருக்கும்போது சோதிடம் ஏன் இருக்கக் கூடாது?
2. சில சோதிடர்களின் கணிப்பு துல்லியமாக இருக்கிறது என்பது உலகறிந்த ஒன்று. எனவே, அவர்களது சோதிடத்தையாவது அறிவியல் என்று ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது.
3. வானிலை மற்றும் மருத்துவத் துறையை எடுத்துக் கொள்வோம். வானிலை அறிவிப்புகள் பொய்த்துப் போகின்றன. மருத்துவரின் சிகிச்சை பலனளிக்காமல் போகிறது. இவற்றை அறிவியலின் அங்கமாக எடுத்துக் கொள்ளும்போது, சோதிடத்தை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது?
4. சோதிடத்தைச் சரியாகப் படிக்காதவர்கள் சொல்வதுதான் பொய்த்துப் போகிறது. நன்றாகப் படித்தவர்கள் சொல்வது பொய்க்காது. அவர்கள் சொல்வதையாவது அறிவியல் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். போலிகளை வைத்துக் கொண்டு, இந்தத் துறையையே குறை சொல்ல முடியாது.
5. அறிவியலுக்குக் கொடி பிடிப்பவர்கள் சோதிடத்தைப் படிக்காமலும் சோதனைக்குள்ளாக்காமலும் அகந்தையோடு அதைப் புறந்தள்ளுகிறார்கள்.

**அறிவியல் என்றால் என்ன?**

அறிவியலைப் பொறுத்தவரையில் அதன் எந்த ஒரு முடிவும் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஒருவர் சோதனை செய்துஅடைந்த அதே முடிவை, அதே சோதனையைச் செய்த அனைவரும் அடைய வேண்டும். “எனக்குத் தான் சரியாக வரும். உங்களுக்கு வராது” என்று எந்த விஞ்ஞானியும் சொல்ல முடியாது. ராமர் பிள்ளையின் மூலிகை பெட்ரோல் பிசுபிசுத்துப் போனதன் முக்கியக் காரணம் இதுதான். அறிவியல் சோதனைகளும் கண்டறிதல்களும் புள்ளியியல் முறைப்படி விளக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட வேண்டும். இவ்வளவு பாதுகாப்புகள் இருந்தும் அறிவியல் நாள்தோறும் நுண்ணிய மாறுதல்களை அடைந்துகொண்டே இருக்கிறது. நியூட்டனின் விதிகள் ஐன்ஸ்டனின் சார்பியல் தத்துவத்தால் மாறுதல்களை அடைந்தன என்பது நாம் அறிந்ததே.

**இனி பதில்களுக்கு வருவோம்.**

1. அறிவியல் கடும் சோதனைகளுக்குத் தன்னை உட்படத்திக் கொண்டிருக்கிறது. அதனால் மாறுதல்களையும் அடைந்திருக்கிறது. உதாரணமாக, புளூட்டோ என்ற ‘முன்னாள்’ கோள், இன்று கோளாக அடையாளம் காணப்படுவது இல்லை. சோதிடம் இதே போன்று சோதனைகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ள முடியுமா? அதற்கென்று தனிப்பட்ட விதிகள் ஏதாவது இருக்கின்றனவா? கணிப்புகள் பொய்யானால் தத்துவம் பொய்யானது என்று ஏற்றுக் கொள்ளப்படுமா? இவற்றுக்கெல்லாம் பதில், ‘இல்லை’ என்றுதான் வரும்.
2. கார்ல் பாப்பர் என்ற அறிஞர் கூறியதுபோல் எந்த அறிவியல் கொள்கையும் ஒரே ஒரு தடவை உண்மையற்றது என்று நிரூபிக்கப்பட்டால், அந்தக் கொள்கையே உண்மையற்றதாக ஆகிவிடும். உதாரணமாக, நியூட்டனின் விதிகளின்படிதான் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ், நெல்லையிலிருந்து சென்னை எழும்பூருக்குக் குறித்த நேரத்தில் வந்தடைகிறது. ஒரே ஒரு நாள் அது எழும்பூருக்குப் பதிலாக திருவனந்தபுரம் சென்றால் விதிகள் பொய்த்துவிடும். மாறாக, சோதிடத்தில் பலிப்பதைவிட பொய்ப்பதுதான் அதிகம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி சொல்கிறார்கள். யார் சொல்வதை உண்மை என்று எடுத்துக் கொள்வது? சோதிடத்துக்கான பாடப் புத்தகங்களை எப்படித் தயாரிப்பது?
3. வானிலை அறிவிப்புகளிலும் மருத்துவத்திலும் பிழைகள் இல்லாமல் இல்லை. ஆனால், அவை அறிவியல் முறையை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் முடிவுகள் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. எனவே, இன்று ஏறத்தாழ அல்லது துல்லியமாக வானிலையைக்கணிக்க முடிகிறது. நோயின் தன்மையை அறிய முடிகிறது. சிகிச்சை முறைகள் சீர்படுத்தப்படுகின்றன. இதுபோன்று சோதிடத்தில் நடக்கிறதா?
4. உங்களில் யாருக்காவது சொன்னவைஅனைத்தும் பொய்க்காத சோதிடரைத் தெரியுமா? அல்லது சொன்னவை ஏன் பொய்த்தன என்பதை அறிவியல் முறைப்படி விளக்க முடியுமா?
5. சோதிடத்தை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகளின் நூல்கள் பல உள்ளன. இவற்றில் ஒன்றுகூட சோதிடத்துக்குச் சாதகமான தீர்ப்பைத் தரவில்லை.


உளவியலில் ‘பார்னம் விளைவு’ என்ற அம்சம் ஒன்று உண்டு. பார்னம் சர்க்கஸின் வெற்றிக்குக் காரணம், அதன் விதவிதமான ஆட்டங்கள் பலதரப்பட்ட மக்களுக்குப் பிடித்திருப்பதுதான். எல்லோருக்கும் எல்லாமும் பிடித்திருக்க வேண்டிய கட்டாயம் கிடையாது. ஆனாலும், ஒன்றிரண்டு ஆட்டங்கள் பிடித்திருப்பதால் சர்க்கஸ் முழுவதும் பிடித்திருக்கிறது. இதே போன்று பல கணிப்புகள் சொல்லப்பட்டாலும், பலித்திருக்கும் கணிப்பை மட்டும் மனம் நினைவில் கொள்கிறது.

நம்பிக்கை சார்ந்த எதையும் மக்களுக்குத் தர்க்கரீதியாகப் புரிய வைப்பது கடினம். சோதிடம், நம்பிக்கையைச் சார்ந்தது.

**‘தமிழ் இந்து’வில் பி.ஏ. கிருஷ்ணன் எழுதியது**


**சேவ் தமிழ் இயக்கம் சார்பில் – புதிய நூல்**

**“மோடி–வெளிச்சங்களின் நிழலில்”**




பா.ஜ.க.வின் பொய் பிரச்சாரங்களை அம்பலப் படுத்தும் நூல்.

55 பக்கங்கள் விலை : ரூ.25

தொடர்புக்கு : சிற்றுளி வெளியீடு, 70/75, 12 ஆவது தெரு, அசோக் நகர், சென்னை-83. பேசி : 9884468039

# பெரியார் மீது அவதூறு கக்கும் ம.பொ.சி. பரம்பரைக்கு மறுப்பு

**மதிவண்ணன் நூல் வெளியீட்டு நிகழ்வில் பேசிய பத்திரிகையாளர் விஷ்ணுபுரம் சரவணன், பெரியார் மீது ம.பொ.சி.யின் பேத்தி பரமேசுவரி என்பவர், இணையதளத்தில் அவதூறுகள் எழுதி வருவதை சுட்டிக்காட்டி பேசினார். அவரது உரையையும், அவதூறுக்கு மறுப்பாக 'குடிஅரசு' பதிவுகளையும் (4 ஆம் பக்கம்) வெளியிடுகிறோம்.**

ராவ் சாகிப் எல்.சி.குருசாமி சட்டமேலவை உரைகள் மற்றும் மதிவண்ணன் எழுதிய, 'உள் ஒதுக்கீடு'; 'தொடரும் விவாதம்'; 'மெல்ல முகிழ்க்கும் உரையாடல்', 'ஏதிலியைத் தொடர்ந்து வரும் நிலா' ஆகிய மூன்று நூல்கள் வெளியீட்டு நிகழ்வு 15.3.2014 அன்று சென்னை அய்கப் அரங்கில் நடைபெற்றது. 'கருப்புப் பிரதிகள்' இந்த நூல்களை வெளியிட்டுள்ளது. நூல்களை ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் அதியமான் வெளியிட, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பெற்றுக் கொண்டார். வ.கீதா, புனித பாண்டியன் மற்றும் தோழர்கள் உரையாற்றினர். நீலகண்டன் தொகுத்து வழங்கினார். 'மெல்ல முகிழ்க்கும் உரையாடல்' நூலை அறிமுகம் செய்து பத்திரிகையாளர் விஷ்ணுபுரம் சரவணன் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்த உரையில் ஒரு பகுதி:

இந்தத தொகுப்பின் கட்டுரைகளை இலக்கியம் சார்ந்தும் அரசியல் சார்ந்தும் இரண்டாகப் பிரிக்கலாம். ஆனால் இரண்டையும் தலித்திய பார்வையில் அலசுகிற இதன் ஆய்வு நோக்கில் ஓர் ஓர்மை இருப்பதை அவதானிக்க முடிகிறது. உதிரிகள் என்று சொல்லிக் கொள்கிற இலக்கியவாதிகள் பதிகிற செய்திகளை/படைப்புகளைத் தான் சில அல்லது பல ஆண்டுகள் கழித்து அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கையாள்கிறார்கள். உதாரணமாக நிறைய சொல்லலாம். ஒன்றை மட்டும் இங்கு பார்ப்போம். பெங்களூர் குணா பேசுகிற தூய தமிழ்க் குருதி தேசியம் பல ஆண்டுகளாக உதிரி பிரதியாக யாரும் அதை பெரிதாக பொருட்படுத்தாத நிலையில் கிடந்தது. கோ.கேசவன், அ.மார்க்ஸ் போன்றோர் அவ்வப்போது அதற்கு எதிர்வினை புரிந்து வந்தனர். ஆனால், இப்போது முளைத்திருக்கும் சில தமிழ்த் தேசிய இயக்கங்கள், கட்சிகள் அவரின் கொள்கையை வெளிப்படையாக தங்கள் இயக்கக் கட்சி செயல் திட்டங்களாக முன் வைக்கின்றன. தங்கள் இதழ்களில் அவரது கட்டுரைகளுக்கு முன்னுரிமை தந்து வெளியிடுகின்றன. எனவே உதிரிகளின் பிரதி ஒரு வகையில் இங்கு ஆவணமாக பதிவாகி வருகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்தத் தொகுப்பின் தொடக்கமாக இருக்கும் "இலக்கியமும் இலக்கியம் சார்ந்தும்" எனும் கட்டுரையே இந்தத் தொகுப்பின் கட்டுரையை நாம் வாசிக்க வேண்டிய மனநிலையை தெளிவாக வரையறுத்து விடுகிறது.

சுந்தர ராமசாமியின் நாவல்கள் குறித்த கட்டுரை மிக முக்கியமானது. தமிழ் இலக்கிய வெளியில் சுந்தர ராமசாமி ஒரு பிதாமகனாக உருவமைக்கப்படுகிற நிலையை நாம் காண முடிகிறது. பாரதியார், புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி என்று வரிசையை கட்டமைக்கிற வகையில் விழாக்கள் கொண்டாடப் படும் சூழலில் சுந்தர ராமசாமியின் நாவல்களை ஊடறுத்து அதில் மையமாக இருக்கும் இந்துத்துவா மனநிலையை வெளிப்படையாக உடைத்துப் போடுகிறது இக்கட்டுரை. புளிய மரத்தின் கதை, 'ஜெ. ஜெ' சில குறிப்புகள் நாவல்களை தலித்திய நோக்கில் ஆராய்ந்திருக்கிற இக்கட்டுரை, சு.ரா.வின் மொழி நடையில் மயங்கி அந்த நாவல்களை தமிழில் சிறந்த இலக்கியமாக கட்டமைக்க முயல்கிற முயற்சிக்கு பெரும் கலகக் குரலாக முன் நிற்கிறது. பிரேமிள். ராஜன் குறை-உள்ளிட்ட பலரும் சுந்தர ராமசாமியின் நாவல்களின் படைப்பு ரீதியிலான பலவீனங்களை விரிவாக எழுதியிருக்கின்றனர்.

சுந்தர ராமசாமி ஏன் இவ்வளவு தூரம் விமர்சிக்கப்பட வேண்டும் என்பதற்கு அவரை ஒட்டு மொத்த தமிழ் இலக்கியத்திற்கு குலசாமியாக மாற்ற முயலும் அவரின் வாரிசுகளின் பேராசையை வெளிச்சமிட்டு காட்ட மட்டுமல்ல... பெரியாரை தமிழருக்கும் தலித்துக்கும் விரோதியாக்க முயல்கிற முயற்சிகளில் சுந்தர ராமசாமி ஆரம்பித்த 'காலச் சுவடு' பத்திரிகைக்கும் முக்கிய இடமுண்டு. அந்த மாதிரியான முயற்சிகளுக்கு பெரியாரியவாதிகள் தக்க பதில் தந்து அடக்கி வைக்கும்போதெல்லாம், அந்தப் பத்திரிகை தூபம் போட்டு கிளப்பிவிடும். பெரியார் 125 சிறப்பிதழ் வெளியிட்டு, பெரியார் மீதான அவதூறை பொழிந்தது. தொடர்ந்த எதிர்வினையின் போது ரவிக்குமார் காலச்சுவட்டின் குரலாய் ஒரு இடத்தில் பதிகிறார். இவை எல்லாம் பெரியார் பற்றிய மீள் உரையாடலுக்குப் பயன்பட்டது என்று பெரியார் மீது பூசப்படுகிற அவதூறுக்கு முலாம் பூசினார்கள். பெரியார் பற்றி அவதூறை பொழிபவர்களுக்கு காலச்சுவட்டின் இதழிலும் மேடைகளிலும் பிரதான இடம் கிடைக்கிறது. ஸ்டாலின் ராஜாங்கம் தனது சமீபத்திய பேட்டியில் இன்றைய ஊடகங்கள் பற்றி கேட்கும்போது அவர் பாராட்டும் ஒரே பத்திரிகை காலச்சுவடுதான். தலித் பிரச்சினைகள் குறித்து தலித்துகளாலே நடத்தப்படும் இதழ்கள்கூட அவருக்கு நினைவில் இல்லை. மேலும் காலச்சுவட்டில் தான் எழுதுவது தலித்துகள் கருத்தியல் தளத்தில் நடத்திய போராட்டத்தின் வெற்றி என்றும், காலச்சுவட்டில் தான் எழுதும் கருத்துகளை வேறெந்த இதழிலும் எழுத முடியாது என்றும் கூறுகிறார். இது மட்டுமல்லாது "தமிழகத்தில் மனுதர்ம விதி செயற்பட்டதா என்பதும் எவ்விடத்தில் என்பதும் தெரியவில்லை" என்கிறார். இப்படி பெரியார் எதிர்ப்பாளர்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று நன்றாக 'இந்துத்துவா' அறிந்து வைத்திருக்கிறது.

**ம.பொ.சி.யின் பேத்தி**

ம.பொ.சி.யின் பேத்தியான பரமேஸ்வரி ஒரு கட்டுரையில், 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூல் பெரியாரால் எழுதப்படவில்லை என்று நிறுவ முயல்கிறார். பெண்கள் மாநாடு கூட்டி, 'பெரியார்' என்று பட்டம் கொடுத்ததுகூட ஏதோ செவிவழி கதைதானாம்.

"ஈ.வெ.ரா. பெரியாருக்குப் 'பெரியார்' என்ற பட்டத்தைப் பெண்களே செங்கல்பட்டில் நடந்த மாநாட்டில் தந்ததாக செவி வழி கதை உண்டு. தலித் ஆதரவாளரான மீனாம்பாள் கொடுத்தது என்றும், தர்மாம்பாள் கொடுத்த பட்டம் என்றும்கூடப் பாட பேதங்கள் இதில் உண்டு. ஒரு நூற்றாண்டுகூட ஆகாத ஒரு செய்தியை நம்மால் உறுதி செய்து கொள்ள முடியவில்லை" என்கிறார். ஆனால், "சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் 1938இல் தீர்மானமாக இயற்றப்பட்ட செய்தி 'குடிஅரசு' இதழில் வெளி வந்திருப்பதை இணையத்தில் தேடினால் அரை நிமிடத்தில் காண முடியும். இந்த அரை நிமிடத் தேடலைக்கூட செய்யாமல் செவி வழிக் கதை என்கிறர் ம.பொ.சி. பேத்தியான பரமேஸ்வரி. மேலும் அவரது கட்டுரையில், "திராவிடர் தலைவர்களுக்குத் தங்களுக்குத் தாங்களே இப்படி பட்டங்களைச் சூட்டிக் கொள்ளும் ஒரு மரபு உண்டு. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ் செழியன், சொல்லின் செல்வர் சம்பத் இப்படி... இதன் முன்னோட்டம் ஈ.வெ.ரா. பெரியாரிலிருந்து தொடங்குகிறது போலும்..." என்று கூறி திராவிடம் மீதுள்ள தன் வெறுப்பை நீட்டி முழக்குகிறார். ம.பொ.சி.யின் துரோகப் பணி தொடர்கிறது என்பதைத் தவிர வேறென்ன சொல்வது? ஸ்டாலின் ராஜாங்கத்தை பேட்டி எடுத்ததும் பரமேஸ்வரியே. அதில் திரும்ப திரும்ப பெரியார் பற்றியும் திராவிட இயக்கங்கள் பற்றியுமே கேள்விகளாக கேட்கப்படுகின்றன. தனக்கு தேவையான பதிலுக்கான கேள்விகளாகவே அவை அமைந்திருக்கின்றன. ம.பொ.சி.யின் இந்துத்துவா பற்றை தனியே சொல்ல வேண்டுமா என்ன? (ம.பொ.சி. பேத்தியின் இந்த பொய்யுரைக்கு ஆதாரபூர்வமான மறுப்பை 'குடிஅரசு' இதழிலிருந்து எடுத்து இதே இதழில் வெளியிட்டுள்ளோம். - ஆர்)

பெரியார் விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட ஒருவரல்ல. ஆனால், பெரியார் மீதான விமர்சனங்களைத் தலித்துகள் சார்பாக முன் வைக்கப்பட்டாலும் அதனைக் கொண்டாடி மகிழ்வது யார்? என்பதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

இந்த இடத்தில் மதிவண்ணன் இந்த நூலை சமர்ப்பித்திருக்கிற பகுதியை நினைவுக் கூர்வது முக்கியமானது.

"ஊர்மேயப் பிறந்தவர்களின் / அவிசாரிப் பட்டத்திற்கு அஞ்சாது / தன் வாழ்நாளை / ஒரு வேலைத் திட்டமாக நிறைவேற்றிய துறவியும் / தேவதையுமான / மணியம்மைக்கு..." என்று கூறி நூலை சமர்ப்பித்துள்ளார்.

இதில் துறவி, தேவதை என்கிற சொற்களுக்கான பொருளை அப்படியே பொருத்திக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். தி. பரமேஸ்வரியின் முகநூல் பகிர்வொன்றை இங்கு சுட்டுவது பொருத்தமாக இருக்கும்.

"கண்ணகி என்று கூறப்பட்டிருக்கிற பெண்ணுக்கு சிறிதளவாவது அறிவு மனித உணர்ச்சி - தன்மானம் இருந்தது என்று யாராவது ஒப்புக் கொள்ள முடியுமா?" என்று கம்பீரமாகக் கேள்வி போடுகிறார் ஈ.வெ.ரா. உணர்ச்சிக்காக அல்லாமல் உடைமைக்காக முதுமையைக் காதலிக்கும் பெண் மனித உணர்ச்சி அற்றவள்தான். ஊரார் பழிக்கும் நிலையிலும் உணர்ச்சியற்ற கட்டையாக கிழத்தோடு பவனி வரும் பெண் தன்மானமற்றவள்தான்!

இந்தக் குறைபாடுகள் அனைத்தும் கொண்ட ஒரு பெண்ணை ஈ.வெ.ரா. எப்போதோ எங்கேயோ சந்தித்து விட்டார் போலும்! அவளை நினைவில் வைத்துக் கொண்டு கண்ணகியைச் சாடுகிறார். (ம.பொ.சிவஞானம் எழுதிய 'இலக்கியத்தின் எதிரிகள்' நூல்)

காசுக்காக பெரியாரை மணியம்மை திருமணம் செய்து கொண்டார் எனும் தொனியை இலக்கிய ரசம் சொட்ட ம.பொ.சி. எழுதியிருக்கும் இந்தக் குறிப்பை தன் முகநூலில் பதிகிற கட்டுரையாளர்தான் மணியம்மைக்கு 27 வயதில் 70 வயது பெரியாருடன் திருமணம் நடந்தது பற்றி கவலைப்படுகிறார். இதில் பொருந்தா திருமணம் குறித்த அக்கறையோ, பெண்ணியம் சார்ந்த நோக்கமோ அவர் எழுதுவதில் இல்லை. பெரியார் மீதான எதிர்ப்பு, திராவிட இயக்க ஒவ்வாமையோடுதான் எழுதுவதாக நாம் புரிந்து கொள்ள முடியும். என்ன நோக்கத்திற்காக எழுதப்படுகிறது என்பதை முதன்மையாக்கி பார்ப்பதுதான் பெரியார் நமக்கு கற்றுக் கொடுத்த பாடமாக நான் கருதுகிறேன். ✦

## மோடி பிரதமராகக் கூடாது – ஏன்? சென்னையில் கழகம் தொடர் கூட்டங்கள்

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 5.4.2014 முதல் 10.4.2014 வரை மோடி ஏன் பிரதமர் ஆகக் கூடாது என்பதை விளக்கி 5 நாள் தொடர் விளக்க தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

முதல் நாள் 5.4.2014 சனி மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை–ஆலந்தூர் சாலை ஐந்து விளக்கு அருகில் நடந்த கூட்டத்தில் மனோகரன் தலைமை வகிக்க சிவா முன்னிலை வகித்தார்.

6.4.2014 ஞாயிறு மாலை 6 மணியளவில் திருவான்மியூர் ஜெயந்தி தியேட்டர் அருகில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஆ.சிவகுமார் தலைமை வகித்தார்.

7.4.2014 திங்கள் மாலை 6 மணியளவில் இராயப் பேட்டை டாக்டர் நடேசன் சாலை சந்திப்பில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்திற்கு சித்தார்த் தலைமை வகிக்க, செந்தில் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

தொடர் கூட்டத்தில் சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், வழக்கறிஞர் துரை அருண், வழக்கறிஞர் திருமூர்த்தி, காஞ்சி மாவட்ட அமைப்பாளர் செங்குட்டுவன், விழுப்புரம் அய்யனார், சென்னை மாவட்ட தலைவர் பா. ஜான் ஆகியோர் உரையாற்றினர்.

19.3.2014 அன்று மாலை தேனாம்பேட்டையில் மாலை 6 மணியளவில் ஆர்.பரணிகுமார் தலைமையில் மோடி பிரதமராகக் கூடாது–ஏன்? விளக்க தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கு. அன்புதனசேகர், தபசி குமரன், வழக்கிறஞர்கள் துரை அருண், திருமூர்த்தி, செங்குட்டுவன் (காஞ்சி மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் உரையாற்றினர். பார்த்திபன் நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION 09.04.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பெண்கள் தந்த 'பெரியார்' பட்டம்: 'குடிஅரசு' கூறும் வரலாறு

*பெரியார் பற்றிய அவதூறுகள் – தீவிர 'தமிழ்த் தேசியம்' பேசும் சில குழுக்களால் இணைய தளங்களிலும் எழுத்துகளிலும் பரப்பப்பட்டு வருகின்றன. தமிழனுக்கு அடையாளம் ஜாதியே என்று பார்ப்பனியத்துக்கு சேவை செய்யவும் ஒரு சிலர் புறப்பட்டிருக்கிறார்கள். ம.பொ.சி.யின் பேத்தியான பரமேசுவரி, 'பெரியார்' என்ற பட்டத்தை பெண்கள் கொடுத்தார்கள் என்பதற்கே சான்று எதுவும் இல்லை என்று எழுதியிருக்கிறார். இந்த அவதூறுகளுக்கு மறுப்பாக பெண்கள் மாநாட்டில் 13.11.1938இல் பெரியாருக்கு பட்டம் தந்த செய்தியை 'குடிஅரசு' (நவம்.20, 1938) இதழிலிருந்து எடுத்து இங்கு வெளியிடுகிறோம்.*

தமிழ்மொழிக்கும் பெண்கள் உரிமைக்கும் 1938ஆம் ஆண்டிலேயே பெரியார் இயக்கம் குரல் கொடுத்திருக்கிறது என்பதை 'காமாலைக் கண்' கொண்டு பார்ப்போருக்கு உணர்த்திட, பெண்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் இங்கு வெளியிடுகிறோம். தீர்மானங்களில் சில:

- இந்தியாவில் இதுவரையும் தோன்றின சீர்திருத்தத் தலைவர்கள் செய்ய இயலாமற் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவருமில்லாமை யாலும் அவர் பெயரைச் சொல்லிலும், எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம்மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது.
- மணவினை காலத்தில் புரோகிதர்களையும் வீண் ஆடம்பரச் செலவுகளையும் விலக்கிவிட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.
- மற்ற நாடுகளைப்போல் தமிழர்கள் ஒன்றுபட்டு ஒரு சமூகமாய் வாழ்வதற்கு இன்று பெருந் தடையாயிருப்பது சாதி வேற்றுமையாதலால், சாதி வேற்றுமை களை ஒழிப்பதற்கு இன்றியமையாத கலப்பு மணத்தை இம்மாநாடு ஆதரிக்கின்றது.
- இந்திய மாதர் சங்கம் என்னும் பேரால் தங்கள் கமிட்டிக் கூட்டத்திலும் மகாநாட்டிலும், கட்டாய இந்தியை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றி யிருப்பதைக் கண்டிக்கின்றது.
- இந்திய மாதர் சங்கம் என்பது சில பார்ப்பனப் பெண்களும், பார்ப்பன அன்புபெற்ற தாய்மொழியறிவில்லாத சில பெண்களும் கூடிய கூட்டமென்று கருதுகிறது.
- இம்மாகாணத்தில் எப்பகுதியிலாவது பெண்களைக் கூட்டிக் கட்டாய இந்தியை நிறைவேற்ற வீரமிருந்தால் இந்திய மாதர் சங்கத்தார் செய்து பார்க்கட்டுமென இம்மாநாடு அறைகூவி அழைக்கிறது.
- பத்திரிகைகளின் வாயிலாகப் பணம் சம்பாதிப்பது ஒன்றையே எண்ணி தமிழர் இயக்கங்களைக் கேவலப்படுத்தி வெளிவரும் 'ஆனந்த விகடன்', 'தினமணி', 'தமிழ்மணி' முதலிய பத்திரிகைகளைத் தமிழர்கள் இனி வாங்கக் கூடாதெனவும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.
- கணவனை இழந்த இளம் பெண்களின் துயர் நீங்க மாதர் மறுமணத்தை இம்மாநாடு ஆதரிக்கிறது.
- தமிழ்நாட்டில் 100-க்கு 95 மக்கள் கண்ணிருந்தும் குருடராய் தாய் மொழியில் கையெழுத்துப் போடத் தெரியாத நிலைமையில் இருக்கையில் சென்னை முதன் மந்திரியார் அதற்காவன செய்யாமல் அதற்கு மாறாக இந்தியைக் கட்டாயமாக செய்திருப்பதையும் அதனை கண்டிக்குமுகத்தான் தமிழ்நாட்டு பெருமக்களும், அறிஞர்களும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், மாபெருங் கூட்டங்கள் கூட்டி தெரிவித்தும் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பிடிவாதமாக யிருப்பதையும் இதைப்பற்றி தங்களுக்குள்ள மனக்கொதிப்பைக் காட்டும் முறையில் அமைதியாக மறியல் செய்பவரை சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்துவதையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.
- தமிழ் மொழியைக் காப்பாற்றும் முறையில் இந்தியைக் கண்டித்து மறியல் செய்து சிறை புகுந்த வீரர்களுக்கு இம்மாநாடு மனமார்ந்த நன்றி செலுத்துகிறது.

தீர்மானங்களை விளக்கியும், தமிழ்ப் பெண்கள் நிலைமையை விரித்தும் தோழர் ஈ.வெ.ரா. ஒரு சொற் பொழிவாற்றினார் - என்று 'குடிஅரசு' பதிவு செய்துள்ளது.

# 'சிந்தாமணி சில்க்ஸ்' திறப்பு விழா



சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், சிந்தா மணியூர் பகுதிக் கழகத் தோழர் ஜெயப்பிரகாஷ் புதிதாக தொடங்கியுள்ள பட்டுப் புடவை விற்பனை கூடமான 'சிந்தாமணி சில்க்ஸ்' ஐ திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 1.4.2014 செவ்வாய்க் கிழமை அன்று பிற்பகல் 12 மணி யளவில் (மூடநம்பிக்கையாளர் களால் இராகு காலம் என ஒதுக்கப்படும் நேரத்தில்) திறந்து வைத்தார்.


# குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம்: பங்கேற்பாளர்களுக்கு வேண்டுகோள்

தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் சார்பாக கோடை விடுமுறைக் காலத்தில் கொடைக்கானலில் குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மே மாதம் 15 முதல் 19 வரை 5 நாள்கள் முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாமில் 8 வயது முதல் 16 வயது வரை உள்ள குழந்தைகள் பங்கேற்கலாம். 5 நாள்களுக்கு உணவு தங்குமிடம், சுற்றுலா உள்பட ரூ.1000 மட்டும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பங்கேற்க விரும்புவோர் ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முகாமிற்கு குழந்தைகளை அனுப்பும் பெற்றோர்கள் கவனத்திற்கு:

1. பயிற்சி நடைபெறும் இடம் : கொடைக்கானல்
2. வரவேண்டிய இடம் : திண்டுக்கல் பேருந்து நிலையம்
3. வரவேண்டிய நேரம் : 14.05.2014 புதன் கிழமை 4 மணிக்குள் திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு வந்துவிட வேண்டும். அங்கிருந்து கொடைக்கானலுக்கு குழந்தைகளை மட்டும் தனிப் பேருந்தில் நாங்களே அழைத்துச் சென்றுவிடுவோம்.
4. குளிப்பதற்கு சோப்பு, ஷாம்ப், பேஸ்ட், ப்ரஷ், துண்டு ஆகியவற்றைக் கொடுத்து அனுப்புங்கள்.
5. கொடைக்கானலில் பயிற்சி நடக்கும் நாட்களில் குளிர் அதிகமாக இருக்கும் என்பதால், குளிர் தாங்கும் ஆடைகள், உல்லன் துண்டுகள், தொப்பிகளைக் கொடுத்தனுப்புங்கள்.
6. குழந்தைகள் தங்கம், வெள்ளி நகைகளையும், விலை உயர்ந்த கடிகாரங்களையும் அணிந்து வரவேண்டாம்.
7. செல்ஃபோன் கொண்டுவர வேண்டாம். கையில் தனியாக செலவுக்கு என தொகைகள் கொடுத்து அனுப்ப வேண்டாம்.
8. 19.05.2014 திங்கள் மாலை 2.00 மணிக்கு முகாம் முடிந்துவிடும். பெற்றோர்கள் திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு 19.05.2014 மாலை 4 மணிக்கு வந்து குழந்தைகளை அழைத்துச் செல்லவும்.
9. பெற்றோர்கள் பயிற்சி முகாமில் தங்க அனுமதி இல்லை.
10. பெற்றோர்கள் முகாம் நடைபெறும் இடத்தில் அல்லாமல் கொடைக்கானலில் தனியார் விடுதிகளில் அறை எடுத்து தங்குவதாகத் திட்டம் இருந்தால் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவும். கோடை விழா நடைபெறும் நாக்ள் என்பதால் தங்குமிடம் மட்டுமே ஒரு நாளுக்கு ரூ.2000 வரை ஆகும். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் போக்குவரத்து நெரிசல் மிகக் கடுமையாக இருக்கும். எனவே அந்த நாட்களில் பயணத் திட்டத்தை வைத்துக் கொள்ள வேண்டாம்.

**ஆசிரியர் சிவகாமி, மாநில அமைப்பாளர் - 9842448175**
**ஆசிரியர் ப. சிவக்குமார், மாநில அமைப்பாளர் - 9688856151**
**முனைவர் இராமகிருட்டிணன், மாநில அமைப்பாளர் - 9486161500**




**வெளிவந்துவிட்டது**

**'மோடி'த்துவ முகமூடி**

மோடி ஏன் பிரதமராகக் கூடாது என்பதை விளக்கும் வெளியீடு.


24 பக்கங்கள்; விலை : ரூ.5

தேவைப்படும் தோழர்கள் தலைமைக் கழக முகவரிக்குத் தொடர்பு கொள்க.

தலைமைக் கழகம், 95 டாக்டர் நடேசன் சாலை, மயிலாப்பூர், சென்னை-4.
பேசி: 9941613535 /044-24980745

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 10th April 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஏப்ரல் 17, 2014 | புரட்சி 13 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00

# குஜராத் கலவரம்: மோடிக்கு தொடர்பில்லையா?

குஜராத் படுகொலையில் மோடிக்கு தொடர்பில்லை என்று உச்சநீதிமன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வுக் குழு கூறிவிட்டது. எனவே மோடிக்கும் குஜராத்தில் 2002இல் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் படுகொலைக்கும் தொடர்பே இல்லை. மோடி புத்தரின் வாரிசு, அகிம்சையின் அவதாரம் என்று மோடிக்கு முகமூடி போடுகிறார்கள் – மோடி ரசிகர்கள்.

ராகவன் என்ற ஓய்வு பெற்ற பார்ப்பன காவல் துறை அதிகாரியின் தலைமையில் மோடி உள்ளிட்ட 63 நபர்கள் மீது வந்த புகார் குறித்து விசாரிக்க உச்சநீதிமன்றம் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு விசாரணையை நேர்மையாக நடத்தியதா? இது முக்கிய கேள்வி.

- இஷான் ஜாப்ரி என்ற கொலையுண்ட முன்னாள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மனைவி, குஜராத்தில் 12 மாவட்டங்களில் நடந்த படுகொலைகளுக்கு காரணமான மோடி, அவரது சக அமைச்சர்கள், உயர் போலீஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 62 நபர்களை பட்டியலிட்டு, அவர்கள் மீது விசாரணை நடத்த உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார்.
- விசாரணை நடத்திய ராகவன் தலைமையிலான புலனாய்வுக் குழு மோடியை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற உள்நோக்கத் துடனேயே தனது விசாரணையை நடத்தியது என்று ஜாக்கியா ஜாஃபரி மட்டுமல்ல, குஜராத்தின் முன்னாள் காவல்துறை தலைமை இயக்குனர் ஆர்.பி. சிறீகுமார், மோடியால் பணி நீக்கம் செய்யப்பட்ட உளவுத்துறை துணை ஆணையர் சஞ்சீவ் பட், படுகொலை பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்திய ‘தெகல்கா’ வார இதழ் செய்தியாளர் ஆஷிஷ் கேதான் உள்ளிட்ட பலரும் குற்றம்சாட்டினர்.
- கோத்ரா இரயில் பெட்டி எரிப்பு சம்பவம் நடந்தவுடன், மோடி விசாரணை ஏதும் நடப்பதற்கு முன்பே ‘பாகிஸ்தான் உதவியோடு முஸ்லிம்கள் நடத்திய திட்டமிட்ட சதி’ என்று அலறினார். அப்படி அறிவித்தவுடன், கோத்ராவுக்கு புறப்பட்ட மோடி, தீயில் இறந்துபோன கர சேவகர்கள் மற்றும் பயணிகள் உடலை சட்டத்துக்குப் புறம்பாக ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் கண் முன்னே ‘பிரேதப் பரிசோதனை’ நடத்த உத்தரவிட்டார். விசுவ இந்து பரிஷத் தலைவர் ஜெய்தீப் பட்டேலுடன் தொலைபேசியில் பேசினார் மோடி. அவரும் கோத்ரா வந்துவிட்டார். இது நடக்கும் போதே அமைச்சர்கள் கூடி கலவரத்துக்கான சதித் திட்டங்களை தீட்டுகிறது. இறந்து போன கரசேவகர்களின் சடலங்களை விசுவ இந்து பரிஷத் தலைவர் ஜெய்தீப் பட்டேலிடம் ஒப்படைக்கவும் ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத் கும்பல், அந்த சடலங்களை கோத்ராவிலிருந்து 300 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அகமதாபாத்துக்கு சாலை வழியாக எடுத்துச் செல்லவும் அமைச்சர்கள் கூட்டம் அனுமதிக்கிறது. அரசு சாராத ஒருவரிடம் (ஜெய்சிங் பட்டேலிடம்) சடலங்களை ஒப்படைக்கும் முடிவு சட்டவிரோதமானது என்று , கோத்ரா மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஜெயந்த்ரவி எதிர்த்தார். இதனால் மிக மோசமான வன்முறை வெடிக்கும் ஆபத்துகள் இருப்பது தெரிந்த பிறகும், இந்து மதவெறியைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் மோடி அதற்கு அனுமதி தருமாறு வற்புறுத்தினார்.

  அன்று இரவே அகமதாபாத் திரும்பிய நரேந்திர மோடி, உயர் அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டி, “இந்துக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்துவதைத் தடுக்கக் கூடாது” என்று உத்தரவிட்டார்.
- அடுத்த நாள், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து முழு அடைப்புப் போராட்டத்தை மோடி அரசின் முழு ஆதரவோடு நடத்தியது. அன்று குல்பர்கா சொசைட்டி, நரோடாபாட்டியா ஆகிய இடங்களில் படுகொலையை ஜெய்தீப்பட்டேலும், மோடி அரசில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சராக இருந்த மாயாபென் கோட்னானியும் தலைமை ஏற்று நடத்தினார். (குற்றம் நிருபிக்கப்பட்டு இவருக்கும் ஆயுள் தண்டனை கிடைத்துள்ளது) சிறப்புப் புலனாய்வுக் குழு இந்தப் பின்னணி நடவடிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளவே இல்லை.
- இந்தப் படுகொலைகள் நடந்த 2002, பிப்.27, 28 தேதிகளில் படுகொலைகளை தலைமையேற்று நடத்திய ஜெய்தீப்பட்டேலுக்கும் மோடிக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடலை புலனாய்வுக்குழு மோடியைக் காப்பாற்றுவதற்காகவே விசாரணைக்கு ஏற்கவில்லை.
- மாநிலம் முழுதும் பதட்டம், கலவரம் வெடிக்கும் சூழ்நிலைகளை சுட்டிக் காட்டியும், நிலைமை

(4 ஆம் பக்கம்)

## முகத்திரையை கிழிக்கிறார், பிரசாந்த் பூஷண்

# ‘சோ’ ராமசாமியா? ‘சோர்’ ராமசாமியா?

‘நேர்மையாளர்’, ‘நடுநிலையாளர்’ என்ற வேடத்துக்குள் பதுங்கிக் கொண்டு, ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியத்தைப் பரப்பி வருபவர் ‘துக்ளக்’ சோ. மோடியைப் பிரதமராக்க வேண்டும் என்று இரண்டு ஆண்டுகாலமாக வலியுறுத்தி வருவதோடு, பாரதிய ஜனதா கட்சிக்குள்ளும் மோடிக்காக ஆதரவு திரட்டினார். தீவிர அத்வானி ஆதரவாளராக இருந்து அதற்கு நன்றிக் கடனாக மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் பெற்றவர்தான் ‘சோ’. தனது ‘துக்ளக்’ ஆண்டு விழாவுக்கு மோடி, அத்வானி இருவரையும் அழைத்து ஒரே மேடையில் ஏற்றி ‘சமரச’ தூதுவராக, தன்னை அடையாளம் காட்டிவர். தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுக்கும் நெருக்கமான ஆலோசகராக உள்ளார். மோடியின் முதல்வர் பதவி ஏற்பு விழாக்களில் தவறாது பங்கேற்பவர், ஜெயலலிதா. ஜெயலலிதா முதல்வர் பதவி ஏற்பு விழாவிலும் பங்கேற்றார் மோடி. இந்த நெருக்கத்தின் இணைப்புப் பாலமாய் நிற்பவர், ‘துக்ளக்’ சோ, மோடி பிரதமராக வேண்டும்; அவருக்கு வாய்ப்பு இல்லையேல் ஜெயலலிதா பிரதமராக வேண்டும் என்று தனது பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வருகிறார். இப்போது வெளிப்படையாக பா.ஜ.க. கூட்டணி அமைத்த பிறகும், பா.ஜ.க. வேட்பாளர்களுக்கும், அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். பா.ஜ.க. கூட்டணி கட்சிகள், ‘துக்ளக்’ சோவின் இந்த பச்சைப் பார்ப்பன அறிவிப்பைக் கண்டு திகைத்துப் போய் நிற்கின்றன. கடந்த வாரம் சென்னை வந்த மோடியை, நடிகர் ரஜினிகாந்துடன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தவரும் இதே ‘துக்ளக்’ சோ தான்.

இந்த நிலையில் ஆம் ஆத்மி கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவரான பிரபல வழக்கிறஞர் பிரசாத் பூஷண், சென்னையில் ஏப்.14 ஆம் தேதி அளித்த பேட்டியில், ‘துக்ளக்’ சோ ஜெயலலிதாவின் ‘பினாமி’யாக செயல்படும் செய்தியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார். தமிழ்நாடு ஊடகங்கள், சோவின் முகத்திரையைக் கிழிக்கும் இந்த செய்தியை கட்டுப்பாடாக இருட்டடிப்பு செய்துவிட்டது குறிப்பிடத்தக்கது. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற தகவலை செய்தியாளர்களிடம் கூறிய பிரசாத் பூஷன், அவர் ‘சோ’ ராமசாமி அல்ல; ‘சோர்’ (தமிழில் திருடன்) ராமசாமி என்று கூறினார். பிரசாத் பூஷன் வெளியிட்ட செய்தி என்ன?

ஜெயலலிதாவின், ‘உடன்பிறவா’ சகோதரி சசிகலாவுடன், ஜெயலலிதாவுக்கு கருத்து மாறுபாடு ஏற்பட்டு, போயஸ் கார்டனிலிருந்து வெளியேற்றியது அனைவருக்கும் தெரியும். ‘சசிகலாவுக்கும் தனக்கும்’ எந்தத் தொடர்பும் இல்லை என்று ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டார். அத்துடன் சசிகலா இயக்குனராக இருந்த ‘மிடாஸ்’ (மதுபான தயாரிப்பு நிறுவனம்) உள்ளிட்ட, பல நிறுவனங்களிலிருந்து இயக்குனர் பதவியிலிருந்து சசிகலா நீக்கப்பட்டார். அப்போது அந்தப் பதவிகளில் ஜெயலலிதாவால் நியமிக்கப்பட்டவர் ‘துக்ளக்’ சோ. மீண்டும் சசிகலா, போயஸ் கார்டனுக்கு திரும்பியபோது, ‘துக்ளக்’ சோ, தனது பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டு, சசிகலாவிடம் ஒப்படைத்தார். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட இத்தகவலை பிரசாந்த் பூஷன் செய்தியாளர்களிடம் கூறினார்.

இது தவிர, ‘துக்ளக்’ சோவுக்கு வேறு பின்னணிகளும் உண்டு. ‘துக்ளக்’ சோவின் தந்தை ஆத்தூர் சீனிவாச அய்யர். இவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் ‘சாராய வியாபாரியாக’ கொழுத்த இராமசாமி உடையார் நடத்திய ‘ஓரியன் கெமிக்கல்ஸ்’ என்ற நிறுவனத்தின் நிர்வாகத் தலைவராக இருந்தவர் இராமசாமி உடையார். ‘கோல்டன் ஈகில்’ என்ற பெயரில், (ஜி.ஈ.டி.) தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றையும் தொடங்கினார். அந்தத் தொலைக்காட்சி நிலையம், எம்.ஜி.ஆரின் சத்யா ஸ்டுடியோ வளாகத்திலே செயல்பட்டது. அந்த தொலைக்காட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் ‘துக்ளக்’ சோ. இந்த தொலைக்காட்சியில் எஸ்.வி.சேகர், கங்கை அமரன் போன்றோர் பங்காற்றினர். பின்னர், இந்த அலைவரிசையை விஜய் தொலைகாட்சி நடத்தி வந்த கருநாடக ‘சாராய அதிபர்’ மல்லையா வாங்கினார். இப்போது மல்லையாவிடமிருந்து ஸ்டார் நிறுவனம் அதை வாங்கியுள்ளது. ‘துக்ளக்’ சோவின் தந்தை ஆத்தூர் சீனிவாசன் இறந்தபோது வெளிவந்த மரண விளம்பரத்தில் உடையார் நிறுவனத் தலைவராக அவர் இருந்ததும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஜெயலலிதாவை தனது ஏட்டில் தொடர் கட்டுரைகளை எழுத வைத்து, அவரை கட்டுரையாளராக அறிமுகப்படுத்தியவர் ‘துக்ளக்’ சோ. அதற்குப் பிறகுதான் அவர் அ.இ.அ.தி.மு.க. அரசியலுக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்

# பெண்கள் உரிமைகளை மறுக்கும் தேர்தல் களம்

ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் வாக்காளர்களாக இருந்து என்ன பயன்? அரசியலைத் தீர்மானிக்கும் அதிகாரங்கள் பெண்களுக்கு முற்றாகவே மறுக்கப்பட்டுத்தான் வருகின்றன. 33 சதவீத இடஒதுக்கீடு சட்டம், பாதிக் கிணற்றில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை நிறைவேற்ற விடாமல் தொடர்ந்து ஆண் ஆதிக்க அரசியல் தலைவர்கள் தடைபடுத்தியே வருகிறார்கள்.

நாட்டின் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ள மோடி, தனக்குத் திருமணமாகி, ஒரு மனைவி இருக்கிறார் என்ற உண்மையைக்கூட வெளிப்படுத்திடாமல் மறைத்து வைத்துள்ளார். மூன்று முறை சட்டமன்றத் தேர்தலுக்கான போட்டியிடும் விண்ணப்பப் படிவத்தில் இதை மறைத்துவிட்டு, இப்போது, நாடாளுமன்றத் தேர்தலுக்கான விண்ணப்பத்தில் மட்டும் குறிப்பிடுகிறார். “மோடி ஏன் மறைத்தார்; இவர் பதவிக்கு வந்தால், பெண்களுக்கு பாதுகாப்பு இருக்குமா?” என்ற கேள்விகள் எதிர்முகாம்களில் முன் வைக்கப்படுகின்றன. நாம் ஒரே ஒரு கேள்வியை முன்வைக்க விரும்புகிறோம். பிரதமர் பதவிக்கான வேட்பாளராக ஒரு பெண் களத்தில் இறக்கப்பட்டு, அந்தப் பெண் மூன்று முறை தாக்கல் செய்த தேர்தல் விண்ணப்பப் படிவத்தில் தனக்குத் திருமணம் நடந்து, கணவர் இருப்பது பற்றி எதையும் குறிப்பிடாமல் மறைத்து, சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு, தனக்கு திருமணமாகி, ஒரு கணவரும் இருக்கிறார் என்று அறிவித்து, தேர்தல் களத்துக்கு வந்திருந்தால், இந்த அரசியலும், சமூகமும், அந்தப் பெண்ணை அங்கீகரித்திருக்குமா? ஒவ்வொருவரும் நெஞ்சைத் தொட்டு சிந்திக்க வேண்டிய கேள்வி இது. மதம் கட்டமைக்கும் ஒழுக்க மதிப்பீடுகள் பெண்களை மட்டுமே சுமை தாங்கிகளாக்கியிருக்கின்றன. சமூகத்தின் பார்வையில் பெண்தான் எப்போதும் குற்றக் கூண்டில் ஏற்றப்படுவாள். குற்றவாளிகளாக மாறி நிற்கும் ஆண்களே தீர்ப்புகளை தங்கள் ‘சாட்டை’களால் எழுதுகிறார்கள்.

33 சதவீதம் பெண்களுக்குத் தேவை என்று பேசிய கட்சிகளேகூட தேர்தல் களத்தில் பெண்களுக்கு எத்தகைய வாய்ப்புகளை வழங்கியிருக் கின்றன? அரசியலில் சோனியா, மம்தா, ஜெயலலிதா, சுஷ்மா என்று பெண்களின் தலைவர்கள் தானே அதிகாரத்தை தங்களிடம் வைத்துள்ளார்கள் என்று கேட்கலாம். குறியீடுகளாக நிற்கும் இந்தப் பெண் தலைமைகள், தங்கள் அதிகாரத்தின் வலிமையை பெண்களுக்காக பயன்படுத்த முடியாத நிலையில்தான் சமூகத்தின் அரசியல் பார்வை கட்டமைக்கப் பட்டிருக்கிறது. சோனியா தலைமையிலான காங்கிரசு கட்சியே 413 வேட்பாளர்களில், 53 பெண்களுக்கு மட்டுமே வாய்ப்பு அளித்துள்ளது. 33 சதவீத ஒதுக்கீட்டை சட்டமாக்க வேண்டும் என்றவர்கள், சட்டம் வராவிடிலும் அதை ஏன், தங்கள் கட்சியில் நடைமுறைப்படுத்தக் கூடாது?

பெண்களின் சமத்துவம், உரிமைகள் மத பண்பாட்டுக்கு எதிரானது என்று இந்துமதப் பார்ப்பனிய கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிற கட்சி பா.ஜ.க. அதன் தாய்க் கழகமான ஆர்.எஸ்.எஸ்.சில் நேரடி உறுப்பினராகும் தகுதி பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. முன்னணி அமைப்புகளில்தான் பெண்கள் இருக்க முடியும். அந்த பா.ஜ.க. களமிறக்கியிருக்கும் 409 வேட்பாளர்களில் பெண்கள் 35 பேர் மட்டும்தான். தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணி, நிறுத்தியுள்ள வேட்பாளர்களில் ஒரு பெண்ணுக்குக்கூட வாய்ப்பு தரப்படவில்லை. (சிதம்பரம் தொகுதியில் பா.ம.க. வேட்பாளராக நிறுத்தப்பட்டவரின் வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டதால், அவருக்கு மாற்றாக மனு செய்த அவரது மனைவி வேட்பாளராக்கப்பட்டுள்ளார்) தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் பரப்புரையாளர்களாக தீவிரமாக செயல்பட்ட தமிழிசை, வானதி என்ற இரண்டு பெண்களுக்கும் போட்டியிடும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டுவிட்டன. அதேபோழ்து, ஆம் ஆத்மி கட்சி மட்டும், கூடுதலாக பெண் வேட்பாளர்களை களமிறக்கியிருப்பதை சுட்டிக்காட்ட வேண்டும். 385 வேட்பாளர்களில் 57 பேர் பெண்கள். மனித உரிமை சுற்றுச் சூழல் உரிமை போராட்டங்களில் முன்னணியில் நிற்கும் பெண்கள், அக்கட்சி சார்பில் போட்டியிடுகிறார்கள். தமிழ்நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் பெண்களுக்கு 33 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்ய முன்வரவில்லை. அடையாளங்களுக்காக குறைந்த எண்ணிக்கையில்தான் பெண் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறார்கள்.

முலாயம்சிங் போன்ற பிற்போக்குவாதிகள், ஆண் இளைஞர்கள், பாலுறவு வன்முறையில் ஈடுபடுவதை பெரிய குற்றமாகக் கருதக் கூடாது என்று தேர்தல் கூட்டங்களில் வெளிப்படையாகவே பேசுகிறார்கள். ஜாதி மறுப்புத் திருமணத்தை ஏற்க மறுத்து காதலர்களை பிரித்து வைப்பவர்கள், ஜாதி கடந்த திருமணங்களை மிரட்டி தடுப்பவர்கள், ஜாதிக் கலவரங்களை தூண்டிவிட்டு நடத்தக் கூடியவர்கள், இவர்கள் அனைவருமே பெண்களின் உரிமைகளுக்கு எதிரானவர்கள் மட்டுமல்ல, பெண்களை மனிதர்களாகவே மதிக்க மறுக்கிறவர்கள்தான். இவற்றின் கடுமையான பாதிப்புகளை சுமக்க வேண்டியவர்களும் பெண்கள்தான்.

ஆனால், இந்த முக்கியமான பாலின சமத்துவம் தேர்தல் களத்தில் ஒரு பிரச்சினையாகக்கூட முன்வைக்கப்படுவதில்லை. சுட்டெரிக்கும் வெயிலில் தலைவர்களின் உரைகளுக்காக அழைத்து வரப்பட்டு, கடும் இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுவோரும் பெருமளவில் பெண்கள்தான். பெண்களின் வாக்குகள் இவர்களுக்கு வேண்டும். ஆனால், பெண்களின் பிரதிநிதித்துவம் அவர்களுக்கு கசக்கும். இந்திய ஜனநாயகத்தின் அரசியல் திருவிழாக்களானாலும் சரி, கொண்டாடப்படும் மதத்தின் திருவிழாக்களானா லும் சரி, பெண்கள் பார்வையாளர்கள்தான்! தீர்மானிப்பவர்கள் அல்ல; எத்தனை காலம் தொடருவது இந்த அநீதி?

“ஆணும் பெண்ணும் சமஉரிமை இல்லாத உலகில், சுதந்திரத்தைப் பற்றிப் பேச எவனுக்கு யோக்கியதை இருக்கிறது?” – பெரியார்.

# அர்த்தமற்ற “தெனாலிராமன்” திரைப்பட எதிர்ப்பு

கருத்து மாறுபாடுகள் கொண்ட திரைப்படங்கள் வெளிவந்தால் அதை வெளியிடவே கூடாது என்ற போராட்டங்கள் தமிழகத்தில் அதிகரித்து வருகின்றன. இந்து மதம் பற்றி ஆய்வுக் கண்ணோட்டத்தில் வெளிவரும் நூல்கள் இந்தியாவில் வெளியிடவே கூடாது என்று ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் மிரட்டுகிறார்கள். உடனே நூல் திரும்பப் பெற்று விடுகிறது. ‘இராமன்-கிருஷ்ணன் ஒரு புதிர்’ என்று அம்பேத்கர் எழுதிய நூலை திரும்பப் பெறக் கூறி மராட்டியத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கலவரத்தில் இறங்கினர். ஆனால், பெரும்பான்மை மக்களை “சூத்திரர்கள்”, “அடிமைகள்”, “பிராமணரின் வைப்பாட்டிப் பிள்ளைகள்” என்று கேவலமாக இழிவு செய்யும் மனுசாஸ்திரங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்ற குரலை எந்த மானமுள்ள தமிழனும் எழுப்பத் தயாராக இல்லை. கோயில் கருவறைக்குள் கடவுளிடம் நெருங்கி, கடவுளுக்கு அர்ச்சனை செய்யக்கூடிய உரிமை பிறப்பால் இழிவான ‘சூத்திரர்-பஞ்சமர்க்கு’ கிடையாது என்று சட்டப்படி உறுதி செய்யப்பட்டுள்ளதைப் பற்றி எந்த “மற”த் தமிழனுக்கும் மானம் பீறிட்டுக் கிளம்புவதில்லை. அதே கோயிலுக்குள் அதே கேவலத்தை ஏற்றுக் கொண்டு கர்ப்பகிரகத்துக்கு கைகட்டி வெளியே தலை தாழ்த்தி நிற்கிறான்.

மாறுபட்ட கருத்துகள், கலைகளாக, திரைப்படங்களாக எழுத்துகளாக வரவே கூடாது என்ற கருத்து, கருத்துரிமையைப் பறிப்பதாகும். பெரியார் தனது படத்தை எதிரிகள் செருப்பாலடித்தபோதுகூட, “நன்றாக அடியுங்கள்; அதன் மூலம் என் கருத்துகள் பரவும்” என்றுதான் கூறினார்.

வடிவேலு நடித்து வெளிவர இருக்கும் ‘தெனாலி ராமன்’ படத்தில் கிருஷ்ண தேவராயர் என்ற தெலுங்கு மன்னரை அவமதிக்கும் கருத்துகள் இடம் பெற்றிருப்பதாக தமிழ்நாட்டில் ‘தெலுங்கு பேசுவோர் சங்கம்’ என்ற அமைப்பினர் தொடை தட்டி போராடக் கிளம்பிவிட்டார்கள். நடிகர் வடிவேலு, கிருஷ்ண தேவராயர் என்ற பெயரைக்கூட படத்தில் உச்சரிக்கப்படவில்லை என்று கூறுகிறார்.

உண்மையில் கிருஷ்ண தேவராயர், பார்ப்பன அடிமையாகவே ஆட்சி செய்த மன்னன். கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் முதலமைச்சராக இருந்தது ‘சாளுவ திம்பரசு’ எனும் பார்ப்பனர். மன்னனின் குலகுரு தாதாச்சாரி எனும் வேதியப் பார்ப்பான். அப்பையத் தீட்சதர், பெத்தண்ணா, தெனாலி ராமன் ஆகிய பார்ப்பனர்கள், அரசவைக் ‘கவி’கள்!

காலம் முழுதும் “பிராமணர்”களுக்கே பொன் பொருளைக் கொட்டியழுது பல அக்கிரகாரக் குடியிருப்புகளை உருவாக்கித் தந்தவர் கிருஷ்ண தேவராயர். கிருஷ்ண தேவராயருக்கு ஆண் வாரிசு இல்லை. தனது மகள் வயிற்றுப் பேரனாகிய ‘திருமலைராயன்’ எனும் 6 வயது சிறுவனை தத்து எடுத்து வளர்த்து, தனது வாரிசாக முடிசூட்டத் திட்டமிட்டார். கிருஷ்ணதேவராயரை ஏமாற்றி சுரண்டி வந்த பார்ப்பனர்களே இதற்கு எதிராக சதி செய்தனர். முதலமைச்சராக இருந்த ‘சாளுவத் திம்மரசு’ என்ற பார்ப்பானே தனது மகன் வழியாக விஷத்தை சாப்பிடக் கொடுத்து, முடிசூட்டப்படவிருந்த சிறுவன் திருமலைராயனை சாகடித்துவிட்டான். செய்தி அறிந்த கிருஷ்ண தேவராயர் அதிர்ச்சியில் உறைந்தார். நீதி விசாரணை நடத்தி கொலைகாரர்களை கண்டறிந்து தண்டிக்க உத்தரவிட்டார். முதலமைச்சர் மற்றும் அவனது மகன் உள்ளிட்ட மூன்று பார்ப்பனர்களே சதிகாரர்கள் என்பது கண்டறியப்பட்டது. ஆனாலும், பார்ப்பனர்களைக் கொலை செய்வது பாவம்; ‘மனு சாஸ்திர’த்துக்கு விரோதம்; ‘பிரம்மஹத்தி தோஷம்’ வந்துவிடும் என்று அஞ்சி மரண தண்டனை விதிக்க கிருஷ்ண தேவராயன் பயந்தார். கொலைகாரர்களின் கண்களை மட்டும் பறிக்குமாறு உத்தரவிட்டார். பேரன் மரணத்தால் நிலை குலைந்து கி.பி.1530இல் இறந்தார். இந்த வரலாறு பெருமைக்குரியதா? பார்ப்பன அடிமையாக வாழ்ந்தவர்கள் அதுவும் அரசர்களாக மக்களை சுரண்டி கசக்கிப் பிழிந்தவர்கள் எல்லாம், போற்றுதலுக்கு உரியவர்களா? ‘தெலுங்கர்’ என்பதாலோ, ‘தமிழர்’ என்பதாலோ, ‘கன்னடர்’ என்பதாலோ அது எந்த மொழி அரசனாக இருந்தாலும் அரசர்களை விமர் சிக்கவே கூடாது என்பது என்ன நியாயம்?

“தெலுங்கு பேசுவோர்” சங்கங்கள் இப்படி மொழி வெறிக் கண்ணோட்டத்தில் ஆர்த்தெழுவது அறிவுடைமையாகாது!

நூல்கள், திரைப்படங்கள், இலக்கியங்களில் மாறுபட்ட கருத்துகளே வரக்கூடாது; எரிப்போம்; தடுப்போம் என்று தொடை தட்டுவது கருத்து விவாதங்களை அறவே ஒழித்துவிடும். எந்தத் தரப்பிலிருந்து இந்தக் குரல் வந்தாலும் அது ஆர்.எஸ்.எஸ். பாசிச சிந்தனைதான் வன்மையான கண்டனத்துக்கு உரியது!

## திருவாரூர் மத்திய பல்கலையில் பார்ப்பன ஆதிக்கம்

நாட்டின் உயர் பதவிகளில் பார்ப்பனர்கள் ஆதிக்கமே தலைவிரித்தாடுகிறது. திருவாரூரில் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மத்திய பல்கலைக் கழகத்தில் இதே நிலைதான்!

முன்னாள் துணைவேந்தர் டாக்டா சஞ்சய் - பார்ப்பனர், இப்போதைய பதிவாளர் வி.கே. சிறீதர் - பார்ப்பனர், நிதி அதிகாரி பி.வி.இரவி - பார்ப்பனர், துணைப் பதிவாளர் வெங்கடேசன் - பார்ப்பனர்

துணைவேந்தரை தேர்வு செய்ய நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இடம் பெற்றோரும் பார்ப்பனர்களே! டாக்டர் ஜி.கே. ஜெயராமன் - கன்னட பார்ப்பனர், சி.ஆர். கேசவன் - பார்ப்பனர், கோபாலகிருஷ்ணகாந்தி - பார்ப்பனர்.

திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தர் தேர்வுக் குழுவில் இடம் பெற்றுள்ள கோபாலகிருஷ்ண காந்தி, சி.ஆர். கேசவன் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள். முன்னாள் துணைவேந்தர் வி.சி. சஞ்சய், மீண்டும் துணை வேந்தராக நுழையும் நோக்கத்தோடு தனக்கு பாதுகாப்பான ஏற்பாடுகளை செய்து கொண்டுள்ளார்.

# காங்கிரஸ் யாருடைய "சுதந்திரத்துக்கு" போராடியது?

*'அவுட் லுக்' (மார்ச் 10) ஏட்டில் அருந்ததி ராய், அம்பேத்கர் நூலுக்கு எழுதிய முன்னுரிமை குறித்து வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி ஏற்கனவே பெரியார் முழக்கத்தில் (மார்ச் 20) வெளி வந்தது. பேட்டியின் மற்றொரு பகுதி:*

**கேள்வி: காந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட வில்லையா? அவர் நமது நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தரவில்லையா?**

பதில் : இதை சுதந்திரம் என்று சொல்வதைவிட வேண்டுமனால் 'அதிகார மாற்றம்' என்று சொல்லலாம். காந்திய-அம்பேத்கரிய விவாதத்தில் 'ஏகாதிபத்தியம், சுதந்திரம்' போன்ற வார்த்தைகள் நமது புரிதலில் இன்னும் சற்று ஆழமாகவும், சிக்கலாகவும் மாறிப் போகிறது.

அம்பேத்கர் முதல்முறையாக, 1931 ஆம் ஆண்டு காந்தியைச் சந்தித்தார். அப்போது, காங்கிரஸ் மீதான அம்பேத்கரின் தீவிர விமர்சனம் குறித்து காந்தி கேட்கிறார். அதற்கு அம்பேத்கர் அளித்த பதில் மிக பிரபலமானது: 'காந்திஜி! எனக்கென்று தாயகம் ஏதுவுமில்லை; தீண்டத்தகாதவர்கள் பெருமைப்பட இங்கு எதுவுமில்லை."

அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய பின்னரும்கூட, பிரித்தானியப் பேரரசுக்குப் 'பொறுப்புணர்ச்சி'யுடன் நடந்து கொண்டார். ஆனால், ஒரு சில ஆண்டுகளிலேயே முதல் தேசிய ஒத்துழையாமை இயக்கம் பிரித்தானியர்களுக்கு எதிராகத் திரும்பியது. இலட்சக்கணக்கான மக்கள் அவரின் அழைப்பை ஏற்று திரண்டனர். எனினும், அவர் மட்டுமே பிரிட்டிஷார் பிடியிலிருந்து இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்தார் என சொல்வது சரியல்ல. நிச்சயமாக, அவருக்கும் அதில் ஒரு தனிப் பங்கு இருந்தது. முழுப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில், சமத்துவமின்மை பற்றி ஒரு சமூக சீர்திருத்தவாதியைப்போல் அவர் பேசியிருக்கிறார். ஆனால், பாரம்பரிய சாதிய ஏற்றத் தாழ்வு அமைப்பு, பெரு நிலவுடமையாளர்களின் அதிகாரத்தில் அவர் என்றுமே தலையிட்டதில்லை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

டாடா, பிர்லா, பஜாஜ் போன்ற தொழிலதிபர் களின் வீட்டில் இருந்துகொண்டு, அவர்கள் ஆதரவுடனேயே காந்தி தனது அரசியல் நடவடிக்கை குறித்து சிந்தித்தார். எனவே, அவர்களுக்கு எதிராக, காந்தி ஒருபோதும் செயல்பட்டதில்லை. அதில் அவர் மிகவும் கவனமாக இருந்தார். அவர்களில் பலர், முதல் உலகப் போரில் பெரும் பணம் ஈட்டினர். பிரிட்டிஷ் ஆட்சியின் கட்டுப்பாடுகளும் அவர்களின் இன மேலான்மையும் மீது அவர்கள் வெறுப்புற்றனர், எனவே, அவர்கள் தேசிய இயக்கத்தின் பின்னால் தங்கள் பலத்தைக் காட்டத் தொடங்கினர்.



காந்தி, தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர், அகமதாபாத் நூற்பாலை நிர்வாகத்தினரால் எந்தப் பயனும் அடையாத தொழிலாளர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் செய்தனர். நூற்பாலை முதலாளிகள் பிரச்சனையைத் தீர்த்து வைக்க காந்தியை நாடினர். தொழிலாளர் தகராறு களில் காந்தியின் தலையீடு, தொழிற்சங்கங்களை அவர் கையாண்ட விதம், வேலை நிறுத்தத்தின்போது தொழிலாளர்களுக்கு அவர் செய்த அறிவுரை என... இவை அனைத்தும் விடுகதைபோல் புதிரானவையாக இருக்கின்றன.

காந்திய நடைமுறைகள் வியப்பான திருப்பங் களைக் கொண்டவை. எடுத்துக்காட்டாக, 1924 ஆம் ஆண்டு பூனாவுக்கு அருகில் டாடா குழுமம் கட்டுமானம் செய்யவிருந்த முல்ஷி அணைக்கு, அருகில் இருந்த கிராமவாசிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதிலிருந்து மும்பையில் உள்ள ஆலைகளுக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய இருப்பதாகச் சொல்லி, போராட்டத்தைக் கைவிடுமாறு காந்தி அம்மக்களுக்கு கடிதம் எழுதினார். உலக வங்கி உதவியுடன் உருவாக இருந்த 'சர்தார் சரோவர்' அணை திட்ட வழக்கில், 2000 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததுபோல் இருந்தது காந்தியின் வாதம்.

அம்பேத்கர் உடனடியாக அதில் குறுக்கிட்டு, "காங்கிரஸ் சுதந்திரத்துக்காகப் போராடுகிறது என்பதைவிட, அது யாருடைய சுதந்திரத்திற்காகப் போராடுகிறது என்பதுதான் மிக முக்கியமானது" என்றார்.

**(ஏப்.14, அம்பேத்கர் பிறந்த நாள்)**

## அம்பேத்கர் மணிமண்டபத்தில் வீரவணக்கம்



சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 14.4.2014 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பட்டினப்பாக்கம் அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து மந்தவெளி விசாலாட்சித் தோட்டத்திலுள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப் பட்டது. இராயப்பேட்டை பெரியார் படிப்பகம் அருகில் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவிக்கப் பட்டது. இந்த நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், மண்டல செயலாளர் அன்பு தனசேகரன், மாவட்டத் தலைவர் ஜான், மாவட்ட அமைப்பாளர் சுகுமாறன் உள்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## வினாக்கள்... விடைகள்...!

- 'அம்மா'தான் பிரதமராக வேண்டும் என்பது "ஞானசம்பந்த சாமி"களின் கட்டளை. அவர் என் கனவில் வந்து கூறிவிட்டார்.– **மதுரை ஆதீனம்.**

  கனவில் வந்த 'ஞானசம்பந்தனும்' ஹெலி காப்டரில்தான் வந்தானா, 'சாமி'?

- அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு, அயோத்தியில் இராமன் கோயில் கட்டுவோம்.
  **– பா.ஜ.க. தேர்தல் அறிக்கை**

  புரியம்படி கூற வேண்டுமானால், "சட்டத்துக்கு உட்பட்டு" எப்படி பாபர் மசூதியை இடித்துத் தள்ளினோமோ, அதேபோல்! சரியா?

- காந்தி சமாதியில் 'மவுன விரதம்' நடத்த கெஜ்ரிவால், தனது ஆதரவாளர்களுடன் கூடியது சட்ட விரோதம்.
  **– தேர்தல் ஆணையம் நோட்டீஸ்**

  விடாதீங்க! தேசத் தந்தை சமாதியில் 'மவுன விரதம்' இருப்பதும், மக்கள் கூடுவதும், சட்ட விரோதம் மட்டுமல்ல, 'தேசத்துக்கே விரோதம்'. இதையெல்லாம் அனுமதிக்கவே முடியாதுங்க...

- தேர்தலில் ஓட்டுப் போட்டவர்கள் அடையாள 'மை'யை காட்டினால், மருத்துவ கட்டணம், பெட்ரோல் விலையில் சலுகை. **– செய்தி**

  தேர்தலில் ஓட்டுப் போடுவதற்கே 'லஞ்சம்' வந்துடுச்சா... கிழிஞ்சுது போங்க...

- 40 ஆண்டுகளுக்குப் பிறகு, தனக்கு திருமணமாகி மனைவி இருப்பதை மோடி ஒப்புக் கொண் டுள்ளார். **– செய்தி**

  ஒரு உண்மையை ஒப்புக் கொண்டாச்சு. இனப் படுகொலையை நடத்திய உண்மையை எப்போ ஒப்புக் கொள்வீங்க?

- தேர்தலையொட்டி கருப்புப் பணம் புழக்கத்தில் வரலாம். கண்காணிக்க அதிகாரிகள் எச்சரிக்கை.
  **– செய்தி**

  கருப்புப் பணம் மக்களிடம் புழக்கத்துக்கு வருவதே தேர்தல் காலத்தில்தான். அதையும் விட மாட்டீங்க....

- பா.ஜ.க. வேட்பாளர்களுக்கும் அ.தி.மு.க. வேட் பாளர்களுக்கும் வாக்களியுங்கள்! பா.ஜ.க.வின் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்! **– 'துக்ளக்' சோ**

  ஆக, பா.ஜ.க. வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளில் கூட்டணி கட்சிக்காரர்களின் ஓட்டுகள் விழுந்து விடாமல் தடுத்து, பா.ஜ.க.வை தோற்கடிக்க 'சோ' ஆசைப்படுகிறார் போல! நல்ல மனசு!

- நாட்டில் மோடி அலை வீசவில்லை; பா.ஜ.க. அலை தான் வீசுகிறது! **– பா.ஜ.க. தலைவர் முரளிமனோகர் ஜோஷி**

  அலை வீசுதோ, இல்லையோ! மோடிக்கு எதிராக பா.ஜ.க.வுக்குள் புயல் சுழன்று சுழன்று அடிக்குது!

- 45 நாட்கள் மீனவர்கள் மீன்பிடிக்க போக மாட்டார்கள். 'மீன்பிடி தடைக்காலம்' அமுலுக்கு வந்தது. **– செய்தி**

  அப்பாடா! நிம்மதி. தமிழக மீனவர்கள் சிங்களர் களால் தாக்கப்படும் செய்தியும் 45 நாட்களுக்கு வராது!

- தமிழகத்தில் அனல் பறக்கும் பிரச்சாரம்!
  **– பத்திரிகை செய்தி**

  பிரச்சாரம் இல்லாவிட்டாலும் கோடையில் அனல் தாங்க அடிக்கும்! ஏங்க, இப்படி காதுல பூ சுத்துறீங்க....

- அம்பேத்கர் இல்லாமல் போயிருந்தால் என்னைப் போன்றவர்கள் இன்றைக்கு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்க முடியாது.
  **– மோடி பேச்சு**

  உண்மைதான். இதற்காகத்தான் இந்துமதத்தை ஒழிக்கச் சொன்னார் அம்பேத்கர்! அது புரியாமல், 'இந்து ராஜ்யம்' அமைக்கக் கிளம்பியிருப்பது, அம்பேத்கருக்கு துரோகம் இல்லையா? ஓட்டுக்கு அம்பேத்கர்; கொள்கைக்கு ஆர்.எஸ்.எஸ்ஸா?

- இந்த "தமிழ் புத்தாண்டு" நாளில் நாட்டு மக்களுக்கு 'வரங்களை' அள்ளித்தர வேண்டும் என்று 'லட்சுமி தேவி', 'சரசுவதி தேவி'யை மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்.
  **– சென்னையில் மோடி பேச்சு**

  என்ன புரியாம பேசுறீங்க மோடி! தேர்தல் காலத்தில் அப்படி எல்லாம் 'தேவிகள்' 'வரங்களை' வாரி வழங்க முடியாது. அதற்கு தேர்தல் ஆணையத்தின் அனுமதி வேண்டும்.

- தி.மு.க., அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜ.க., காங்கிரஸ் உள்பட அனைத்துக் கட்சிகளும், ஓட்டுக்குப் பணம் தருவதை தடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் தனித்தனியாக வலியுறுத்தின.
  **– செய்தி**

  அதாவது, தங்கள் கட்சியைத் தவிர மற்ற கட்சிகள் பணம் தருவதைத் தடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே தனித்தனியாக போயிருக் கிறார்கள் போல! நியாயம் தானே!

DATE OF PUBLICATION 16.04.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ‘பனுவல்’ கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

சென்னை பனுவல் புத்தக விற்பனை நிலையம் சார்பாக ‘சமூகநீதி-2014’ என்ற தலைப்பில் கருத்தரங்கம், ஆவணப் படம் திரையிடல், புத்தக அறிமுகம், ஓவியக் கண்காட்சி, உரையாடல் என மார்ச் 29 முதல் தினமும் இரண்டு அமர்வுகளாய் நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 27 வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் 13.4.2014 ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 6 மணிக்கு (இரண்டாம் அமர்வில்) ‘நடுநிலை ஜாதிகளின் வளர்ச்சியும் சமூக பொருளாதார மாற்றங்களும்’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். பார்வையாளர்கள் எழுப்பிய இடஒதுக்கீடு தொடர்பான கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

### கழக வழக்கறிஞர் துரை. அருண்–கி. மணிமேகலை மணவிழா

கழக வழக்கறிஞர் துரை. அருண்-கி.மணிமேகலை (ஆசிரியர்) வாழ்க்கை இணை ஏற்பு நிகழ்வு 26.4.2012 சனிக் கிழமை மாலை சென்னை செ.தெ. நாயகம் பள்ளி அரங்கில் கழகத் தலைவர் கொளத் தூர் மணி தலைமையில் நிகழ்கிறது. விடுதலை இராசேந்திரன், லோகு. அய்யப் பன், வழக்குரைஞர் செ.விஜயகுமார் வாழ்த்துரை வழங்குகிறார்கள். வரவேற்புரை தபசி.குமரன்

### நன்கொடை

கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத் தலைவர் தி.குமார்-தேவிகா மகள் ஈழமொழி, ஒன்பதாம் ஆண்டு பிறந்த நாள் 15.4.2014 மகிழ்வாக, கழக ஏட்டிற்கு ரூ.500 நன்கொடை வழங்கினர்.

### பெயர் சூட்டல்

1.4.2014 செவ்வாய்க் கிழமை காலை 11 மணிக்கு சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் சிந்தாமணியூர் முருகேசன் - ஹேமமாலினி இணையரின் ஆண் குழந்தைக்கு ‘சித்தார்த்தன்’ என்று கழகத் தலைவர் பெயர் சூட்டினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கட்டுக்கு அடங்காமல் போவதை எச்சரித்தும் மாநில உளவுத் துறை அனுப்பிய தந்திச்செய்திகளை புறந்தள்ளியது விசாரணைக் குழு.

- கொலைகாரர்களுக்கு எதிரான தொலைபேசி உரையாடல், உளவுத்துறை மாநில அரசுக்கு அனுப்பிய எச்சரிக்கை தந்திகள் விசாரணைக்கு ஏற்கப்படாத நிலையில், சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தந்த சாட்சியங்களால்தான் இருவருக்கும் ஆயுள் தண்டனை கிடைத்தது. மத்திய பாதுகாப்புப் படை பாதுகாப்பை உச்சநீதிமன்றம் சாட்சிகளுக்கு வழங்கியிருக்காவிடில், இதுவும் நடந்திருக்காது. மாநில அரசே சாட்சிகளை மிரட்டி குற்றவாளிகளை மோடியைப் போல் தப்பிக்கவிட்டிருக்கும்.
- பூர்வாங்க விசாரணை என்று கூறிக் கொண்டு மோடி உள்ளிட்ட 63 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யாமலே (FIR) புலனாய்வுக் குழு விசாரணை நடத்தியது. மோடி ஒரே ஒரு முறை மட்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அவர் வாக்குமூலத்தில் முரண்பாடுகள் பல இருந்தும் சிறப்புப் புலனாய்வுக்குழு எந்த குறுக்குக் கேள்வியும் கேட்காமல் அவரது வாக்குமூலத்தை அப்படியே பதிவு செய்து கொண்டது. குற்ற நடவடிக்கை சட்டம் 161 ஆவது பிரிவின் கீழ் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. அப்படி பதிவு செய்யப்பட்டிருந்தால் சட்டத்தின் பிடிக்குள் மோடி கொண்டுவரப்பட்டிருப்பார். 69 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டு, நெருப்பில் போட்டுக் கொளுத்திய கொலை வெறியாட்டம் பற்றி ஒரு முதலமைச்சர் 5 மணி நேரத்துக்குப் பிறகுதான் தனக்கு தெரிய வந்தது என்று கூறியதை புலன் விசாரணை நடத்திய ராகவன் குழு, எந்த சந்தேகமும் எழுப்பாமல் ஏற்றுக் கொண்டது தான் அதிசயம். ‘குல்பர்கா சொசைட்டி’ முஸ்லிம்கள் குடியிருப்பில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதை மோடி ஆட்சி, மூடி மறைத்து குற்றவாளிகளை தப்பிக்கச்செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டது என்று உச்சநீதிமன்றமே ஒப்புக் கொண்டது. ஆனால், வேடிக்கை என்னவென்றால், இந்த கொலைகளை மூடி மறைப்பதற்கு உதவிய காவல்துறை அதிகாரியையே சிறப்பு விசாரணைக் குழுவில் ஒருவராக நியமிக்கப்பட்டது தான் இதற்கு அதே உச்சநீதிமன்றம் அனுமதித்தது.
- இந்த வழக்கில் விசாரணையை கண்காணிக்கவும், நண்பராக உதவிடவும் (அமிகஸ் கியூரே), ராஜி ராமச்சந்திரன் என்ற வழக்கறிஞரை உச்சநீதிமன்றம் நியமித்தது. சிறப்புப் புலனாய்வுக் குழு, மோடி மீது வழக்குப் பதிவு செய்வதற்கு முகாந்திரமில்லை என்று தப்பிக்க விட்டாலும், மதப்பகையை தூண்டிவிட்ட குற்றச்சாட்டில் மோடி மீது வழக்குப் பதிவு செய்திருக்க முடியும் என்று, அவர் தனது அறிக்கையில் கூறினார். ‘இந்துக்கள் வெளிப்படுத்தும் கோபத்தை தடுக்க வேண்டாம்’ என்று உயர் போலீஸ் அதிகாரிகள் கூட்டத்தில் மோடி கூறியதை வெட்டவெளிச்சமாக்கிய அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற போலீஸ் அதிகாரி சஞ்சீவ் பட்டின் சாட்சியத்தை புலனாய்வுக் குழு ஏற்கவில்லை. ஆனால், ‘அமிகஸ்கியூரே’வாக செயல்பட்ட ராஜி ராமச்சந்திரன், “இந்த போலீஸ் அதிகாரியின் சாட்சியம் உண்மைதானா என்பதை உச்சநீதிமன்றம் தான் முடிவு செய்திருக்க வேண்டுமே தவிர புலனாய்வுக்குழு அல்ல” என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் பொறுப்புக்கு உச்சநீதிமன்றம் ஆர்.கே.ராகவனை நியமித்ததே சரியான தேர்வு அல்ல. ராஜீவ் கொலை நடந்தபோது, தமிழ்நாட்டில் காவல்துறை தலைமை அதிகாரியாக இருந்த அவருக்கு, ராஜீவ் பாதுகாப்புக்கான பொறுப்பு அளிக்கப்பட்டது. ராஜீவ் காந்திக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யத் தவறியதாக ராஜீவ் பாதுகாப்பு குறைபாடுகள் பற்றி விசாரித்த ராகவன், வர்மா ஆணையத்தின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவர். எனவே குஜராத் கலவரத்தில் மோடிக்கு தொடர்பில்லை என்று சிறப்புப் புலனாய்வுக் குழு தந்த அறிக்கை ஒரு சார்பானது. அந்தக் குழு நடத்திய விசாரணை நேர்மையற்றது. மோடியை தப்பிக்கச் செய்ய வேண்டும் என்ற உள்நோக்கம் கொண்டது.

ஆதாரம் : (The Fiction and Fact Finding-மனோஜ் மித்தா நூல்)

# மோடி மனைவி இருப்பதை கூற வைத்த ‘அம்மன்’ பட்டுப் புடவை



பா.ஜ.க. கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, தனது மனைவி பெயரை அறிவித்ததன் பின்னணியில் காஞ்சி காமாட்சியம்மன் இருப்பதாக அக்கோயில் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலில் கடந்த மார்ச் 14 ஆம் தேதி உலக நன்மை வேண்டி ஸ்ரீதச மஹா வித்யா ஹோமம் தொடங்கியது. மார்ச் 23 ஆம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற்றது. இதில் பா.ஜ.க. தேசிய செயலர் முரளிதர ராவ், தமிழ்நாடு மாநில துணைத் தலைவர் எச்.ராஜா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இதன் பிரசாதத்தை கோயில் பிரதான அர்ச்சகர் நடராஜ சாஸ்திரி எடுத்துக் கொண்டு மார்ச் 26 ஆம் தேதி டெல்லியில் உள்ள மோடியை சந்தித்து கொடுத்துள்ளார். பிரசாதத்தில் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டுப் புடவையும் இருந்துள்ளது. இந்த பட்டுப் புடவையை கொண்டு சென்ற நடராஜ சாஸ்திரி, “இந்தப் புடவையை உங்கள் மனைவியிடம் கொடுங்கள்” என்று மோடியிடம் கூறினாராம். சற்று மௌனம் காத்து, பின்னர் வியந்துபோய் நரேந்திர மோடி பிரசாதத்தை பெற்றுக் கொண்டாராம். அம்பாள் பக்தரான நரேந்திர மோடி, காமாட்சியம்மனின் பட்டுப் புடவை வழங்கப்பட்டதையும், அதை அவரது மனைவியிடம் கொடுக்குமாறு கூறியதையும் காமாட்சியம்மனின் உத்தரவாக எடுத்துக் கொண்டார். அதன் பிறகே வேட்புமனு தாக்கலின்போது, தனது மனைவியின் பெயரை குறிப்பிட்டார் என்று அக்கோயில் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

இது குறித்து நடராஜ சாஸ்திரியிடம் கேட்டபோது, நரேந்திர மோடியை சந்தித்ததும், அவருக்கு அம்மனின் பட்டுப் புடவை வழங்கப்பட்டதும் உண்மை. இதன் பின்னரே அவருக்கு மனமாற்றம் ஏற்பட்டு மனைவி பெயரைத் தெரிவித்துள்ளார் என்றார் அவர். ‘தமிழ் இந்து’ நாளேடு (ஏப்.15) இதை வெளியிட்டுள்ளது.

## சேலம் மாவட்ட கலந்துரையாடல் எழுச்சி:


# மாதந்தோறும் கழகத்துக்கு நிதி



சேலம் மாநகர், சேலம் மேற்கு, சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களின் கலந்துரையாடல் கூட்டம் 1.4.2014 அன்று சிந்தாமணியூர் இரவி தோட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொருளாளர் ஈரோடு ப.இரத்தினசாமி முன்னிலையிலும் நடைபெற்றது. மயிலாடுதுறையில் நடைபெற்ற செயலவையின் தீர்மானங்களை விளக்கி கழகத் தலைவர் உரையாற்றினார். கழகப் பொருளாதார நிலை குறித்து ஈரோடு ப. இரத்தினசாமி உரையாற்றினார். சிந்தாமணியூர் ஜெயபிரகாஷ், மாதம் ஆயிரம் ரூபாய் கழகத்திற்கு வழங்குவதாக உறுதி கொடுத்து முதல் தவணையை வழங்கினார். மேலும் தலைமைக் கழக நிர்வாக செலவுகளுக்காக ஆண்டுக்கு மூன்று ஆயிரம் ரூபாய் வழங்க ஒருவரும், ஆண்டுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்க மூன்று பேரும், ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வழங்க 31 பேரும், ஆண்டுக்கு ஐநூறு ரூபாய் வழங்க மூன்று பேரும் ஒப்புதல் வழங்கினர். பரப்புரை வாகனத்திற்கு தங்களின் குடும்பம் சார்பாக நன்கொடையாக சுமார் ரூ.1,50,000 வழங்க உறுதி கொடுத்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 17th April 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஏப்ரல் 24, 2014 | புரட்சி 13 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00


## கழகத் தலைவர் கொளத்தூர் மணி வேண்டுகோள்

# ஆர்.எஸ்.எஸ். பிடிக்குள் செயல்படும் பா.ஜ.க.வை தோற்கடிப்பீர்!




16-04-2014 புதன்கிழமை அன்று மாலை 6-30 மணியளவில் திருவாரூர் மாவட்டம் மன்னார் குடியில், "மதவாத பா.ஜ.க" விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக நடைபெற்ற இந்த பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் காளிதாசு தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, முனைவர் ஜீவானந்தம், தோழர் ஜேம்ஸ், கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், தஞ்சை மாவட்ட அமைப்பாளர் பாரி, முதலானோர் உரையாற்றினர். நிகழ்ச்சியின் துவக்கமாக பள்ளத்தூர் நாவலரசன் கலைக்குழு வினரின் மதவாதத்திற்கு எதிரான இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

17-04-2014 வியாழக்கிழமை அன்று மாலை 6-00 மணியளவில், கோவை ஒண்டிபுதூர் சுங்கம் மைதானத்தில், திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, "மதவாத பா.ஜ.க" விளக்கப் பொதுக் கூட்டம், கோவை நாடாளுமன்ற தொகுதியில் சி.பி.ஐ(எம்) கட்சியின் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் பி.ஆர்.நடராஜன் அவர்களை ஆதரித்து நடைபெற்றது. தோழர் பத்மநாபன் வரவேற்புரை ஆற்றினார். வழக்குரைஞர் ந.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார். இப்பொதுக் கூட்டத்தில் தோழர் வெள்ளமடை நாகராஜன், சிபிஐ கதிர்வேல், சேலம் CPI மாநிலக்குழு ஜீவானந்தம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட செயலாளர் சிவஞானம், CITU மாநிலத் தலைவர் பத்மநாபன், தமிழர் விடுதலை இயக்கம் வெண்மணி முதலானோர் உரையாற்றினர்.

இரண்டு கூட்டங்களிலும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் சாரம்:

எங்களுடைய இந்த தேர்தல் நிலைப்பாடு, இது வரை எங்களோடு, தோளோடு தோள் நின்று பல வேறு இயக்கங்களை முன்னெடுத்த தலைவர்களுக்கு கூட எதிரானதுதான். தமிழ்நாட்டில் அது ஈழ சிக்கலாக இருந்தாலும், மரண தண்டனைக்கு எதிரான போராட்டமாக இருந்தாலும், அணு உலைக்கு எதிரான போராட்டமாக இருந்தாலும் அல்லது முல்லை பெரியாறு போன்ற உரிமை பிரச்சினையாக இருந்தாலும் நாங்கள் அதிகம் இணைந்து போராடிய இயக்கமாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் இருந்திருக்கிறது. அவர்களின் போராட்ட உணர்வுகளுக்கு எங்களது நன்றி, மதிப்பு எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கும்; ஆனால் அவர்களின் தேர்தல் நிலைப் பாட்டில் எங்களுக்கு உடன்பாடு இல்லை.

இந்த விவகாரத்தை முதன் முதலில் 'ஜூனியர் விகடன்' தொடங்கி வைத்தது. இப்படி ஒரு கூட்டணியை உருவாக்குவதற்காக தமிழருவி மணியன் எழுதினார். மோடி பிரதமரானால் பாலாறும், தேனாறும் ஓடும் என்பதைப் போல தொடர்ந்து எழுதத் தொடங்கினார். காங்கிரசுக்கு மாற்றுக்கு இவர்கள் தான் என்பதை முன்மொழிந்து எழுதினார். சில வாரங்கள் பார்த்து பொறுமையாக இருக்க முடியாமல், அதற்கு எதிரான முதல் கட்டுரையை நாங்கள் தான் எழுத தொடங்கினோம். அதில் இறுதியாக முடிக்கும் போது 'சட்டி சுடுகிறது தான்; அதற்காக அடுப்பில் குதிக்க முடியுமா?' என்று எழுதினோம். காங்கிரஸ் மோசமான கட்சிதான் ஒப்புக்கொள்கிறோம்; அதற்காக பாரதிய ஜனதாவையா கொண்டு வரமுடியும்? என்று எழுதியதற்கு தமிழருவி மணியன் ஒரு பதில் எழுதினார். மீண்டும் ஒரு மறுப்பை நாங்கள் எழுதி னோம். பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் அமைதி குலைந்துவிடும், (வாக்கு கேட்கும் போதே அமைதி குலைகிறது) திருவாரூர் மாவட்டம் மல்லிபட்டணத்தில் தடுத்தார்கள், சண்டை வந்தது, முடிந்தது; ஆனால் அதன் தொடர்ச்சியாக மன்னார்குடியில் உள்ள இஸ்லாமியர்களின் ஜவுளிக் கடைகளை அடித்து நொறுக்கிறார்கள். எனவேதான் பா.ஜ.க. வை தேர்ந்தெடுக்கக் கூடாது என்றும், மோடி பிரதமராக ஆகக் கூடாது என்றும் தொடர்ந்து விளக்கி வருகிறோம்.

எப்போதும் கட்சி - ஆட்சி என்பது மக்களுக் கானதாக இல்லை; முதலாளிகள் தங்களுக்கு வேண்டி யவர்களை வைத்திருப்பார்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தல் முடிந்தவுடன், அமைச்சர் பதவி வேண்டி பிரதமரையோ, கட்சி தலைவரையோ யாரும் கேட்கவில்லை; 'கார்ப்பரேட்' தரகர் நீரராடியாவை சந்தித்தார்கள். அமைச்சரை நியமிக்கும் அதிகாரம் டாடா கம்பெனிக்கு இருப்பதை அறிகிறார்கள். எனவே டாடாவிடம் பரிந்துரை செய்ய சொல்லி நீரராடியாவிடம் சென்றார்கள். அமைச்சர்களை நியமிப்பது உள்ளூர் முதலாளிகள் என்றால், பிரதமரை நியமிப்பது வெளிநாட்டு - அன்னிய முதலாளிகள்.

இந்திய பெரும் முதலாளிகள் நூறு பேரிடம், கடந்த மார்ச் மாதம் 'எகனாமிக் டைம்ஸ்' ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது. இதில் 74 பேர் மோடி பிரதமராக வேண்டும் என்று கூறியுள்ளார்கள். இவ்வளவு நாட்கள் மன்மோகனை ஆதரித்தவர்கள்

(2 ஆம் பக்கம்)

### மோடி: சிறப்பு வினா–விடை

+ ரஜினிகாந்தின் அருணாச்சலம் படத்தில் ஒரு காட்சியில் நடித்த குரங்கு மரணம். ரஜினி ரசிகர்கள் இறுதி மரியாதை. **– செய்தி**

அச்சச்சோ... முக்கிய சாவு ஆச்சே; மோடிக்கு சேதி சொல்லியாச்சா?

+ அரசியல் நோக்கத்தோடு மோடியை நான் சந்திக்கவில்லை. **– நடிகர் விஜய்**

அது எங்களுக்கும் தெரியுமுங்க... ரசிகர் மன்றத்தை இவ்வளவு பலமா, எப்படி உருவாக்கினீங்கன்னு மோடி கிட்ட ஆலோசனை கேட்கத்தான், போயிருப்பீங்க... அப்படித்தானே?

+ தமிழகத்தைச் சார்ந்த ஒரு பெண்தான் தமிழ்நாட்டுக்கும், நாடு முழுமைக்கும் வரவேண்டிய திட்டங்களை முடக்கினார். **– ஈரோட்டில் மோடி**

யாருங்க, அந்தப் பெண்? பெண்கள் பிரச்சினை என்றாலே, மோடி எப்போதும் புதிர் போடுவதே வழக்கமாயிடுச்சு!

+ மோடியை எதிர்ப்பவர்கள் தேர்தலுக்குப் பிறகு இந்தியாவை விட்டு பாகிஸ்தானுக்கு ஓடிவிட வேண்டும். **– பீகார் பா.ஜ.க. தலைவர் கிரிராஜ் சிங்**

மோடிக்குத்தான் 'விசா' கிடைக்காது; மக்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை.

+ சோனியாவும் ராகுலும் 'ரிமோட் கன்ட்ரோல்' மூலம் நாட்டை ஆள்கிறார்கள். **– மோடி குற்றச்சாட்டு**

சோனியாவுக்கு 'ரிமோட் கன்ட்ரோல்', மோடிக்கு 'ரிலிஜியஸ் கன்ட்ரோல்' அவ்வளவுதான் வித்தியாசம்.

+ மோடியின் 'டீக்கடை' பிரச்சாரத் திட்டத்துக்கு ஆதரவில்லை. **– 'டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தி**

'கசாப்புக் கடை' பிரச்சாரத்தைத் தொடங்கினால் நல்ல ஆதரவு கிடைக்கும்; யோசிங்க!

+ குஜராத்தில் சட்டமன்றத்தை ஆண்டுக்கு 23 நாட்களுக்கு மேல் மோடி கூட்டியதே இல்லை. 2 நாட்களிலேயே எதிர்க்கட்சிகள் 'சஸ்பென்ட்' செய்யப்பட்டுவிடுவார்கள். **– மத்திய அமைச்சர் ஆனந்த் சர்மா**

சட்டசபைக்கு எதுக்கு வீண் செலவு? இதுதான் மோடியின் நிர்வாகத் திறமை, புரிஞ்சுக்குங்க!

தலையங்கம்

## ‘ஏழு தமிழர் விடுதலை’யை அரசியலாக்குவதா?

உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு சதாசிவம் கோவையில் 18-04-2014 அன்று நடைபெற்ற நீதிபதிகளின் மாநாட்டின் முடிவில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் சாந்தன், முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரின் விடுதலை குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் “வழக்கின் தீர்ப்பினை ஒரு வாரத்திற்குள் (தான் ஓய்வு பெறும் நாளுக்கு முன்னதாக) வழங்கப்படும், அதுவரைப் பொறுத்திருங்கள்” எனக் கூறியுள்ளார்.

அவரது பதவிக்காலம், அவரது பிறந்த நாள் அடிப்படையில் 26-04-2014 - உடன் நிறைவடைகிறது. அந்த அடிப்படையில் 25-04-2014க்குள் தீர்ப்பு வழங்கப்படும் என்றும், அதுவரை பொறுத்திருங்கள் என்றும் கூறியுள்ளார். அவர் பேட்டியில் கூறியிருக்காவிட்டாலும், எந்த ஒரு நீதிபதியும் தான் விசாரித்த வழக்குகளின் தீர்ப்பை, தான் ஓய்வு பெறுவதற்கு முன்னதாக வழங்குவது என்பது மரபான ஒன்றுதான். ஆனால் ஏதோ 24-04-2014 அன்று தமிழ்நாட்டில், நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குப்பதிவு நடைபெறுவதைக் கணக்கில் கொண்டே, பேட்டி கொடுக்கப்பட்டதைப் போல, தலைமை நீதிபதியின் இயல்பான பேட்டியை விமரிசனம் செய்து தி.மு.க. தலைவர் கலைஞர் தனது தேர்தல் பரப்புரையில் கூறியிருப்பது அனைவரையும் முகம் சுளிக்கச் செய்துள்ளது.

மரண தண்டனையிலிருந்து மீண்டுள்ள சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவர் உள்ளிட்ட எழுவரையும் விடுவிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டா? இல்லையா? என்பதே வழக்கின் அடிநாதமாய் உள்ள பொருளாகும். அவ்வழக்கில் சாதகமான தீர்ப்பு வந்தால் கலைஞர் தொடர்ந்து எழுப்பிவரும் “ மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி “ எனும் கருத்துக்கு வலுசேர்ப்பதாகவே அது அமையும். எதையும் அரசியலாக்கி அரசியல் சதுரங்கம் விளையாடுவதைப் போலவே - தமிழின உணர்வாளர்களும், மனிதநேயப் பற்றாளர்களும் ஏங்கி எதிர்பார்த்து நிற்கும் தீர்ப்பு குறித்த அறிவிப்பையும் அரசியலாக்குவது ஒரு முதிர்ந்த அரசியல் தலைவருக்கு அழகல்ல.

இருபத்து மூன்றாண்டு காலம் சிறையில் வாடும் எழுவருக்கும், அது போலவே இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறைகளில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகள் போன்றோருக்கான விடுதலைக்கும் முன்னோடியாக உள்ள இத்தீர்ப்பு குறித்து திசைதிருப்பும் திருகல் வாதங்களை முன்வைக்கும் கலைஞரின் சுயநல அரசியல் போக்கைத் திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

நீண்ட நெடிய உச்சநீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக ஒரு தமிழர் தலைமை ஏற்று அமர்ந்துள்ளார். அவரது குறைவான பதவிக் காலத்தில் முத்திரைப் பதிக்கும் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளார்.

தனது தீர்ப்புகளில் எல்லாம் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் மேற்கோள்களைப் பொருத்தமாக சுட்டிக்காட்டித் தீர்ப்பை எழுதும் பழக்கமுள்ள அவர், பதினைந்து பேர்களின் மரண தண்டணையை ஆயுள் தண்டணையாக குறைத்து வழங்கிய தீர்ப்பிலும் எதையும் அழுத்தம் திருத்தமாக, தெளிவாக சொல்வதில் நமது அரசியல் சட்டம் பெரிதும் மதிக்கப்படுகிறது என்றே தீர்ப்புரை தொடங்குகிறது. மேலும், அரசின் எந்நிலையில் உள்ளோர் பிறப்பித்த ஆணையாக இருந்தாலும் அதைப் பரிசீலிக்கிற உரிமையை நீதிமன்றங் களுக்கு வழங்கியுள்ள பிரிவு 32ஐக் குறிப்பிட்டு அம்பேத்கர் கூறியுள்ள மேற்கோளையும் எடுத்துக் கூறியே, தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்றத்துக்கு விடுமுறை அறிவிக்கலாம். அதை பயன்படுத்தியே முன்னாள் தலைமை நீதிபதியாக இருந்த மாண்புமிகு கே.ஜி. பாலகிருஷ்ணன் கேரளத்தவர் என்பதால் ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அறிவித்தார். ஆனால் மாண்புமிகு சதாசிவம் அவர்களோ புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14-ஐ உச்ச நீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக விடுமுறை அறிவித்து அம்பேத்கருக்கு தனது நன்றியை, மரியாதையை வெளிப்படுத்தினார்.

சட்ட உதவி மையம் என்பது நீதித் துறையில் போதிய நிதியின்றி திணறியபடி இயங்கிவந்த அவல நிலையை மாற்றி, ஏழை எளிய மக்களும் தங்களுக்கான நீதியைப் பெறுவதற்கு வாய்ப்பாக அரசே தனியாக சட்ட உதவி வாரியத்தை உரிய நிதி ஒதுக்கீடோடு அமைத்திட வேண்டுமென அவர் பரிந்துரைத்து வழிவகை கண்டது அடித்தட்டு மக்களின் நலனில் அக்கறையுள்ள அனைவரும் போற்றி வரவேற்ற ஒன்றாகும்.

மேலும், மனித மலத்தை மனிதனே அள்ளும் கொடுமைக்கு முடிவுகட்டி வழங்கிய தீர்ப்பும் மனிதநேயர் அனைவரின் வரவேற்பையும் பெற்றது.

உச்ச நீதிமன்ற நீதிபதி காலத்தில், ஸ்டெய்ன்ஸ் பாதிரியார் வழக்கில் தண்டனை பெற்ற தாராசிங்கின் தண்டனையை உறுதி செய்தது, தனியார் முதலாளிகளின் நலனுக்குக்காக மக்களின் நலனுக்கு எதிராக நிலங்களை கையகப்படுத்தல் கூடாது என்ற அறிவுரையோடு, கெய்ல் நிறுவன நில ஆக்கிரப்பை எதிர்த்து தீர்ப்பு, பாலியல் வழக்கில் குற்றவாளிகளுக்கு கருணை காட்டி சிறையில் இருந்த காலத்தை தண்டனையாகக் கருதி விடுவிக்கும் போக்கைக் கண்டிக்கும் குறிப்புரையோடு அவ்வழக்குகளில் தண்டனைகளை உறுதி செய்தது, புகழ் பெற்ற நடிகரான சஞ்சய்தத்துக்கு ஐந்தாண்டு தண்டனையை வழங்கியது என பல முத்திரைத் தீர்ப்புகளை வழங்கியவர் நீதிபதி சதாசிவம்.

அவ்வாறான ஒரு நீதிபதியை, தமிழருக்கு, தமிழ்நாட்டுக்குப் புகழ் சேர்த்த ஒரு நீதிபதியை, தன் சுயநல அரசியல் நோக்கத்திற்காகக் களங்கப்படுத்துவது கண்டிக்கத்தக்கதும், அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

**– கொளத்தூர் மணி**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

## ‘இந்து’ பாதுகாப்பு என்ற பெயரில் ‘பார்ப்பனப்’ பாதுகாப்பு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இப்போது ஏன் இவர் பக்கம் வருகிறார்கள்? அவரை விட இவர் நமக்கு கூடுதலாக பயன்படுவார் என்று நம்புகிறார்கள். தேர்தல் நடைபெறும் நேரத்தில் எந்த புதிய திட்டத்தையும் நிறைவேற்றக் கூடாது என்ற விதிமுறை இருக்கும்போது, அவசர அவசரமாக தற்போது மீண்டும் கூடங்குளத்தில் மூன்று, நான்காவது அணு உலைகளை அமைப்பதற்கு ஒப்பந்தம் போடப்படுகிறது. காங்கிரசுக்காவது இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. 1996 ஆம் ஆண்டில் 13 நாட்கள் மட்டுமே பி.ஜே.பி ஆட்சியில் இருந்தது. ஆட்சி முடியும் கடைசி நாளில் அமைச்சரவையை கூட்டி இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது; அதில் ஒன்று, மராட்டியத்தில் இயங்கும் அமெரிக்கா நிறுவனமான ‘என்ரான்’ என்ற ஒரு மின் உற்பத்தி நிறுவனத்திற்கு அனுமதி அளிப்பது.

மன்மோகன் சிங் முதன்முதலில் நிதி அமைச்சராக வந்த போது அவரை யாருக்காவது தெரியுமா? அதுவரை அவர் எந்த பொதுத் தேர்தலையும் சந்தித்திருக்கவில்லை, கட்சியின் உறுப்பினராகவும் இல்லை. அடுத்த தேர்தலில் அவர்தான் பிரதமராக வருகிறார். அவர் நிதியமைச்சர் ஆனவுடன் கொண்டுவந்தது தான் ‘உலக மயமாக்கல்’.

இந்த நாட்டை இறையாண்மை உள்ள, மதசார்பற்ற, சோசலிச ஜனநாயகக் குடிஅரசு என்று சொல்வார்கள். எங்கள் நாட்டு முடிவுகளை, நாங்கள் முடிவு செய்துகொள்வோம் என்பது தான் இறையாண்மை. ஆங்கிலேய ஆட்சியின் போது காங்கிரஸ்காரர்கள் சொல்வார்கள், அதையே கிராமிய பாடல்களிலும் சொல்வார்கள் ‘ஊரான் ஊரான் தோட்டத்துல ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்காய்; காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி காகிதம் போட்டானாம் வெள்ளக்காரன்’ என்று. இப்போது இந்தியாவை பார்த்து ‘உன் நாட்டில் நீ கல்விக்கு மானியம் தரக் கூடாது - வேளாண்மைக்கு மானியங்களை குறைத்துக் கொள்ளவேண்டும் - மருத்துவம் உள்ளிட்ட சேவை துறைகளுக்கு செலவு செய்யவேண்டாம்’ என்று உலக வங்கி சொல்கிறது; ஆக இறையாண்மை கிடையாது. மதச் சார்பின்மை என்பதை பேசவே வேண்டியதில்லை. அரசு நிகழ்ச்சிகள் எல்லாம் பூஜை போட்டே தொடங்கப்படுகின்றன. இது சோசலிச நாடா? என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். சோசலிசம் என்பதை கட்சியின் கொள்கையாக ஏற்பதற்கு ஒரு மாநாடு நடத்தினார்கள். ஆவடி காங்கிரஸ் மாநாட்டில்தான் சோசலிச மாதிரி சமுதாயம் (எச்சரிக்கையாக, சோசலிச சமுதாயம் என்று சொல்லாமல்) என்றார்கள்; பின்னர் அதை ஜனநாயக சோசலிசம் என்று மாற்றினார்கள்; 1976 ஆம் ஆண்டு சட்டத்திலும் சேர்த்தார்கள். இப்படி எல்லாம் சேர்க்கப்பட்ட வார்த்தை 1990 ஆம் ஆண்டு காணாமல் போனது; தனியார்மயம், தாராளமயம் என்று பேசுகிறார்கள்; ஆக சோசலிசம் என்பதற்கு பொருளே இல்லை. எஞ்சி இருக்கிற ஜனநாயகம், குடிஅரசு எப்படி இருக்கிறது என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டும்.

எல்லா கட்சிகளும் மக்களிடம் வாக்கு கேட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சி நடத்துவது ஜனநாயகம். ஆட்சி நடத்தும் கட்சியின் தலைவர் ஆலோசனைகளை கொடுப்பார்; கட்சி தலைமைக் குழு திட்டங்களை தீட்டிக் கொடுக்கும் அல்லது வழிநடத்தும். எல்லா கட்சிக்கும் உள்ள அந்த உரிமை பாரதிய ஜனதா கட்சிக்கு மட்டும் கிடையாது. அவர்கள் திட்டம் தீட்டி எந்த முடிவும் எடுக்க முடியாது; அவர்கள் சுதந்திரமாக இயங்க முடியாது. இவர்களை இயக்குவதற்கு வேறு ஒரு அமைப்பு இருக்கிறது, அது தான் ஆர்.எஸ்.எஸ்.

பி.ஜே.பி என்பது தானாக இயங்கும் கட்சி அல்ல; தேர்தலில் போட்டியிடும் முகமூடிகள் இவர்கள்; முகமூடிக்கு பின்னால் இருப்பவர்கள் அவர்கள். பாரதிய ஜனதா கட்சியின், பரப்புரை குழுத் தலைவராகத் தான் மோடியை முதலில் தேர்ந்தெடுத்தார்கள். இதனால் அதுவரை இலவு காத்த கிளியாக பிரதமர் கனவில் இருந்த அதன் மூத்த தலைவர் அத்வானி அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகுவதாக சொன்னார். கட்சியின் சிக்கல் - கருத்து வேறுபாடு வெளியில் தெரிய வேண்டாம் என பலரும் பேசினார்கள் நேரில் போய் பேசி னார்கள் - குழுவாக போய் பேசி னார்கள் ஆனால் எதற்கும் சமாதான மாகாதவர், ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் ‘இதோடு விட்டுவிட்டு இணைந்து செயலாற்றுங்கள்’ என்று தொலைபேசியில் சொன்னவுடன் அடுத்த நாளில் இருந்து அமைதியாகி விட்டார். ஆக இவர்கள் கட்சியின் தலைமைக் குழுவோ, செயற்குழுவோ சொல்லி கேட்கமாட்டார்கள்; ஆர்.எஸ்.எஸ் சொன்னால் மட்டும் கேட்பார்கள்.

ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு முறை குருதட்சணை என்ற நாளில் ஆர்.எஸ்.எஸ். தலைவரைச் சந்தித்து நன்கொடை வழங்கும் வழக்கப்படி ஆர்.எஸ்.எஸ். தலைவரை சந்திக்கப் போன வாஜ்பாயியிடம், ‘உங்கள் வேட்பாளர்களில் 73 பேருக்கு ஆர்.எஸ்.எஸ் என்றால் என்னவென்றே தெரியவில்லை; அவர்களுக்கெல்லாம் சீட்டு கொடுத்துள்ளீர்கள்; இது தவறான போக்காகும், நாங்கள் ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவை நியமிப்போம், அந்த குழுவிடம் ஒப்புதல் பெற்று தான் வருங்காலத்தில் நீங்கள் வேட்பாளர்களை இறுதி செய்யவேண்டும்’ என்று அன்றைய ஆர்.எஸ்.எஸ். தலைவர் சொன்னார். வாஜ்பாயியும் ஏற்றுக் கொண்டார்; இது அனைத்து நாளேடுகளிலும் செய்தியாக வந்தது. ஆக இவர்கள் செயல்படுத்துவது ஆர்.எஸ்.எஸ் திட்டத்தை, எனவே ஆர்.எஸ்.எஸ்-இன் கொள்கை என்னவென்று நாம் பார்க்கவேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தொடங்கிய அதே 1925 ஆம் ஆண்டுதான் ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் தொடங்கப்பட்டது. அதற்கு முன்பே இந்துத்துவா வந்துவிட்டது; வி.டி.சாவர்க்கர் கொண்டு வந்துவிட்டார். இதைத் தொடங்கிய ஐவர் குழுவில் வி.டி. சாவர்க்கரின் அண்ணன் பாபா ராவ் சாவர்க்கரும் இருந்தார். அதை சொல்லுவதற்கு தயங்குவார்கள். கோல்வால்கர் பின்னாளில் புத்தகம் எழுதியிருக்கிறார். வி.டி.சாவர்க்கர் எழுதிய ஆங்கில நூலின் ஒரு பாதியையும், பாபாராவ் சாவர்க்கர் எழுதிய ஒரு பாதியையும் சேர்த்து எழுதினார். ஆக இவர்களின் கொள்கை என்பது ஆர்.எஸ்.எஸ் சாவர்க்கர் போன்றோரின் கொள்கைகள் தான்; அது தான் இந்துத்துவம்.

இவர்கள் நேரடியாக பேசுவதில்லை; இந்துக்களுக்கு பாதுகாப்பு என்றால் பார்ப்பனர்களுக்கு பாதுகாப்பு என்று பொருள். நலிந்தவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு என்று நரசிம்மராவ் சட்டம் கொண்டுவந்த போது, மிகக் கவனமாக தெளிவாக

(3 ஆம் பக்கம்)

# ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்ட 3 பேரை அமைச்சராக்கியவர் மோடி

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சொல்லைப் போட்டார் அப்போது யாரும் அதைக் கவனிக்கவில்லை. இட ஒதுக்கீட்டில் வராத பிரிவினரில் ஏழைகளுக்கு 10 சதவீதம் என்றால் அவர்கள் உயர் ஜாதிக்காரர்கள் தான். (அவர்கள் எண்ணிக்கையே 10 சதவீதம் தான்) அது போலவே இந்துத்துவம் என்றால் ஒட்டுமொத்த இந்துக்கள் நன்மைக்கு என்று தவறாக பலரும் புரிந்து கொள்கிறார்கள்.

இவர்களின் பழைய கட்சி பாரதிய ஜன சங்கம். ஜனதா கட்சியில் இணைந்து, இரட்டை உறுப்பினர் முறை இருக்கக் கூடாது (ஜனதா கட்சியில் இருப்பவர்கள் ஆர்.எஸ்.எஸ்-இல் இருக்கக் கூடாது) என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து, பாரதிய ஜன சங்கம் வெளியேறிவிட்டது. 'இவர்கள் "பிராமனிஸம்" என்பதை தான் ஹிந்துயிஸம் என்று எங்களை ஏமாற்றுவதற்கு சொல்லிக்கொண்டிருக் கிறார்கள், அவர்கள் சிந்தனை முழுவதும் பார்ப்பனர் களைப் பாதுகாப்பது தான்' என்று அன்றைக்கு ராஜ் நாராயணன் என்ற தலைவர் பேசினார். அவர் பின்னாளில் அதற்காகத் தாக்கப்பட்டார்.

**பார்ப்பனரைத் தொழுவதே இந்துத்துவம்**

32 ஆண்டுகள் ஆர்.எஸ்.எஸ்-இன் தலைவராக இருந்தவர் - அதற்கு தத்துவங்களை கொடுத்தவர் குரு கோல்வார்க்கர். இந்து பண்பாடு என்பது என்ன என்பதை அவருடைய 'பன்ச் ஆப் தாட்ஸ்' (தமிழில் 'ஞானகங்கை') என்ற புத்தகத்தில் எழுதுகிறார். "தென்னாட்டில் ஒரு ஆங்கில அதிகாரி இருந்தார்; அவருக்கு உதவி அதிகாரியாக அந்த மாநிலத்தைச் சார்ந்த ஒருவர் இருந்தார்; அவர் நாயுடு வகுப்பைச் சார்ந்தவர். அந்த ஆங்கில அதிகாரியின் பியூனாக இருந்தவர் ஒரு பிராமணர். ஒரு நாள் அந்த ஆங்கில அதிகாரி பிராமணப் பியூன் பின் தொடர வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவருடைய உதவி அதிகாரியாக இருந்த நாயுடு சமூகத்தைச் சார்ந்தவர் எதிரே வந்தார். ஆங்கில அதிகாரியுடன் கை குலுக்கினார். ஆனால் பிராமணப் பியூனைப் பார்த்தவுடன் காலை தொட்டு வணங் கினார். அதைப் பார்த்து வியப்படைந்த ஆங்கிலேய அதிகாரி 'நான் உன்னுடைய பெரிய அதிகாரி, என்னிடம் நீ கை தான் குலுக்கினாய், ஆனால் என்னுடைய பியூனின் காலைத் தொட்டு கும்பிடு கிறாயே! இது என்ன பிரச்சனை' என்று கேட்டார். அதற்கு அந்த உதவி அதிகாரி 'நீங்கள் என்னுடைய பெரிய அதிகாரியாக இருக்கலாம், ஆனால் நீங்கள் ஒரு மிலேச்சர்; அவர் ஒரு பியூனாக இருக்கலாம், ஆனால் அவர் நாங்கள் வணங்கும் பிராமண சமூகத்தைச் சார்ந்தவர். அவரை தொழ வேண் டியது எனது கடமை' என்று பதில் சொன்னார். இதுதான் இந்து தர்மம்". (கோல்வார்க்கர் எழுதிய புத்தகத்தின் 138,139 ஆம் பக்கங்களில் உள்ளவை)

ஆக இந்துத்துவம் - இந்து தர்மம் என்பதெல்லாம் பார்ப்பானைப் பார்த்தால் காலைத் தொட்டு கும்பிடுங்கள் என்று சொல்கிறார். இப்பொழுது மோடியை என்னவென்று சொல்கிறார்கள் என்றால், இவர் உழைக்கும் மக்களைச் சார்ந்தவர்- மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் - எனவே இவரை ஆதரிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். நீ சொன்ன இந்து தர்மத்தின்படி அவர் என்ன செய்வார்? பிரதமராகவே வந்தாலும்கூட பார்ப்பன பியூன் வந்தால் காலைத் தொட்டு கும்பிட்டு கொண்டு இருப்பார்; அவர் சொல்வதைத்தான் கேட்டுக் கொண்டிருப்பார்.

மோடியை ஒரு மாயாஜால வித்தைக்காரரைப் போல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மோடி என்றாலே வித்தை காட்டுபவன் தானே. கேதார்நாத்திலே பெரும் மழை பெய்து, பெரும் வெள்ளம் வந்தது. அங்கு தீவின் நடுவிலே சிக்கிக் கொண்ட மக்களை காப்பாற்றுவதற்கு இராணுவம் பெரும் முயற்சி செய்தது. அதில் வானூர்திகள்கூட சேதமடைந்தன. இராணுவ வீரர்கள் இறந்தார்கள், அப்போது ஒரு நாள் வெள்ளிக்கிழமை திடீரென மோடி அங்கு போனார். பதினைந்தாயிரம் குஜராத்திகளை 80 இனோவா காரின் மூலம் பத்திரமாக அடுத்த ஒரே நாளில் கொண்டு வந்து சேர்த்தாராம். கேதார்நாத்தில் இருந்து டேராடூனுக்கு உள்ள தூரம் 221 கிலோமீட்டர் ஆகும். ஒரு இனோவா வில் அதிகபட்சம் 10 பேர் ஏற்றுவதாக வைத்துக் கொண்டாலும், 80 இனோவா என்றால் 20 முறை போய் வந்திருக்க வேண்டும், ஒரு முறை போய் வருவதற்கு பத்து பன்னிரண்டு மணி நேரம் ஆகும். ஆக வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டியிருந்தாலும்கூட 10 நாட்களாவது ஆகுமே, அதுவும் தீவில் நிற்பவர்களில் குஜராத்திகளை மட்டும் கண்டுபிடித்து ஒரே நாளில் எப்படி கொண்டுவந்தாய் என்று யாரும் கேள்வி கேட்கவில்லை; அவர்கள் சொல்வதை அப்படியே நம்புகிறார்கள்.

எல்லோரும் தேர்தல் அறிக்கையை தேர்தலுக்கு முன் சொல்லிவிடுவார்கள். ஆனால் இவர்கள் ஒரு கட்ட தேர்தல் முடிந்த பின்பு தான் தேர்தல் அறிக்கையே வெளியிட்டிருக்கிறார்கள். நமது கொள்கைகளை வெளிப்படையாக பேசாதே என்று ஒரு குழுவும், சொல்லித் தான் ஆகவேண்டும் என்று ஒரு குழுவும் விவாதித்ததே அதற்குக் காரணம். இறுதியாக அதில் இந்துத்துவ வெறியர்கள் தான் வெற்றிப் பெற்றனர். அந்த அறிக்கையில் இராமர் கோவிலை கட்டுவது என்று சொல்லுகிறார்கள்.

இராம இராஜ்யம் என்று சொல்லிக்கொண்டே வருகிறார்கள். இராமர் ஆட்சிக்கு வந்து எதை செய்தார் என்பதை, இராமாயணத்தில் விளக்கப்படு வதை நாம் பார்க்க வேண்டும். இராமன் ஆட்சிக்கு வந்து, அவையில் அமர்ந்திருக்கும் போது, ஒரு கிழட்டு பார்ப்பனன் (கிழட்டுப் பார்ப்பனன் என்று தான் எழுதப்பட்டிருக்கிறது) இறந்து போன தனது இளம் குழந்தையை கொண்டு வந்து போட்டான் (கிழட்டு பார்ப்பானுக்கு எப்படி இளம் குழந்தை? என்று கேட்கக் கூடாது) 'எனக்கு கொள்ளிப் போட வேண்டியவனுக்கு நான் கொள்ளி போடும்படி ஆகி விட்டது; இராமா உன் நாட்டில் தர்மம் கெட்டு விட்டது, அதனால் என் மகன் இறந்துவிட்டான்' என்று முறையிடுகிறான்.

உடனே நமது முதல்வரைப் போல தனது ஹெலிகாப்டரான புஷ்பக விமானம் ஏறி கடவுளை நேரில் காண்பதற்காக தவமிருந்து கொண்டிருக்கும் சம்பூகன் என்பவனைக் கண்டுபிடிக்கிறான். அவனைப் பார்த்து, 'நீ எந்த வர்ணத்தைச் சார்ந்தவன்' என்று இராமன் கேட்கிறான். தான் சூத்திர வர்ணத்தைச் சார்ந்தவன் என்று சம்பூகன் பதிலளிக்கிறான். இந்து மதத்தின் படி சூத்திரன் நேரடியாக கடவுளை வணங்கக் கூடாது; பார்ப்பனர்கள் மூலமாகத் தான் கடவுளிடம் கோரிக்கை வைக்க வேண்டும். எனவே நீ தர்மத்தை மீறி விட்டாய் என்று சம்பூகனின் கழுத்தை வெட்டுகிறான் இராமன். உடனே தேவர்களெல்லாம் பூ மாரி பொழிகிறபோது, என்ன வரம் வேண்டும் என்று மேலிருந்து கடவுள் கேட்கிறார்; இறந்து போன பார்ப்பான் பிழைத்துக்கொண்டால் போதும் என்று இராமன் சொல்கிறான். எந்த கணத்தில் நீ அவனது கழுத்தை வெட்டினாயோ, அந்த கணத்தில் அவன் உயிர் பிழைத்து விட்டான் என்று சொல்வதாக இராமாயணம் கூறுகிறது.

ஆக தமிழன் (சூத்திரன்) ஒருவனை வெட்டிய நேரத்தில், பார்ப்பான் பிழைத்துக்கொண்டான். அவன் இப்படிப்பட்ட இராமருக்கு கோவில் கட்டு வதைத் தான் முதல் நிகழ்ச்சியாக வைத்திருக்கிறான். 12½ இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு இங்கு தான் இராமன் பிறந்தான் என்று சொல்லி வருகிறார்கள். ஆனால் புத்தர் பிறந்ததாகக் கூறப்படும் லும்பினி என்ற ஊரில் புத்தர் இறந்து 120 ஆண்டுகள் கழித்து வைக்கப் பட்டுள்ள கல்வெட்டில்கூட இந்த ஊரில் புத்தர் பிறந்தார் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது தமிழ்நாட்டில்கூட போர்டு கம்பெனி, ஹோண்டாய் கம்பெனி வந்து விட்டது என்று பெருமையாக பேசிக்கொண்டார்கள்; மூன்று ஆயிரம் பேர் வேலை செய்த ஸ்டேண்டர்டு கம்பெனியை மூடிவிட்டு, முன்னூறு பேர் வேலை செய்யும் போர்டு கம்பெனி வந்து என்ன நன்மை? இந்த நிறுவனங்களின் கார்கள் எல்லாம் வெளிநாட்டிற்குத் தான் போகின்றன. அந்த நாட்டுக்காரன் தங்களது சுற்றுச் சூழல் கெடாமல், தங்களின் மண் வளம் கெடாமல், தங்களின் தண்ணீரை வீணாக்காமல் மின்சார உற்பத்தி தேவையில்லாமல் உற்பத்தி செய்து அனுப்பப்படும் கார்களை சொகுசாகப் பயன்படுத்திக் கொள்கிறான். அதைப் போல இராமர் கோவிலைக் கட்டி நமக்கு என்ன நன்மை?

அடுத்து இட ஒதுக்கீடு தொடர்பானது, 2009 தேர்தல் அறிக்கையில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு தொடரும்; அதே வேளையில் பொருளாதாரத்தில் பின்தங்கியிருப்பவர் களுக்கு இட ஒதுக்கீடு செய்வோம் என்று சொன்னார்கள். இந்த தேர்தல் அறிக்கையில் ஒரு சமத்துவ சமுதாயம் உருவாவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் நூறு மாவட்டங்களை தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டங்களில் கல்வியை, சுகாதாரத்தை, வாழ்வியல் நிலையை உயர்த்துவதற்கு நாங்கள் வேலை செய்வோம் என்பது தான் அதன் பொருள் என்று நிர்மலா சீத்தாராமன் என்ற தமிழ்நாட்டு பார்ப்பனப் பெண் அதற்கு டெல்லியிலிருந்து விளக்கமளிக்கிறார். இட ஒதுக்கீடு தொடருமா? இல்லையா? என்பது பற்றி எந்த விளக்கமுமில்லை.

பி.ஜே.பி.யினர் தமிழகத்தில் இரண்டு கலவரங் களை செய்தார்கள். மண்டைகாட்டில் கலவரம் செய்து கன்னியாகுமரியை பிடிக்க முடிந்தது. கோவையில் கலவரம் செய்து சிறு செல்வாக்கைப் பெற்றார்கள். வேறு இடத்தில் கலவரம் செய்ய ஆட்கள் இல்லை எனவே தமிழகத்தில் காலூன்ற

(4 ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...!

+ மத்திய ரயில்வே துறை இணை அமைச்சர், தான் போட்டியிடும் கர்நாடக-கோலார் தொகுதியில் வாக்குப் பதிவு எந்திரத்தை வாஸ்து சாஸ்திரப்படி திருப்பி வைத்து வாக்களித்தார். **– செய்தி**

தண்டவாளத்தில் ஓடும் ரயில் என்ஜினையும் வாஸ்துப்படி திருப்பி விடாதீங்கய்யா....

+ மத்தியில் ஆட்சிக்கு வந்தால் காங்கிரஸ் அமைச்சரவையில் தி.மு.க.வை சேர்க்க மாட்டோம். **– ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன்**

தேர்தலை சந்திக்காமலேயே அமைச்சரவை அமைக்க புதுசா ஏதோ வழி கண்டுபிடிச்சிருக்கார் போலிருக்கு.

+ சாதாரண மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கார்த்தி சிதம்பரத்துக்கு வாக்களியுங்கள். **– ப. சிதம்பரம்**

'கார்ப்பரேட்' கம்பெனி தேவைகளை நான் பூர்த்தி செய்துவிட்டேன்; இனி எனது மகன், சாதாரண மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வந்திருக்கிறார்.

+ காங்கிரஸ் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்களை திருடிவிட்டது பா.ஜ.க. **– மத்திய அமைச்சர் ஆனந்த் வர்மா**

புரியுது; எங்களுக்கு ஒரே கொள்கைதான்னு சொல்ல வர்றீங்க. அதை ஏன் இவ்வளவு ஆத்திரத்தோடு சொல்றீங்க?

+ இந்தத் தேர்தலில் வாக்களிக்காதவர்களை அடுத்த தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்காமல் தண்டிக்க வேண்டும். **– அத்வானி**

ஆமாம்! வாக்களிக்காதவர்களை தேர்தல் ஆணையம் தண்டிக்கட்டும். வாக்களித்த அப்பாவிகளை ஆட்சிக்கு வந்தவர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

+ 'மிருகவதை கூடாது' என்ற கொள்கைக்காக 'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் அசைவ உணவு சாப்பிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. **– நிர்வாகம் அறிவிப்பு**

நல்ல கொள்கைதான். மாடுகளிடமிருந்து கறக்கப்படும் பால், அதிலிருந்து எடுக்கப்படும் தயிர், மிருகத்தின் தோலிலான காலில் போடும் செருப்பு - இதற்கெல்லாம் அனுமதி உண்டா சார்?

+ (பதவி ஓய்வு பெறும்) ஏப்.25ஆம் தேதிக்குள் சாந்தன், பேரறிவாளன், முருகன் விடுதலை குறித்து தீர்ப்பு வழங்கப்படும் என்று உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி கூறியிருப்பது அரசியல் ரீதியான விளைவுகளை ஏற்படுத்துமோ என்ற அச்சம் உருவாகியிருக்கிறது. **– கலைஞர் பேச்சு**

இதேபோலத்தான் டி.எம்.செல்வகணபதி ஊழல் செய்தது உண்மை என்று, சி.பி.ஐ. நீதிமன்றம் தேர்தல் காலம் என்றுகூட பார்க்காம அச்சத்தை ஏற்படுத்தி தண்டனை வழங்கியிருக்கு! இப்படி எல்லாம் நீதிமன்றம் எல்லை மீறுவதை சகிக்க முடியாது. விடாதீங்க; நல்லா அடிச்சுப் பேசுங்க, தலைவரே!

DATE OF PUBLICATION 23.04.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மத நம்பிக்கை வேறு; மதவாதம் வேறு

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத பி.ஜே.பி யினர் மீண்டும் தமிழகத்திற்குள் வந்திருக்கிறார்கள். ஏற்கனவே தி.மு.க.-அ.தி.மு.க தோள்மீது ஏறி வந்த இவர்கள் இப்போது புது அடிமைகளைப் பிடித்துக் கொண்டார்கள். இராமாயணத்தில் வானரக் கூட்டத்தை வைத்து தான் இராமன் வெற்றி பெற்றான் அது போல தற்போது ஒரு வானரக் கூட்டத்தை பிடித்துள் ளார்கள். இவர்கள் மோடி என்ற ஒரு மனிதரை முன்னிறுத்துகிறார்கள். மோடி குஜராத்தையே சொர்க்க பூமியாக மாற்றிவிட்டார் என்றும், ஊழலே செய்யாத நேர்மையான நிர்வாகத்தை கொடுக்கக் கூடியவர் என்றும், இந்த இரண்டு விசயங் களுக்காகத் தான் தாங்கள் மோடியை ஆதரிப்பதாகவும் இவர்கள் சொல்கிறார்கள்.

'வைப்ரண்ட்' குஜராத் என்று நடத்தி, எங்களுக்கு அன்னிய முதலீடு 450 பில்லியன் டாலர் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். இந்த 2010-2011 ஆண்டில் இந்தியாவிற்கே 30.38 பில்லியன் அன்னிய முதலீடு தான் வந்திருக்கிறது என்று ரிசர்வ் வங்கி சொல்கிறது. ஆனால் பொய்யான தகவல்களை சொல்லி வளர்ச்சிப் பெற்ற மாநிலம் என்று நம்மை ஏமாற்றுகிறார்கள்.

(கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தமிழகத்தைவிட குஜராத் பின்னோக்கி இருப்பதன் புள்ளி விபரங்கள் பற்றி விளக்கமளித்தார்)

ஊழல் அற்ற நிர்வாகம் என்று சொல்கிறார்கள், ஊழல் செய்த மூன்று பேர் அங்கு அமைச்சராக இருக்கிறார்கள். சுரங்க ஊழல் வழக்கில் மூன்றாண்டு தண்டனை பெற்ற பாபு பொக்காரியா மேல் முறையீடு செய்து, பிணையில் வந்து அமைச்சராக இருக்கிறார். அதுபோலவே மீன்வள ஊழலில் தண்டனை பெற்ற புருசோத்தம் சோலங்கி மேல்முறையீட்டுப் பிணையில் வந்து அமைச்சராக இருக்கிறார். குஜராத்தில் பெட்ரோலிய, எரிவாயு ஆலைகள் அமைத்துத் தொழில் நடத்தும் அம்பானிகளுக்கு சாதகமாக அவர்களின் சகோதரியின் கணவராகிய சவுராவ் பட்டேல் என்பவரை எரிவாயு, பெட்ரோலியம், எரிசக்தித் துறை அமைச்சராக நியமித்துள்ளவர்தான் இந்த நேர்மையின் சின்னமாகக் காட்டப்படும் மோடி ஆவார். இந்திய மருத்துவ கவுன்சிலின் தலைவராக இருந்த கேதன் தேசாய் வீட்டில் 1500 கோடி ரூபாய் பணமாக வைத்திருந்தார்; 250 டன் தங்கம் வைத்திருந்தார் என்ற செய்தி எல்லோர் மனதிலும் இன்றும் உள்ள ஒன்றாகும். இதற்காக பதவியில் இருந்து நீக்கப்பட்டார். வழக்கு நடந்துக் கொண்டிருக்கிறது, ஆனால் தற்போது குஜராத் பல்கலைக் கழகம் வழியாக மருத்துவ கவுன்சிலுக்கு அவரைத் தான் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளார் மோடி. அந்த மாநிலத்தில் ஊழல் ஒழிப்புக் கண்காணிப்பு நீதிமன்றங்கள் ஒன்பது ஆண்டுகளாக இல்லவே இல்லை. இவர் பன்னிரண்டு ஆண்டுகளாக பதவியில் இருக்கிறார். இப்போது தான் ஆளுநரே நியமித்திருக்கிறார்; அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில், உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தவர் மோடி. தகவல் அறியும் உரிமை சட்டத்தில், தகவல்கள் வழங்குவதற்கு அங்கு ஆணையர்களே இல்லை. உச்ச நீதிமன்றம் சொன்ன பிறகு இரண்டு பேரை போட்டுள்ளார்கள். ஒருவர் ஓய்வு பெற்று விட்டார்; இப்போது ஒருவர் தான் இருக்கிறார். (சிறிய மாநிலமான கோவாவில் கூட நான்கு பேர் இருக்கிறார்கள்)

அதானி என்ற ஒரு முதலாளி தற்போது இரண்டு இலட்சத்தி எழுபதாயிரம் ஏக்கர் நிலம் வைத்திருக்கிறான்; இவனுக்கு சதுரமீட்டர் நிலம் ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. அதில் 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அரசுதான் வழங்கியிருக்கிறது. அவன் சுற்றுச்சூழல் அனுமதி வாங்காமலேயே முந்திரா என்ற துறைமுகத்தை அமைத்து நடத்தி வருகிறான். மேற்கு வங்கத்தில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட டாடா, இங்கு வந்து 2900 கோடி ரூபாய் போட்டு ஒரு ஆலை கட்டியிருக்கிறான். இதற்கு 9700 கோடி அரசு கடன் வழங்கியுள்ளது; இதற்கான வட்டி ஆண்டுக்கு பத்து பைசா மட்டுமே. இப்படிப்பட்ட பெரும் முதலாளிகள் மேலும் மேலும் உயர செய்திருக்கிறாரே தவிர, உழைக்கும் மக்கள், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் அரசாக இல்லை. பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. நகரத்தில் இருக்கும் இரண்டரை இலட்சம் வீடுகள் உட்பட 11 இலட்சம் வீடுகளுக்கு மின்சார இணைப்பே இல்லை. இப்படிப்பட்டவர்தான் நாட்டை வளமையாக்கப் போகிறார், செழுமையாக்கப் போகிறார் என்று சொல்கிறார்கள்.

நாடு வளமையாக செழுமையாக ஆவது இருக்கட்டும்; நாம் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழமுடியாத சூழல் இந்த மத வெறியர்கள் வந்தால் ஆகிவிடும் என்பது தான் நமது கவலை.

மத நம்பிக்கை என்பது எனக்கு நம்பிக்கையுள்ள எனக்கு விருப்பமான கடவுளை வணங்குவது; மதவாதம் என்பது என்னுடைய கடவுளைத் தான் அனைவரும் வணங்க வேண்டும் என்பது. அதைத் தான் பி.ஜே.பி சொல்லிக் கொண்டிருக்கிறது. இஸ்லாமியர்களும், கிருஸ்துவர்களும் இந்த நாட்டில் வாழலாம், இராமனை கடவுளாக ஏற்றுக் கொண்ட பின்னால். சமஸ்கிருதத்தை மொழியாக ஏற்றுக் கொண்டு, வேத கணிதத்தை பாடத்தில் ஏற்றுக்கொண்டு, இந்துமதக் கடவுளை மட்டும் தன் கடவுளாக ஏற்றுக் கொண்டு வாழ்பவர்கள் மட்டும் தான் இங்கு வாழமுடியும் என்ற மறைமுகத் திட்டத்தோடு இருக்கின்ற இந்த பி.ஜே.பி வந்து விடவே கூடாது என்பது தான் எங்கள் நோக்கம்.

சமத்துவத்தில் நம்பிக்கை கொண்ட நாம், சமூக நீதியில் நம்பிக்கை கொண்ட நாம், இவற்றிற்கு எதிரான ஆர்.எஸ்.எஸ் ஆல் வழிநடத்தப்படுகின்ற மத வெறியரான மோடியை பிரதமராக்குவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பது தான் நமது நிலைப்பாடு.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

## ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞர் பிறந்த நாள்

# "நாடு நமக்கென்று வாங்குவீர்!"



மத – ஓடத்திலேறிய மாந்தரே – பலி
பீடத்திலே சாய்ந்தீரே!

பாடு பட்டீர்கள் பருக்கையில்லா தொரு
பட்டியில் மாடென வாழ்கின்றீர் – மதக்
கேடர்கள் காலினில் வீழ்கின்றீர் – ஒண்ட
வீடு மில்லாமலே தாழ்கின்றீர்! (மத)

பாதிக்குதே பசி என்றுரைத்தால், செய்த
பாபத்தைக் காரணம் காட்டுவார் – மத
வாதத்தை உம்மிடம் நீட்டுவார் – பதில்
ஓதி நின்றால் படை கூட்டுவார். (மத)

வாதனை சொல்லி வணங்கி நின்றால் தெய்வ
சோதனை என்றவர் சொல்லுவார் – பணச்
சாதனையால் உம்மை வெல்லுவார் – கெட்ட
போதனையால் தினம் கொல்லுவார். (மத)

பேதிக்கும் நோய்க்கும் பெரும் பசிக்கும் பல
பீதிக்கும் வாய் திறப்பீர்களோ! – இழி
சாதியென்றால் எதிர்ப்பீர்களோ? – செல்வர்
வீதியைத் தான் மதிப்பீர்களோ? (மத)

கூடித் தவிர்க்கும் குழந்தை மனைவியர்
கூழை நினைத்திடும் போதிலே – கோயில்
வேடிக்கை யாம் தெரு மீதிலே – செல்வர்
வாடிக்கை ஏற்பீரோ காதிலே! (மத)

தொட்டிடும் வேலை தொடங்கலு மின்றியே
தொந்தி சுமக்கும் புரோகிதர் – இட்ட
சட்டப்படிக்கு நீரோ பதர் – அவர்
அட்டகாசத்தினுக் கேதெதிர்? (மத)

மூடத்தனத்தை முடுக்கும் மதத்தை நிர்
மூலப் படுத்தக்கை ஓங்குவீர் – பலி
பீடத்தை விட்டினி நீங்குவீர் – செல்வ
நாடு நமக்கென்று வாங்குவீர். (மத)

## காஞ்சி மக்கள் மன்றம் நடத்திய பேரணி—பொதுக் கூட்டம்

புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளான 14-04-2014 திங்கட்கிழமை அன்று மாலை 6-00 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்டம் சங்கரமடம் எதிரில், தேர்தல்-2014: இது யாருக்கான தேர்தல்? மக்களுக்கான தேர்தலா? பெரும் முதலாளிகளுக்கான தேர்தலா? என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முன்னதாக காஞ்சிபுரம் அரசு பொது மருத்துவமனை அருகில் இருந்து பறை முழக்கங்களுடனும், ஒலி முழக்கங்களுடனும் பேரணி நடைபெற்றது. காஞ்சி மக்கள் மன்றம் சார்பாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் பொதுக்கூட்டத்தில், கலை நிகழ்ச்சிகள், பாடல்கள், நாடகங்களுக்கு இடையிடையே, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திரைப்பட இயக்குநர்கள் பாலாஜி, சக்திவேல், மு.களஞ்சியம் முதலானோர் உரையாற்றினார்கள்.

## தாதுமணல் கொள்ளை : நூல் வெளியீடு

19-04-2014 அன்று காலை சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில், முகிலன் எழுதிய "தாது மணல் கொள்ளை" என்கிற நூலின் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. பூவுலகின் நண்பர்கள் ஏற்பாடு செய்து இருந்த இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியவர்கள், தமிழகத்தின் வளங்கள் எப்படி அரசியல்வாதிகளாலும், அதிகாரிகளாலும் கொள்ளை போகிறது என்பதை பகிர்ந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மேட்டூர், கடலூர் போன்ற பகுதிகளில் நடத்திய இயற்கை வள பாதுகாப்பு போராட்டங்களில் சிபிஎம் கட்சியினரும், பசுமைத் தாயகம் கட்சியினரும் செய்த துரோகங்களை பட்டியலிட்டார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 24th April 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN